# கானல் வரியா ?

# கண்ணீர் வரியா ?

## கானல் வரிக்கு ஒரு கைவிளக்கு

''ஆராய்ச்சி என்பது ஒரு கைவிளக்கு; போகப் போகத்தான் அது வழி காட்டிக்கொண்டே செல்லும். முதலிலேயே அனைத்தும் புலப் பட்டுவிடாது'' என்பர் ஆய்வுத் துறையினர். பாவலர் மணி ஆ. பழனி அவர்கள், 'கானல் வரி' எனச் சிலம்பில் வரும் கருத்துச் சுரங்கத் திற்கு, இந்நூலை அத்தகையதொரு கைவிளக்காகப் படைத்துள்ளார். படிப்படியான விவாதப்போக்கில் அமைந்துள்ள இவ் ஆய்வுரை, இது வரை புலனாகாதிருந்த பல உண்மைகளைப் புலப்படுத்த முயல்கிறது. வயந்தமாலையிடமும் கோவலன் கொள்ளத் தொடங்கிய வரம்புமீறிய காமமே கானல்வரிப் பாடல்களின் படிம உள்ளீடாக வெளிப்படுகிறது என்பதும், கோவலன் மாதவியிடம் திரும்பிவாராத பெரும் பிரிவுக்கு, கானல்வரி முடிந்ததும் 'பொழுதீங்குக் கழிந்தது' எனக் கோவலன் கூறிய போது, மாதவி உடன் எழாமையே காரணம் என்பதும் தெளிவுற, மனங் கொள்ளுமாறு இதில் விளக்கப்பட்டுள்ளன; பிற பல நுட்பமான கருத்துக்களும் இடம் பெறுகின்றன.

கோவலனின் நேர் பக்கத்தை வெளிப்படையாகக் காட்டும் இளங் கோவடிகள் அவனுடைய மறுபக்கத்தைக் குறிப்பாகத்தான் புலப்படுத்து கிறார். அதிலும் கோவலன் வயந்தமாலை தொடர்பை மிகக்குறிப்பாக உணர்த்துகிறார். இங்ஙனம் தீமையைக் குறிப்பாலுணர்த்தும் முறை பழந்தமிழிலக்கியக் கோட்பாடுகளில் ஒன்றே. எனினும் சிலம்பில் அதன்வழி இளங்கோவடிகளின் நுட்பமான படைப்புத்திறத்தை அறிந்து கொள்ள முடிகிறது. திறமைமிக்க ஆங்கில இலக்கிய அறிஞர்கட்கோ மேனாட்டாருக்கோ இப் படிமப் படைப்புத்திறன் (Symbolism) நன்கு உணர்த்தப்படுமாயின் இளங்கோவடிகள் எத்தகைய உலகப் பெருங் கவிஞர் என்பது குன்றின் மேலிட்ட விளக்காகத் தெரியும். மறைமுக மாகவும் இலைமறை காயாகவும் உணர்த்த அடிகள் மேற்கொள்ளும் நனிநாகரிகத் திறன்களே இயல்பான படிமங்களாக உருப்பெறுகின்றன. ஆம். கானல்வரி உள்ளீட்டை உள்ளவாறுணர்ந்து படிக்கும் பொழுது இளங்கோவடிகளின் படைப்புத் திறத்தை எண்ணி நம் கண்கள் பனிக் கின்றன; கைகள் கூப்புகின்றன; உடல் புல்லரிக்கின்றது! நாம் அம் மரபிலே வந்த தமிழ்ப் புலவர்களா? தமிழர்களா? நம்ப முடியவில்லையே. ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயன் விளங்கிக்கொண்டு

உலகிற்குணர்த்திய அளவு, காளிதாசனைக் கற்றிந்து வடமொழிஅறிஞர் புவிக்கெலாம் எடுத்தோதிப் புகழுறச்செய்த அளவு, நாம் இளங்கோவடிகளைக் கற்றோமும் இல்லை; வெளியுலகிற்கு உணர்த்தியதுமில்லை. அரைத்த மாவை அரைத்ததன்றி, புதுமை என எதனையும் பொலிவுறச் செய்தோமில்லை. ''சங்க இலக்கியம், சிலம்பு எல்லாம் ஆராய்ச்சி செய்து முடிந்துவிட்டன'' - இவ்வாறு பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் முழக்கமிடுகிறார்கள். இந்நூல்களுள் ஒரு தொடருக்கேனும் மரபுவழிப் பொருளுணர மாட்டாத இவர்கள், இதுவும் கூறுவர்; இதன் மேலும் கூறுவர். இவர்கள் பேச்சினைப் பற்றிக் கேட்குந்தொறும் அருவருப்பாயிருக்கிறது. என் செய்வது?

பாவலர்மணி பழநி அவர்கள் ஆராய்ந்து புதுவதாகக் கூறவேண்டும் என்று வலிந்து எதையும் கூறவில்லை. இந்நூலைப் படிக்குங்கால் மேலும் மேலும் சிலப்பதிகாரத்தைக் கற்கவேண்டும் என்றும், இளங்கோவடிகளின் படைப்பாற்றலைக் கண்டுகண்டு மகிழ வேண்டுமென்றும், அவ்வாற்றால் தமிழனின் இலக்கிய நுகர்வும் ஆற்றலும் வளர வேண்டுமென்றும் விழைவேற்படுகிறது.

### காவிரி கங்கை கன்னி

காவிரி தன் கணவனாம் சோழப் பெருவேந்தன் கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிவாள்... அவ் ஒன்று போதாதோ? மேலும் 'கன்னி'யாம் குமரியைக் கூடினாலும் புலக்கமாட்டாள்... பட்டியல் நீள்வதேன்? மன்னும் மாதர் பெருங்கற்புக்கு அடையாளம், கொண்டவன் ஒன்று இரண்டு என மனைவிமார்களைக் கூட்டிக் கொண்டே போவதைக் கண்டும் காணாமல் இருப்பதுதானா? இதுகாறும் கோவலன் கண்ணகி நினைவுவரப் பெற்று இவ்வாறு பாடியதாகவும் அவள்போல் மாதவியும் இருக்கவேண்டும் என அறிவுறுத்தியதாகவுமே பொருள் கொண்டு விளக்கி வந்துள்ளனர். பாவலர் மணி இங்கு, கண்ணகி நினைவு இன்னும் கோவலனுக்கு வரவே இல்லை எனவும், அவனுக்குப் புதுவதாக ஏற்பட்ட வயந்தமாலை தொடர்பை ஏற்குமாறு அவன் வற்புறுத்தி ஊடுவனவும், அதைச் சற்றும் ஏற்க விரும்பாத மாதவி சிறிதும் மனந்திருந்தாத கோவலன் முகக்குறிப்பைக் கண்டு கண்ணீர் உகுப்பனவே அவள்தன் கானல்வரிகளெனவும் மிகத்திறம்பட எடுத்துரைக்கிறார்.

இதற்கு அவர் காட்டும் சான்றுகள் ஆணித்தரமாகவுள்ளன. 'நயந்த காதலின் நல்குவன் இவன்' என வயந்தமாலை வடிவில் வனசாரிணி வருவதேன்? 'நயந்த காதல்' என இறந்த காலத்தில் கூறுவதில் ஏதோ அடிப்படை இருக்கிறது. இந்திரவிழா இறுதியில் கடற்கரையில் 'வருந்துபு நின்ற வயந்தமாலை' கையிலிருந்து மாதவி யாழை வாங்கியதாகச் சுட்டுவதேன்? வயந்தமாலை வருந்தி நின்றதற்கு அரும்பத உரையாசிரியர் கூறியிருப்பது போல் 'வழிவந்ததனால் ஏற்பட்ட வருத்தம்' காரணமாக இருக்கவியலாது.



மாதவி வயந்தமாலை மூலமே தன் முடங்கலைக் கொடுத்தனுப்புகிறாள். கோவலன் அதைக் கையில் வாங்காமலே மறுத்ததுடன், எண் வகை வரிக்கூத்தை இதுகாறும் அவள் ஆடியதாகப் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவுகூர்கிறான். கோவலனின் வசைப்பாட்டை வரிக்கூத்துகளாக்கிய இளங்கோவடிகளின் இலக்கியத்திறம் தனி நூலாய்வுக்கும் உட்படலாம் போலும்! அவ்வளவு செய்திகள் பொதிந்து கிடப்பதைப் பாவலர் மணி மணிமணியாக எடுத்துக் காட்டுகிறார். வனசாரிணி கூற்றிலிருந்து மேலும் ஓர் உண்மை தெரிகிறது. கோவலன் மாதவி முடங்கலை மறுத்தபோது, வயந்தமாலை ஏதேதோ பேசிக் குழப்பியிருக்கிறாள். மாதவி கூறியதாக வனசாரிணி குறிப்பிடுவது இது; 'வாசமாலையின் எழுதிய மாற்றம் தீதிலேன்; பிழைமொழி செப்பினை: ஆதலின் கோவலன் செய்தான் கொடுமை'' என் கடிதமாகிய வாசமாலையிலெழுதிய மாற்றத்தில் குற்றம் ஏதும் செய்திலேன். வயந்தமாலை வாய்மொழியால் வந்ததே வினை'' என அவள் குறிப்பது ஆழ்ந்து கருதத்தக்கது. மேலும் மாதவி முத்துமாலையை அறுத்தெறிந்து, கோபமிக்கு வயந்த மாலையை விரட்டிவிட்டாளாம்! 'துனியுற்று என்னையும் துறந்தனள்.' ஏன்?

வயந்தமாலையிடமும், மேலும் பரத்தையர் கூட்டத்திலும் கோவலனுக்கு மையல் இருந்ததாக முன்பும் ஒருசிலர் சுட்டிச் சென்றுள்ளனர் என்றாலும் சான்றாதாரங்களுடனும் காரண காரியத்துடனும் பாவலர்மணி விளக்கும் திறம் அவரது சிறந்த கொடையாகும். இவ்வுண்மை கானல்வரி உள்ளீடுபற்றி அவர் தரும் விளக்கவுரைகளால் உறுதிப்படுகிறது.

### கானல்வரிப் பாடல்களின் படிமப் பொருள்

கோவலனும் மாதவியும் பாடும் கானல்வரிப் பாடல்கள் முழுவதும் இவ்வயந்தமாலை 'விவகாரமே' குறியீட்டுச் செய்தியாகக் குவிந்து கிடக்கிறது. ஆற்றுவரி, சார்த்து வரி, முகமில்வரி, கானல்வரி, என வரும் வரிப் பாடல்களில், அவற்றிற்கே இயல்பான அகத்துறைகளைப் பாடும் மரபும், பொங்கி வெளிப்படும் தம் உள்ளக் கிடக்கைகளைப் புலம்பாமல் புலம்பிப் படிமமாக, குறியீடாக, உள்பொருளாக வெளிப்படுத்தும் பாங்கும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. குறியீட்டுப் பொருள்களை அவரவர் தத்தமக்கு ஏற்ப அனுமானிக்கக் கூடுமன்றோ? கோவலனும் மாதவியுமே சரியாகத்தான் ஒருவர் கருத்தை ஒருவர் விளங்கிக் கொண்டனரோ? தவறாக உணர்ந்தனரோ? அறியோம். இங்கும் பாவலர்மணி கூறுகின்ற அனைத்தையும் ஏற்பதா, சிற்சில வேறுபடுவதா, மறுப்பதா என்பனவும் சிந்தனைக்குரியனவாகின்றன. எங்ஙனமாயினும் வயந்தமாலை பற்றிய மனவேறுபாடே கிடந்து கொந்தளிக்கிறது என்ற பாவலர்மணி கருத்தை மறுக்குமாறில்லை.

### ஒரு சிந்தனை

கடலோதம், குருகு, மாலை இவற்றை மாதவி பாடும்போது, வயந்தமாலையைத்தான் குறியீடாக உணர்த்துகிறாள் எனக் குறிப்பிடும் ஆய்வாளர், 'அலை' பற்றிய பாடல்களில் கோவலன் சுட்டப்படுவதாக குறிப்பிடுகிறார். முதலில் கடலோதம் பற்றிய பாட்டு வருகிறது.

புள்ளியல்மான் தேர்ஆழி போன வழியெல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்றென் செய்கோ?

தலைவன் போன தேர்த்தடத்தைச் சிதைத்த கடலலை, வேறு யாருமில்லை வயந்தமாலைதான்!

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்தவழி சிதைய ஊர்கின்ற ஓதமே!
பூந்தண் பொழிலே! புணர்ந்தாடும் அன்னமே!
ஈர்ந்தண் துறையே இது தகாது என்னீரே!

சங்கப் பாடல்களிலும் கடல் ஓதம் - மேலெழும் அலைகள் - மகளிர் வண்டலை வந்து அழித்தோடும்; தேர்த்தடம் மாறும்படி வந்து வீசும். ஆனால் அங்குத் தலைவன் பிரிவுக்கு ஆற்றாமையோ, வரைவு வேண்டலோ தொனிக்கும். இங்கு அதே அகத்துறைதான் என்றாலும் சற்றே கூடுதலாக ஏதேதோ தொனிக்கிறது. 'இது தகாது' எனப் புலம்பும் குரலன்றோ கேட்கிறது இங்கே? இதை அடுத்து 'அலை' பற்றிய மூன்று பாடல்கள் தொடர்ந்து வருகின்றன.

நன்னித் திலத்தின் பூணணிந்து
நலஞ்சார் பவளக் கலையுடுத்து
செந்நெற் பழனக் கழனிதொறும்
திரையுலாவு கடற்சேர்ப்ப!

இவ்வாறு சேர்ப்பன் எனக் கோவலனையே சுட்டினாளாயினும் 'செந்நெல் வயலில் புகும் கடலலை' என்று அவள் சுட்டுவது வயந்த மாலையையே ஆதல் வேண்டும். எல்லை மீறும் தன்மையே சுட்டப்படுகிறது. நித்திலப் பூண் அணிதல், பவளக் கலைவயுடுத்தல், தரள நகை செய்தல், பவளவாய் மலர்தல் போல்வனவும் பெண்ணுக்குப் படிமச்சார்பு தருவனவாம். இங்ஙனமெல்லாம் எண்ணிப் பார்க்கலாமாயினும் முடிவில் மாற்றம் தோன்றவில்லை.

### பண்ணுப் பெயர்த்தபின் பாடிய பாட்டு

மாதவி குறிப்பிட்ட உச்சநிலைக்குப் பிறகு, பண்ணுப் பெயர்த்துப் பாடத் தொடங்குகிறாள். யாழிசைக்கும் போது பகை நரம்புகளில் கைவிரல் மாறிப் படக்கூடாது - 'அபசுரம்' ஆகிவிடும்! ஆனால் இப்போது இளி கிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை என்று மாதவி புலம்புகிறாள். தங்கள் மயக்கத்தாலே பகை நரம்பிலே கை சென்று தடவ'' என்று



அரும்பதவுரை கூறுகிறது. தொடத் தகாதவளைக் தொட்ட கோவலன் நிலையை நினைந்து, அதற்குக் காரணமான (வயந்த) மாலையை விளித்துப் புலம்புகிறாள்!

இளி கிளையில் கொள்ள இறுத்தாய்மன்! நீயேல்
கொளை வல்லாய்! என் ஆவி கொள் வாழி மாலை!!

இதன் இறுதிப் பாடலில்,

பையுள் நோய்கூர, பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப, வந்தாய் மருள் மாலை!
மாலைநீ ஆயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந் தது! வாழி மாலை!

ஒளி செய்ய வேண்டியவன் போய்த் தொலைந்தனன். வையகம் (அருவருத்துக்) கண்புதைக்குமாறு மயக்கும் மாலையே வந்துற்றாய்? மாலைப்பொழுதில் - மணந்தாரா? தணந்தாரா? - நேர் அகத்துறைப் பாடலாயின் பிரிந்தாரைத்தான் குறித்திருக்க வேண்டும். இங்கே மாலை வயந்த மாலையாகத்தான் படுகிறது. 'மாலையே நீயாகவும், உன்னை மணந்தவர் அவராகவுமா? ...சேச்சே - இந்த உலகமே ஒழிந்தது போ'' என்கிறாள் மாதவி. மீட்டும் மேற்கண்ட பாடலைப் பாடிப் பாருங்கள். கானல் வரி வயந்த மாலையைக் குறித்துப்பாடிய பாடலாகவே முடிகிறது. சிறிதுசிறிதாக வளர்ந்து இறுதியில் படிமமும் பொருளும் ஒருங்கிணைந்து, 'உண்மை' ஒளிவீசுவதை இவ் இறுதியடிகள் காட்டுகின்றன. உணர்ந்து படிக்கும்போது கானல்வரி கண்ணீர் வரியாகவே மாறுகிறது!

### கோவலன் பிரிவுக்கு அடிப்படைக் காரணம்

கானல்வரி பாடி முடிந்த பிறகு, மாதவி தன் பாடல்களால் கோவலனிடம் எவ்வித மன மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை என்பதை அவன் முகக்குறிப்பால் உணர்கிறாள். எனவேதான் 'பொழுதீங்குக் கழிந்தது எழுதும்' என்று கூறியபோது, தவிர்க்கிறாள். இங்ஙனம் செய்யாமல் உடன் சென்றிருந்தால், சபல புத்தியுடைய கோவலன் அடிக்கடி மாறுவதுபோல, மாறியிருப்பான். ஆனால் மாதவி உறுதியாக இருந்துவிட்டாள். அதனால் சினமுற்ற அவன் தன் இல்லம் ஏகுகிறான். கதை திரும்புகிறது. ''எழுக என எழுந்தாய்'' என அவன் கண்ணகியைப் பாராட்டுவதிலிருந்து, அவனுள் கிடந்த மனஉளைச்சலை அறியலாம்.

இளங்கோவடிகள் இத்தகைய கட்டமைப்புத் தோன்றும்படி காப்பியம் இயற்றும் ஆர்வமுடையவர். எனவேதான் மாதவியிடம் 'எழுதும் என உடன் எழாது' என்றார். கண்ணகியிடம் 'எழுக என எழுந்தாய்' எனச் சொல்லமைத்துப் பாடினார். இவை கோவலன் மாதவியை அறவே பிரிந்தற்காக அடிப்படைக் காரணத்தைக் காட்டவல்லன. இவ்வாறு பாவலர்மணி விவாதிக்கிறார்.

### நுட்பப் பகுதிகள்

போகிற போக்கில் சிற்சில நுட்பப் பகுதிகளும் இவ்ஆய்வுரையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆற்றுவரியில் கருத்துக்களை முறைமாற்றி வைத்துப் பாடுவதேன்? 'கலவியும் புலவியும்' என முதற்கண் கலவியைக் கூறுவதேன்? புலவியையல்லவா முதலிற் சுட்டியிருக்கவேண்டும்? இத் தகைய வினாக்களுக்கு விடைகாணும் அழகு சிந்தனைக்கு விருந்து. கவுந்தியடிகள் புறஞ்சேரியில் கோவலனுக்கு ''பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில் கொண்டோர் உறும் கொள்ளாத் துன்பம்'' பற்றிக் கூறியன யாவும் பொது அறவுரைகளல்ல; அவனுக்கென்றே கூறப்பட்ட அறிவுரைகள் என ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகிறார். செங்கண், கருங்கண், நெடுங்கண் பற்றி நுட்பமாக ஆராய்ந்து, இளங்கோவடிகள் கண்ணகி, மாதவியைக் குறிக்கச் சிறுசிறு நுட்ப வேறுபாடுகளுடன் இவ் அடைமொழித் தொடர்களை ஆள்வதாகத் தெளிவுபடுத்துகிறார்.

### சிலப்பதிகாரம் ஒப்பற்ற உலகக் காப்பியம்

உலகிலேயே தலை சிறந்த வேற்றுமொழிக் காப்பியங்கள் பல வற்றுடன், உடன் வைத்து எண்ணத்தக்கது.

அத்தகைய இலக்கியக் கடலை நீந்திக் கரைகாண்பது அரிய முயற்சியாகும். தம் ஆய்வுரை வழியாகப் பாவலர்மணி ஆ. பழநி மேன் மேலும் இவ்விலக்கியக் கடலுள் ஆய்வுத் தோணிகள் விட்டு மகிழுமாறு தமிழர்க்கும் அறிஞர்க்கும் அழைப்பு விடுக்கின்றார் என்றே கருதுகின் றேன். 'சிலப்பதிகாரக் கல்வி'க்கு ஒரு முன்மாதிரியாய் அமைந்து, தடம் அமைத்துக் கொடுப்பதுபோல் இந்நூல் விளங்குகிறது.

மாதவி என்ற மாதரசியின் பேரவலக் குரலால் நம் கண்ணீர் பெரு கினாலும், இளங்கோவடிகளின் காலத்தால் அழியாத அக்காதலோவி யத்தைக் காணும் பொழுது அக்கண்ணீர் இன்பக்கண்ணீராகவே வெளிப் படுகிறது. இவ் ஆய்வுரையைப் படித்து முடித்தபின், கானல்வரியை மீட்டும் படியுங்கள். யானடைந்த 'உவகைக் கலுழ்ச்சி' அனுபவம் உணர்ந்து படிக்கும் அனைவருக்கும் ஏற்படவே செய்யும்.

தமிழண்ணல்

*11-7-90*

# கானல் வரியா? கண்ணீர் வரியா?

## கானல் வரியின் நுழைவாயிலில்...

நெஞ்சையள்ளும் செஞ்சொற்காப்பியம் சிலப்பதிகாரத்தில் ஒரு கலைக் கருவூலமாக விளங்கும் பகுதி கானல்வரி. இது இசைக் கருவூல மாகவும், அகப்பொருட் சுரங்கமாகவும், உணர்ச்சிக் கடலாகவும் விளங் குவதனைக் கற்றவர்கள் நன்கறிவார்கள். ஒருபக்கம் இசைவெள்ளம் கரை புரண்டு வருகின்றது. இன்னொரு பக்கம் கண்ணீர் வெள்ளம் கரை யுடைத்து வருகின்றது. இவ்விரண்டு வெள்ளமும் சங்கமமாகும் இக் கானல்வரியைப் படிப்பவர்கள் அவலக் கடலில் மூழ்கித் திணறாமல் இருத்தல் இயலாது.

கானல்வரியின் தொடக்கம் எவ்வளவு மகிழ்ச்சியாகத் தொடங்கு கின்றது! கோவலன் முகமும் மாதவியின் முகமும் மகிழ்ச்சியை வெளிப் படுத்தவே செய்தன. மாதவி யாழை வாங்கி எக்குற்றமும் இல்லாதவாறு களைகின்றாள். 'என்ன வாசிக்க வேண்டும்' என்பதுபோல அவனை ஏறிட்டுப் பார்க்கின்றாள். கோவலன் அவளையே பாடுமாறு பணித் திருந்தால் கானல்வரி கண்ணீர் வரியாக மாறியிருக்காதோ என்னவோ? ஆனால் அவனோ யாழைத் தன் கையிலே வாங்குகின்றான். கானல்வரிப் பாடலை வாசிக்கத் தொடங்குகின்றான். இளங்கோவடிகள் இந்த இடத் தில் 'மாதவி தன் மனம்மகிழ வாசித்தல் தொடங்கும்' என்று கூறுகின்றார். உண்மையில் மாதவி கோவலன் பாடலைக் கேட்டு மகிழ்ந்தாளா? அவன்தான் அவளை மகிழ்வித்தானா? இல்லவே இல்லை என்பதுதான் விடையாகக் கிடைக்கின்றது.

மனம் மகிழ வாசிக்கத் தொடங்கியவன் அவள் மனம் மருள வாசித்தது ஏன்? தொடக்கம் ஒன்றாகவும் முடிவு வேறாகவும் மாறியதற்கு என்ன காரணம்? இளங்கோவடிகள் மிக எளிதாக 'யாழிசை மேல் வைத்து ஊழ்வினை வந்து உருத்தது' என்று கூறிவிடுவார். உண்மையில் ஊழ் வினைதான் காரணமா? வேறு காரணங்களும் உள்ளனவா?

கானல்வரிப் பாட்டின் போக்கு திசை தடுமாறிப்போனதற்கான அடிப்படை என்ன? மாதவியோடு கோவலன் ஒன்றாக அமர்ந்து எத்தனையோ முறை யாழ் மீட்டிப் பாடியிருக்கக்கூடும். அப்பொழுதெல் லாம் கோவலன் மனத்திலே எந்த மாற்றத்தையும் மாதவி காணவில்லை



போலும். ஆனால் இம்முறை 'மன்னும் ஓர் குறிப்புண்டு ; இவன் தன் நிலை மயங்கினான்' என்று மாதவி முதன் முறையாகக் கூறுவது ஏன்? இதற்குமுன் வெளிப்படுத்தாத ஒரு குறிப்பை - இதற்கு முன் வெளிப் படுத்தாத ஒரு மயக்கத்தை இன்று இவன் ஏன் வெளிப்படுத்துகிறான் என்று மாதவி தனக்குள்ளே கேட்டுக் கொள்ளுகின்றாள். மாதவி மட்டு மில்லை; நாமும்தான் கேட்கிறோம். அப்படி அவன் வெளிப்படுத்தும் குறிப்புத்தான் என்ன?

கோவலன் கானல் வரிப்பாட்டில் பல்வேறு குறிப்புக்களைப் புலப் படுத்துகின்றான். என்றாலும் ஒரோவொரு குறிப்பை இங்கு எடுத்துக் காட்டினால் போதும் என்று கருதுகிறேன். தன்னுடைய தொடக்கப் பாட லாகிய ஆற்று வரியில்,

'திங்கள்மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அது ஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற் கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி' 7: 2

என வரும் பகுதிதான் பூசலுக்குக் கால்கோள் விழா எடுத்த பகுதி. 'காவிரிக்கு உரிமையுடையவனாகிய சோழன் கங்கையைக் கூடினாலும் காவிரி புலப்பதில்லை. ஏன் புலப்பதில்லை? அதுதான் மாதரின் பெருங் கற்பு' என்று கூறப்படுகின்றது. இதில் சோழன் என்பது கோவலனையும் காவிரி என்பது கண்ணகியையும், கங்கை என்பது மாதவியையும் குறிப் பதாகக் கருதுகின்றனர். கோவலன் கண்ணகியின் பெருங்கற்பு மாண் பினை மாதவிக்கு உணர்த்திக் காட்டவேண்டும் என்பதற்காகவே இவ் வாறு பாடினான் என்றும் கருதுகின்றனர்.

இனி அடுத்த பாடல்

'மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அது ஓச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னும் மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி' 7: 3

என வருகின்றது.

காவிரிக்குரிய சோழன் குமரியைக் கூடினும் காவிரியே நீ புலவாய்;

ஏனெனில் நீ பெருங்கற்புடையை என்று கூறப்படுகின்றது. இப்பாடலும் கண்ணகியின் பெரும் கற்பு மாண்பினை மாதவிக்கு எடுத்துக்காட்டுகிறது என்று பேசப்படுகிறது. சோழன் காவிரியை விட்டுக் கங்கையைக் கூடினாலும் சரி, கன்னியைக் கூடினாலும் சரி, காவிரி புலவாள் என்பது இங்குக் கூறப்படும் செய்தி. இச்செய்தி இருக்கட்டும். கண்ணகியின் இக் கற்பு மாண்பினை மாதவிக்கு உணர்த்திக் காட்டவேண்டிய அவசியம் என்ன? கண்ணகி கற்பு மாண்பினைப் பாடவேண்டிய இன்றியமையாமை கோவலனுக்கு ஏன் வந்தது? இக்கேள்விகளுக்கு விடை காணவேண்டு மானால் கோவலன் பாடிய இப்பாடல்களால் ஏற்படும் பயன்பாட்டை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

கோவலன் மேலே காட்டிய இரண்டு பாடலையும் என்ன கருதிப் பாடி இருக்கவேண்டும்? இரண்டு காரணங்களைக் கூறலாம்.

1. இயல்பாகவே விடுதல் அறியா விருப்பம் அகல, கண்ணகியைப் பற்றிய நினைவுகள் தோன்ற, அதன் காரணமாகப் பாடியிருக்கவேண்டும்.

2. சோழன் கங்கையைப் புணர்ந்தாலும், கன்னியைப் புணர்ந் தாலும் காவிரி புலக்கமாட்டாள். காவிரியைப் போன்ற தன்மையுடை யவள் கண்ணகி என்பதை மாதவிக்கு எடுத்துக்காட்டப் பாடியிருக்க வேண்டும்.

இயல்பாகவே கோவலன் கண்ணகியின் நினைவு மீதூரப் பெற்றுப் பாடினான் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் மேல் வரும் நிகழ்ச்சிகள் இதற்கு இசைவாக இல்லை. இதுபற்றிப் பின்னர் விரி வாக எடுத்துக் கூறுவேன். அப்படி என்றால் இரண்டாவது காரணந்தான் உண்மையா?

சோழன் காவிரியை நீங்கிக் கங்கையைக் கூடியபோதும், கன்னி யைக் கூடியபோதும், காவிரி புலக்கவில்லை. கோவலன் குரல்வாய்ப் பாணரோடும், நகரப் பரத்தரோடும் திரிந்தபோதும் மாதவியைக் கூடி வாழ்ந்தபோதும் கண்ணகி புலக்கவில்லை. இதுதான் மங்கை மாதரின் பெருங்கற்பு. இதனை மாதவிக்கு எடுத்து ஓதுவது ஏன்? இதனால் கோவ லன் என்ன பயனை எதிர்பார்க்கின்றான். ஒரோவொரு பயன்தான் இருக்க முடியும். காவிரி புலவாதபொழுது - கண்ணகி புலவாதபொழுது - அதனால் அவர்கள் எல்லாம் பெருங்கற்புடையவர்களாக விளங்குகின்ற பொழுது நீ மட்டும் புலப்பது ஏன்? என்று கேட்பதுபோல உள்ளது. மாதவி புலத்தல் கூடாது என்பதனைக் கோவலன் மறைமுகமாக வெளிப் படுத்துகின்றான் என்று கொண்டால் கோவலனுக்கு வேறொருத்தியிடம் மையல் இருந்ததாகவும், அதற்காக மாதவி புலந்தாள் என்றும் பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் கோவலன் வேறொருத்தியை விரும் பினானா என்றொரு கேள்வி பிறக்கும். இதற்கு நாம் நேரிடையாக இப் பொழுது விடைகூறமுடியாது. ஏனெனில் இளங்கோவடிகள்



வெளிப்படையாக அப்படி ஏதும் கூறவில்லை. மறைமுகமாக அப்படி யேதும் கூறுகின்றாரா என்றால் ஆம், கூறுகின்றார் என்றுதான் விடை யிறுக்க வேண்டும். ஏனெனில் அகச்சான்றாகவும், அனுமான அளவை யாகவும் கிடைக்கின்ற பல செய்திகள் நம்மை இந்த முடிவிற்குக் கொண்டுவருகின்றன.

கோவலன் பாடும் கானல்வரிப் பாடல் அனைத்தும் கண்ணகியை நினைத்து - அவளுக்காகக் குரல் கொடுப்பதுபோல அமைந்துள்ளன என்று அறிஞர் தொ.பொ.மீ. அவர்கள் கருதுகின்றார்கள். சிலம்பு பற்றி எழுதுகின்றவர்களும், பேசுகின்றவர்களும் கண்ணகியை நினைவூட்டும் இரண்டொரு குறிப்புகளைக் கொண்ட அகத்துறைப்பாடல்களே என்று கருதுகின்றனர்.

கோவலன் பாடும் கானல்வரிப் பாடல்களில் கண்ணகி குறிப்பிடப் படுவதாக உரையாசிரியர்கள் கூறவில்லை. ஆகவே இதனை நான் வேறு வகையாக எண்ணிப்பார்க்கின்றேன். கோவலன் தன் விருப்பத்தை வெளிப்படுத்தி மாதவி தன் பரத்தமைக்கு உடன்பட வேண்டும் என்பதை வற்புறுத்தவும், அதன் பொருட்டு மாதவியைப் பழிக்கவும் பாடிய பாடல்களே என்று கருதுகின்றேன். மாதவியைக் கோவலன் ஏன் பழித்துப் பாட வேண்டும்?

ஆற்றுவளம் பாடுகின்ற எவரும் ஆற்றுவளத்தாற் பெறும் சோற்று வளத்தையும், அதனை உண்டாரின் வாழ்வுவளத்தையும், அதனாற் பெற்ற கலை, நாகரிக, பண்பாட்டு வளங்களையும் பாடுவதையே ஒரு மரபாகக் கொண்டுள்ளனர். இம்மரபுதான் இயல்பான மரபும்கூட. சோற்றுவளம் இல்லாத நாட்டிலே கலையும் இல்லை; பண்பாடும் இல்லை; கோனும் இல்லை; கோன்மையும் இல்லை. ஆற்றுவளத்தால் விளையும் உழவுத்தொழில் மேம்பாடு மூன்றாவதாக வரும் 'உழவர் ஓதை மதகோதை' என்ற பாடலில்தான் கூறப்படுகின்றது. முதலாவதாக வர வேண்டிய செய்தி மூன்றாவதாகவும், பின்னர் வரவேண்டிய அரசு, செங் கோன்மை, கற்பு பற்றிய செய்திகள் முன்னதாகவும் இடமாற்றம் செய்யப் பட்டதேன்? இந்த மரபு மாற்றமே கோவலன் உள்ளத்தில் ஒரு பதற்றம், தடுமாற்றம் இருந்ததைத் தெளிவுபடுத்தி விடுகின்றது. அவனுள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்த ஒரு செய்தி மரபையும் மீறி முன்னுக்கு வரு கின்றது. இவ்வாறு மரபையே மாற்றும் மனநிலை கோவலனுக்கு ஏன் வந்தது? கடற்கானல் விளையாட்டில் ஈடுபட்டு மகிழ்ந்திருந்த கோவலன் யாழை வாங்கியதும் திடீரென்று மாதவியின் மீது ஒரு தாக்குதல் தொடுக் கின்றான். ஆற்றுவளம் பாட வந்தவன் அதில் எதனை முதலில் பாட வேண்டுமோ அதனைப் பாடாது கற்பு மேம்பாட்டைப் பாடிய மரபு மாற்றம் இத்திடீர்த்தாக்குலை நன்கு எடுத்துக்காட்டும். அவன் யாழைக் கையில் வாங்குகின்றபொழுதே தாக்குதல் நடத்த ஆயத்தமாக இருந்துள் ளான் என்பதை அறிய முடிகின்றது. விளையாடிக் கொண்டிருந்தவன்

மனத்தில் இந்த விபரீத எண்ணம் ஏன் வந்தது? தாங்கிக் கிடந்தவன் தாக்கத் தொடங்குவது ஏன்? கோவலனின் இந்தத் தாக்குதல் திடீரென்று நடந்து விட்ட ஒன்றுமட்டும் அன்று; சிறிது கால மனப்புழுக்கத்தின் வெளிப் பாடும்தான் கோவலனின் கானல் வரிப்பாடல். அந்த மனப் புழுக்கம் என்ன? அது வளர்ந்த வரலாறு யாது? கோவலனின் ஒரு பக்கத்தை இளங் கோவடிகள் வெளிப்படையான வண்ண ஓவியமாகத் தீட்டிக்காட்டு கின்றார். மற்றொரு பக்கத்தை அனுமான அளவையால் கண்டு தெளிய வேண்டிய சிதைந்த சித்திரமாக அமைத்துள்ளார். ஒரு பக்கக் கோவலன் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டத் தவறிழைத்தவன். இன்னொரு பக்கக் கோவலன் உளவியல் வக்கிரங்களால் (வளைவுகளால்) தன்னையும் பிறரையும் அழித்தவன். அவலத் தலைவனின் வீழ்ச்சி நம் உள்ளத்தில் இரங்கலை ஏற்படுத்த வேண்டுமே என்பதற்காக உளவியல் வக்கிரங் களை மறைவாகச் சுட்டிக் காட்டுகின்றார் போலும் இளங்கோவடிகள்.

கானல்வரிப் பாட்டில் கோவலன் தன்னிலை மயங்கி மன்னும் ஒரு குறிப்போடு பாட நேர்ந்ததை நாம் அறிய வேண்டுமானால் கோவலனின் குண இயல்புகளைத் தெளிவாக அறிய வேண்டும். அவனது உளவியல் வளைவுகளை இனிமேல் காண்போம்.

# கோவலன் இயல்பு

கோவலன் புகார் நகரத்தில் பெருவணிகன் மாசாத்துவானின் ஒரே மகன். கலைகளின் கரைகண்டவன். இளமையும் அழகும் ஒருங்குகூடிய தோற்றப் பொலிவினன். ஈடிலாச் செல்வ வளம். அளவிலாக் கலை உணர்வு. முருகனை ஒத்த அழகு. ஒரே மகன் என்ற மதர்ப்பு. இந்நான்கும் ஒன்று கூடினால் ஒருவன் என்ன ஆவான்? என்ன ஆவான்; கோவலன் ஆவான் என்று சொல்லத்தக்க அளவுக்குக் காவிரிப்பூம்பட்டினம் களியாட் டக் களமாக இருந்தது. செல்வர் இல்லத்துப் பிள்ளைகளும், குரல்வாய்ப் பாணரும், நகரப் பரத்தரும் நகையாடிச் சங்கமிக்கும் கடலாகப் பூம்புகார் விளங்கியுள்ளது. பரத்தையர் வாழும் தெருக்களில் இரவு என்பதே இல்லை. அங்கே மன்மதனின் ஆணைச் சக்கரம் வீறோடு சுழன்றுகொண் டிருந்தது.

கலையும் காமமும் கைகோத்துக் கிடந்த அத்தெருக்களிலே, அலை யில் துரும்புபோலப் புகார் நகரத்து இளைஞர்கள் தன்னிலை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தார்கள். தசை வேட்கையை அசை போட்டுத் திரிதலே அவ்விளைஞர்களின் அன்றாடப் பணியாக அமைந்திருந்தது. இத்தகைய சமுதாயச் சூழலில் வளர்ந்த கோவலன் எத்தகைய இயல் புடையவனாக இருந்திருப்பான்? 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இஃதொன்று' என்பதுபோலத்தான் விளங்குகின்றான்.

புகார் நகரத்துத் தெருவொன்றிலே வழக்கமாக நடக்கும் நிகழ்ச்சி யொன்றைப் பாருங்கள். எல்லாம் பொது என ஆக்கி வாழ்கின்ற பரத் தையர் வீதியிலே ஆடவர்கள் சுற்றி வருகின்றனர். பலாப் பழத்தைப் பிளந்து வைத்தால் ஈக்களால் சும்மா இருக்க முடியுமா? பிறழ்கின்ற கண் களுக்கு இரையாகிவிட்ட இளைஞர்கள் பித்தேறிப் பேசுகின்றனர். கூடி வந்து மொய்க்கின்றனர். ஏடி உன் அழகே அழகு என ஏக்கப் பெருமூச் செறிகின்றனர்.

'வானத்தில் இருக்கும் பாம்புக்கு அஞ்சிய பனிநிலா வையகத் திற்கு வந்துவிட்டதோ?' இஃதொரு காளையின் கற்பனை.

'மன்மதனால் வளர்த்துவிடப்பட்ட வானவல்லியோ இவள்?' காமத்தால் வெதும்பிய மற்றொரு இளைஞனின் இனிய பாராட்டு இது.

'இலவ மலரால் வாயும், முல்லையாற் பற்களும், குவளையாற்

கண்களும், குமிழால் மூக்கும் கொண்ட கள்ளக் கமலமே' - மற்றொரு இளைஞனின் மன்மத வாசகம் இது.

'கூற்றுவன் பெண்ணுருவம் கொண்டு, நாணம் தவழும் நகைமுகம் பெற்று இசை தோற்கும் மொழிபேசி வருவதைப் பார்த்துள்ளீர்களா?' - கூற்றத்தைக் கையால் விளிக்கும் ஒரு குமரனின் அமரமொழிகள்.

புகார் நகரத்துப் பொதுமகளிர் சுற்றித் திரியும் தெருக்களில் இவை போன்ற நிகழ்ச்சிகள் ஏராளம். அங்கே வட்டமிட்டுத் திரியும் வண்டான கோவலனின் அன்றாட நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைந்திருந்தன? இளங் கோவடிகள் இயம்புவதனைக் கேளுங்கள்.

இல்வளர் முல்லை மல்லிகை மயிலை
தாழிக் குவளை சூழ்செங் கழுநீர்
பயில்பூங் கோதைப் பிணையலின் பொலிந்து,
காமக் களிமகிழ்வு எய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழில் ஆட்டமர்ந்து
நாள்மகிழ் இருக்கை நாளங் காடியில்
பூமலி கானத்துப் புதுமணம் புக்கு
புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன்' 6: 191 - 202

முல்லை, மல்லிகை, மயிலை, குவளை, செங்கழுநீர் இவற்றால் தொடுக்கப்பட்ட பிணையலைச் சூடித் தன்னழகுக்கு மேலும் அழகேற்றிக் கொள்கின்றான். காமத்தையே கள்ளாக உண்டு களிக்கின்றான். இனிய பொழிலிலே ஆட்டயர்கின்றான் (புணர்ந்து மகிழ்கின்றான்) பூக்கள் மலிந்த இனிய மணம் நிரம்பிய சூழலில், அகில், சந்தனம் ஆகிய இவற்றின் மணம் சிறக்கப் பாணரோடும் பரத்தரோடும் காமக் குறிப்புள்ள மொழிகளைப் பேசித் திளைத்து எங்கும் சுற்றித் திரியும் மரபை உடையவனாக இருக்கின்றான் கோவலன் என்று காட்டப்படுகிறது. மரபு என்பது என்ன? மாறா நிலையையுடையது; மீறமுடியாதது. இங்கே கோவலன் எத்தகைய மீற முடியாத மரபைக் கொண்டிருக்கின்றான் பார்த்தீர்களா?

'குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு
மலய மாருதம் திரிதரும்' 6 : 200 - 203

என்ற பகுதிக்கு உரையெழுதிய நாட்டார் அவர்கள் சிறப்புரையாக 'அடிகள் இவ்வுவம வாயிலாகக் காமத்தாற் கோவலன் எய்திய சிறுமையை அங்கை நெல்லியென விளக்கியுள்ளார்' என எழுதுகின்றார்.



கோவலன் முரண்பாடுகளின் மூடையாக விளங்குவதனைக் கற்பவர்கள் அறிவார்கள். உயரிய, பின்பற்றத் தக்க குணங்களும் அவனிடம் உள்ளன. உதறித்தள்ளி வெறுக்கத்தக்க குணங்களும் அவனிடம் உள்ளன. அதனால்தான் அவன் முரண்பாடுகளின் சங்கமமாக விளங்குகின்றான் என்று குறிப்பிட்டேன். உயரிய குணங்களைக் குறிப்பிடும் பொழுது இளங்கோவடிகள் வெளிப்படையாக விரித்தோதுகின்றார். இழிந்த குணங்களை வெளிப்படையாக எடுத்துக்காட்டாது இலைமறை காயாக எடுத்தோதுகின்றார். இந்த நுணுக்கத்தை மனத்துட்கொண்டு கோவலனின் குணமாண்பைக் காணவேண்டும்.

## பாலியல் வேட்கை

ஏனைய துறைகளில் அவனுக்குப் போதுமென்ற மனம் இருந்திருக்கலாம். ஆனால் பெண்ணோடு ஆடிப்பெறும் இன்பத்தில் அவன் போதாது! போதாது! என்று கூறும் இயல்புடையவனாகவே உள்ளான். 'தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல் நிலையாமை கண்டவர்போல்' என்று கூறும்மொழிகள் நூற்றுக்கு நூறு உண்மை மொழிகளே. இதனை வேறொரு வாய்பாட்டில் கூறுவது என்றால் 'அவசரப்பட்டு துய்க்கத் துடிப்பவன்' என்று கூறலாம். கோவலன் அவசரப்படும் காம உணர்வு உடையவன் மட்டுமல்லன்; அடங்காக் காம உணர்வும் உடையவனாவான்.

கோவலனின் பாலியல் வேட்கைபற்றிப் பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் 'சிலப்பதிகார ஆராய்ச்சி' என்ற தம்முடைய நூலிலே 'இன்ன நலம் பலவும் உடையனாயினும் இக்கோவலன் கண்ணகி பாற்றீராக் காதற் காமம் கொண்டு அவளது நலம் புனைந்து பாராட்டியும் ஓதுவதை நோக்கின் பெருங்காமத்தான் என்பது புலனாகின்றது' (ப. 2) என்று குறிப்பிடுகின்றார். இவன் கண்ணகியிடம் மட்டுமன்று, மாதவியிடமும் ஆறாக் காமத்தனாகவே நடந்து கொள்கின்றான். இளங்கோவடிகள் இதனை வெளிப்படையாகக் கூறவில்லை. அனால் இலைமறை காயாக வெளிப்படுத்தவே செய்கின்றார்.

கோவலன் அடங்காப் பெருங்காமத்தான் என்பதனைக் கண்ணகியோடு வாழ்ந்த காலத்திலும் காணமுடிகின்றது. மாதவியோடு வாழ்ந்த காலத்திலும் அறிய முடிகின்றது. நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்தில் கோவலனும் மாதவியும் கூடியிருந்ததனை அடிகள்,

'கலவியும் புலவியும் காதலற் களித்து' 4 : 32

என்றும், கடலோடு காதையுள்

'கூடலும் ஊடலும் கோவலற் களித்து' 6 : 109

என்றும் பாடுகின்றார். இத்தொடர்களிலே ஒரு முரண்பாடு அமைந்திருப்பதனை அறியலாம். மேலே காட்டிய தொடர்களுள் 'புலவியும் கலவியும்', 'ஊடலும் கூடலும்' என முறையாகக் கூறாது மாற்றிக் கூறியுள்ளார்.

'ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமங்
கூடியார் பெற்ற பயன்' 1109

என்பதன்றோ திருக்குறள் வாக்கு. முறையான புணர்ச்சியாக இருப்பின், ஒத்த உணர்ச்சியுடைய தலைமக்களாக இருப்பின் குறளிற் கூறிய வண்ணம் ஊடல் முன்னும் புணர்தல் பின்னுமாகத்தான் வந்திருக்கும். அடிகள் முறைமாற்றிக் கூறியிருப்பதனை எண்ணினால் கண்ணகி, மாதவி ஆகிய இருவரிடத்துமே அவன் உணர்ச்சியொத்தவனாக இல்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. இத்தொடர்களுக்கு நேரே பொருள் கூறினால் முதலிற் கூடுதலும், பின்னர் ஊடுதலும், ஊடல் உணர்ந்து அதன் பின்னர்க் கூடுதலும் என ஒரே நாளில் பலமுறை கூடி (புணர்ந்து) இன்புறும் பெருங் காமத்தனாகக் கோவலன் இருந்தான் என்றுதான் கூறவேண்டும்.

பலமுறைகூடி இன்பம் நுகர்வது இவனது இயல்பே என்பதனைக் கண்ணகியோடு வாழ்ந்த காலத்திலும் காணமுடிகிறது. கோவலனும் கண்ணகியும் மனையறம் படுத்த காதையுள் கூடி மகிழ்ந்த செய்திகள் விரிவாகக் கூறப்படுகின்றன. நிரைநிலை மாடத்து அரமியத்தில் ஏறி இருவரும் கதிர் ஒருங்கு இருந்த காட்சிபோல் இருந்து கூடிக்களித்தனர். இதனை அடிகள் *'தாரும் மாலையும் மயங்கி'* என்ற தொடராலே குறிப்பார். அதனோடமையாது கையற்று என்ற சொல்லையும் கூறுவார். கையறுதல் என்றால் செயலொழிந் திருத்தல் என்பது பொருள். ஆக நுகர்ச்சியின் இறுதிநிலையை அடிகள் நன்கு புலப்படுமாறு கூறியுள்ளார். அதன் பின்னர்க் கோவலன் கண்ணகியை நலம் பாராட்டி (உறுப்புக் களைப் புகழ்ந்து) பேசுகின்றான்.

கண்ணகியைக் கூடுவதற்கு முன்னர் அவள் உறுப்பு நலன்களைப் பாராட்டினால் அது இயல்பானது. கூடி மகிழ்ந்த பின்னர் ஏன் உறுப்பு அழகையே பாராட்ட வேண்டும். மீண்டும் கூடுவதற்குத்தான்; இங்கேயும்கூட உறுப்பு நலன் பாராட்டல் முன்னும், தாரும் மாலையும் மயங்குதல் பின்னுமாக வாராமல் முறை மாற்றி அமைத்துள்ள அடிகளின் திறத்தினை அறிய வேண்டும். தலைவன் தலைவியைப் புணர்ந்தபின் பாராட்டுதல் இலக்கிய வழக்காறு இல்லையோ என்று சிலர் வினவக் கூடும். அஃதோர் இலக்கிய வழக்காறுதான். ஆனால் அது வேறுவிதமாக அமைந்திருக்கும். இன்பத்தை எண்ணிப்பார்ப்பதாகவோ - பயந்தாரைப் பழிச்சலாகவோ இருக்கும். உறுப்புக்களைப் புகழ்ந்து பேசுவதாக உள்ளது மட்டுமில்லை; வேறொன்றும் உள்ளது. இப்பாராட்டு மீண்டும் புணர்தலை நோக்கமாகக் கொண்டதே எனச் சான்று பகர்கின்றது. கோவலன் கண்ணகியோடு முயங்கி மகிழ்ந்தபின்.

'தீராக் காதலின் திருமுகம் நோக்கி' 2 : 36

குறியாக் கட்டுரை கூறியதாக இளங்கோவடிகள் கூறுகின்றார். அவனுடைய காதல் எத்தகையது? தீராக் காதல் - ஆம் முயங்கிய பின்னரும் தீராக்



காதல். அது தீராக்காதலாக இருந்ததனால்தான் அதனைத் தீர்த்துக்கொள்ள மீண்டும் உறுப்புக்களைப் பாராட்டிப் பேசத் தொடங்குகின்றான். இதனை வெளிப்படுத்தவே அடிகள் 'தீராக்காதலின்' என்று குறிப்பிடுகின்றார். இவற்றிலிருந்து நாம் கோவலனைப் பற்றி அறிவது என்ன? கண்டதும் கூடவேண்டும். ஊடல் கொண்டு மீண்டும் மீண்டும் கூட வேண்டும் என்ற பாலியல் வேட்கை மிகுந்தவன் என்பதைத்தான்.

'தீராக் காதல்' என்பது வெறும் மனஆர்வம் பற்றியதேயன்றிக் கூடும் குறிப்புடையதன்று எனச் சிலர் கூறலாம். ஆனால் இதே மனையறம்படுத்தகாதையின் இறுதியில்,

'உலவாக் கட்டுரை பலபா ராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி 2 : 81, 82

என வருவதால் அவன் மீண்டும் கண்ணகியோடு கூடினான் என்று தெரிகிறது. காமம் பொருளாக விலைமகளைக் கூடிக் களிப்பதனை எடுத்துக் கூறும் விறலிவிடு தூது நூலில் வரும் தலைவன்கூடப் பலமுறை கூடிக் கலந்ததாகக் கூறப்படுவதில்லை. ஆனால் கோவலன் மிகுந்த புணர்ச்சி வேட்கையுடையவனாகவே விளங்கினான் என்பதைச் சிலம்பு வெளிப்படுத்தவே செய்கின்றது.

## கோவலன் பரத்தமை

எல்லை கடந்த புணர்ச்சி வேட்கைதான் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியை வந்து அடைந்ததற்கான காரணம் போலும். கண்ணகி மாதவி இருவரோடு மட்டுமே உடல் உறவுடையவன் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாத அளவிற்கு அவன் வாழ்க்கை அமைந்துள்ளது.

கோவலன் சுற்றித் திரிவதுபோல் மலயமாருதம் சுற்றித் திரிந்தது என்று இளங்கோவடிகள் சொல்லுவதனைச் சிந்தித்துப் பார்த்தால் அவன் பரத்தமை வாழ்வு பளிச்செனத் துலங்கும். காற்று நுழையாத வீடுகள் எங்காவது உண்டா? இல்லை. கோவலன் காலடி படாத பரத்தையர் வீடுகள் உண்டா? அதுவும் இல்லை. காற்று எல்லா வீடுகளிலும் நுழைந்து எல்லாரையும் தழுவிச் சென்றாற்போலக் கோவலனும் பரத்தையர் தெருவிலுள்ள வீடுகளில் எல்லாம் நுழைந்து ஆண்டுறையும் மகளிரை எல்லாம் தழுவித் திரிந்தவன் என்று கொள்ளுமாறு இது அமைந்துள்ளது.

பொருளைவிட உவமையே சிறந்தது. எங்கும் சுற்றித் திரியும் காற்றைப்போலக் கோவலன் சுற்றித் திரிந்தான் என்று சொல்ல இளங்கோவடிகளுக்கு மனமில்லை. காற்றை உவமையாக்கினால் சுற்றித் திரிதலில் காற்றுக்கல்லவா முதன்மை கிடைத்துவிடும். கிடைத்தால் உவமேயமாகிய கோவலனுக்கு இரண்டாவது இடந்தானே கிடைக்கும் என்று எண்ணினார் போலும். ஆகவே கோவலன் சுற்றித் திரிவதுபோலத் தென்றல் திரிந்தது என்று கூறியதன்வாயிலாக 'சுற்றித்திரிதலில்' கோவலனுக்குள்ள முதன்மையையும் தலைமையையும் பெற்றுத் தந்துவிடு

கின்றார். இதனையும்கூட முறைமாற்றி அமைத்துள்ளார் என்பதையும், இம்முறை மாற்றத்தால் காலநேரம் இன்றியும், கணக்குவழக்கு இன்றியும் உடற்பசி கொண்டலைந்தவனே கோவலன் என்பதனையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றார் அடிகள்.

இன்னும் இவனுடைய காமத் தீயின் வெப்பக் கடுமையை மற்றுமொரு சான்றும் எடுத்துக்காட்டுகிறது. கானல்வரிப் பாடலுக்குப்பின் பிரிந்துசென்ற கோவலனுக்கு முடங்கல் ஒன்றை வயந்தமாலையிடம் கொடுத்தனுப்புகின்றாள் மாதவி. கோவலன் இம்முடங்கலை மறுத்த செய்தியை வயந்தமாலை கூறியபோது.

'மாலை வாரார் ஆயினும் மாணிழை
காலை காண்குவம்' 8: 115, 116

என்று மாதவி நம்பிக்கையோடு கூறுகின்றாள். எந்த நம்பிக்கையில் இப்படிக் கூறுகின்றாள்? அவனுக்குப் புணர்ச்சியில் உள்ள மிதமிஞ்சிய விருப்பத்தை அறிந்த நம்பிக்கையில்தான் அப்படிக் கூறுகின்றாள். கோவலனோடு பல ஆண்டுகள் வாழ்ந்தவள் மாதவி. அவனுடைய பலம் எது? பலவீனம் எது? என்பதை நன்றாகவே அறிந்து வைத்திருப்பாள். அவன் பலவீனத்தை அறிந்ததனால்தான் அவள் 'மாலைவாரார் ஆயினும் காலை காண்குவம்' என்கிறாள்.

அவனை எந்த இடத்தில் தாக்கினால் பணிவான் என்பதை நன்கு அறிந்த காரணத்தினால்தான் மாதவி அந்தப் பலவீனத்தைத் தாக்க ஒரு கடிதத்தை வயந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள். அவனோ அந்தக் கடிதத்தையே கையில் வாங்கவில்லை. வாங்கியிருந்தால் கோவலன் உறுதி என்னாகியிருக்குமோ? மாதவி அந்தக் கடிதத்தை எப்படி எழுதினாள்? என்ன எழுதினாள்?

தாழை மடலில், பித்திகை முகையால், செம்பஞ்சுக் குழம்பு கொண்டு எழுதுகிறாள்.

காமத்தால் விளைந்த முற்றாத இளஞ்சொற்களால் எழுதினாளாம். அப்படி என்றால் அச்சொற்கள் எப்படி இருக்கும். இதோ இப்படி இருக்கும். படித்துப் பாருங்கள்.

மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்;
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்களஞ் செல்வனும் செவ்வியன் அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று, இஃதறிந் தீமின் 8:56 - 63



'உயிர்களை எல்லாம் இன்பத்தில் ஆழ்த்தும் இளவேனில் இளவரசனாக உள்ளான். ஆம்; ஆட்சிமுறை அறியாதவனாக உள்ளான். அந்திப்போதிலே வரும் திங்கட் செல்வனும் தீமை செய்பவனாகவே உள்ளான். இக்காலத்தில் கூடி இருந்தவர்கள் சிறிது பிரிந்திருக்க நேரினும், பிரிந்தவர் தம் துணையை மறந்தாலும் மலர்க்கணைகளால் அவ்வுயிர்கள் பறிக்கப்படுவது வியப்பன்று. இதனை நீ அறிக' என்கிறாள். இளவேனிலும் நிலவும் புணர்ச்சிக்குத் துணையாவன; தூண்டுவன. மாதவி இவற்றை முதலில் நினைவுபடுத்துகின்றாள். புணர்ந்தவர் பிரிந்தவர் இயல்புகளைப் பின்னர் எடுத்து மொழிகின்றாள். அதன் பின்னர்க் காமனின் மலர்க்கணைகள் உயிர் பறிப்பது பற்றிக் கூறுகின்றாள். இவ்வாறு இவள் எடுத்துக் கூறுவன எல்லாம் புணர்ச்சி வேட்கையைத் தூண்டுவனவாகவே உள்ளன.

இம்முடங்கலில் அன்பு பற்றியோ, குழந்தை மணிமேகலை பற்றியோ, குடும்ப வாழ்வு பற்றியோ, பிரிந்தால் ஊர் என்ன பேசும் என்பது பற்றியோ அவள் ஏதும் கூறவில்லை. அவனுக்கு உணர்ச்சித் தூண்டலை உண்டாக்கவே இம்முடங்கல் எழுதப்படுகின்றது. இம்முடங்கலைப் படித்துப் பார்த்திருப்பானேயானால் கோவலன் ஓடோடி வந்திருப்பான். இந்நம்பிக்கை மாதவிக்கு இருந்ததனால்தான் 'மாலை வாரார் ஆயினும் காலை காண்குவம்' என்கிறாள். இந்த நம்பிக்கை மொழியும் உணர்ச்சித் தூண்டலை உண்டாக்கும் இந்தக் கடிதமும் உணர்த்துவது என்ன? கோவலன் அடங்காத உடற்பசியாளன் என்பதைத்தானே?

### கோவலனும் வயந்தமாலையும்

பரத்தையர் இல்லங்களில் இன்பம் நுகர்ந்து திரிந்தது மட்டுமன்று; தன் (மாதவி) இல்லத்தில் உறையும் பணிப்பெண்களையும் கோவலன் விட்டு வைப்பதில்லைபோலும் என எண்ணுமாறுள்ளது. மாதவி வீட்டில் உள்ள வயந்தமாலையோடும் தொடர்பு கொண்டொழுகியுள்ளான் கோவலன். இதனை ஒரு நிகழ்ச்சி நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

கோவலன் , கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை செல்லும் வழியில் அவர்களைத் தனியிடத்தில் விட்டு விட்டு நீர் வேட்கையால் ஒரு பொய்கை நோக்கிப் போகின்றான் கோவலன். அக்காட்டில் உள்ள ஒரு வனசாரிணி வயந்தமாலை வடிவம் கொண்டு வருகின்றாள். அவ்வன சாரிணி வயந்தமாலை வடிவம் கொண்டது ஏன்?

'நயந்த காதலின் நல்குவன் இவனென
வயந்த மாலை வடிவில் தோன்றி' 11: 172, 173

என்கிறார் இளங்கோவடிகள். 'நயக்கும் காதலால் நல்குவான் இவன்' என்று வனசாரிணி எதிர்காலத்தாற் கூறவில்லை. 'நயந்த காதலின்' என்று இறந்த காலத்தாற் கூறுகின்றாள். ஆகவே முன்னரே வயந்தமாலையின் பால் கோவலன் நயந்தகாதலை உடையவன் எனத் தெரிகின்றது. இன்னும்

அவ்வனசாரிணி 'நல்குவன்' என்று நம்புகிறாள். ஏற்கெனவே இவன் நயந்தகாதலின் நல்கியவன் ஆதலின் வயந்தமாலை வடிவில் இருக்கும் தனக்கும் இவன் நல்குவான் என்று கருதுகின்றாள். கடந்த காலத்தை அறிந்துகொள்ளவும், வேண்டுருவம் எடுக்கவும் வலிமையுள்ள வன சாரிணி கூற்று பொய்யாக இருக்க முடியாது. மெய்யானதாகவே இருக்க வேண்டும்.

மற்றொரு செய்தியும் இதனை உறுதி செய்கின்றது. 'மாதவி என்னை விலக்கிவிட்டாள்; நின் பணிமொழியாது' என்று வினவுகின் றாள். வயந்தமாலை வடிவிலிருக்கும் வனசாரிணி. கோவலனுக்கும் வயந்தமாலைக்கும் உடல் தொடர்பான உறவேதும் இல்லையென்றால் கோவலன் என்ன கூறியிருப்பான்? 'வயந்தமாலை! உனக்கு என்ன நேர்ந் தது; ஏன் தகாத மொழிகள் பேசுகின்றாய். நீ இவ்வாறு கூறுதல் முறை யன்று' என்று கூறியிருக்கவேண்டும். ஆனால் கோவலன் அவ்வாறு கூற வில்லை. அவ்வாறு கூறாதது மட்டுமில்லை. இவள் உண்மையில் வயந்த மாலை தானா என்று அறிந்து கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றான். பாய்கலைப் பாவை மந்திரத்தைப் பயன்படுத்தி உண்மையறிய முயல் கின்றான். வயந்தமாலை (வனசாரிணி) விருப்பத்தை மறுதலிக்காமல் மந்திரத்தின் உதவியை நாடுவதே அவன் உள்ளத்தில் களங்கம் இருப் பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி விடுகின்றது.

இன்னும் இவ்வனதேவதை வேறொரு செய்தியையும் எடுத்து மொழிகின்றது. அவன் அடியிலே வீழ்ந்து அழுது புலம்பிய அவ்வன தேவதை.

'வாச மாலையின் எழுதிய மாற்றம்
தீதிலேன்; பிழைமொழி செப்பினை யாதலின்
கோவலன் செய்தான் கொடுமை' 11: 176,178

என்று மாதவி கூறியதாகவும் பின்னர் மயங்கி, அழுது முத்துமாலையை அறுத்தெறிந்த பிறகு 'துனியுற் றென்னையும் துறந்தாள்' என்றும் கூறுகின்றது.

நான் தீமையற்ற சொற்களைத்தான் முடங்கலில் எழுதியிருந்தேன். நீ தவறான சொற்களைக் கோவலனிடம் கூறியதனால்தான் கோவலன் வாராது போய்விட்டான் என்று மாதவி கூறியதாக வயந்தமாலை வடிவில் இருக்கும் வனதேவதை கூறுவதைக் கூர்ந்து பாருங்கள். பளிச்செனறு உண்மை புலப்படும். 'தவறான சொற்களைக் கூறினாய்' என்று மாதவி கூறியதாக வனசாரிணி கூறுவதனால் கோவலனும் வயந்தமாலையும் தனியே சந்தித்துக் கொள்ளும்போது தவறான சொற்களைக் கூறுவது உண்டு என்பது தெளிவாகின்றது. மாதவி சொல்லாத சொற்களை மாதவிக் குத் தெரியாமல் கோவலனிடம் அவள் ஏன் கூறவேண்டும்? அவ்வாறு கூறுவதற்கு அமைந்த உறவு என்ன? உடலால் ஏற்பட்ட உறவல்லாமல்



வேறு என்ன உறவு இருக்கமுடியும்?

இன்னும் அவ் வனசாரிணி மாதவி 'துனியுற்றென்னையும் துறந் தாள்' என்கின்றாள். மாதவி சினங்கொண்டு தன்னை விரட்டி விட்டதாகக் கூறினால், தான் மாதவியின் அடிமைப் பெண்ணாக இல்லை என்ப தையும், இப்பொழுது அவன் விரும்பியவாறு வாழ விரும்புவதாகவும் - இதற்குத் தடையேதும் இல்லை என்றும் கோவலன் அறிந்துகொள்வான் என்று கருதுகின்றாள். அறிந்துகொண்டால் ஏற்கெனவே 'நயந்த காதலால் நல்குவான்' என்று வனசாரிணி எண்ணுகிறாள்.

கடந்த காலத்தில் வயந்தமாலை கோவலனை மாதவி அறியாத வாறு சந்தித்துப் 'பிழைமொழி' பல கூறியிருக்கலாம். எதற்காக எனின் மாதவி மயக்கத்திலிருந்து கோவலனை விடுவித்துக் கண்ணகிபாற் சேர்ப் பிக்க என்று சிலர் உரைக்கக்கூடும். இது பொருத்தமற்றது. அத்தகைய தூய உணர்வினளாக வயந்தமாலை இருந்திருப்பின் வனசாரிணி 'நயந்த காதலின் நல்குவன்' என நம்பிக்கையோடு வயந்தமாலை வடிவில் வந் திருக்கமாட்டாள். வனசாரிணி நம்பிக்கையோடு வந்ததை எண்ணும் போது வயந்தமாலையிடத்தும் கோவலன் உடற்பசியைப் போக்கிக் கொண்டவனே என்பது போதரும். இதனால்தான் திருவாளர் புலவர் கு.திருமேனி அவர்கள் தம்முடைய 'கோவலன்' என்ற நூலில் -

'கோவலன் வரம்பின்றி மாதவிக்குத் தோழியாம் வயந்தமாலை போன்றோரிடமும் தொடர்பு கொண்டு வாழந்திருக்கிறான். அதனால் தான் மயக்குந்தெய்வம் அந்த வயந்தமாலை வடிவு கொண்டு தோன்றித் தான் கோவலனிடம் வந்ததற்குரிய காரணத்தைத் தெளிவாக அவன் நம்பு மாறு கூறுகின்றது' என்று கூறுகின்றார். திரு எஸ். இராமகிருட்டிணன் அவர்களும் 'இளங்கோவின் பாத்திரப்படைப்பு' என்ற நூலில் கோவலன் வயந்தமாலை தொடர்பு பற்றிக்கூறும்பொழுது 'வயந்தமாலையிடமே கோவலனுக்குக் காமவழிப்பட்ட தொடர்பு உண்டு என்பதையும் உய்த் துணரச் செய்வார் அடிகள்' என்று கூறுவதும் நோக்கற்குரியது.

### நகர்வலம் வந்த கோவலன்

புகார் நகரத்தில் கோவலன் ஆடாத ஆட்டமில்லை; கூடாத கூட்ட மில்லை. மாதவியோடு அவனுக்கு ஏற்பட்ட மனமுறிவு அவன் வாழ்க் கையின் போக்கையே திருப்பிவிடுகின்றது. அவன் மதுரை செல்ல முடி வெடுத்து விடுகின்றான். இந்த முடிவுகூட ஆய்ந்து தெளிந்து எடுத்த முடி வன்று. உணர்ச்சிக் கொந்தளிப்பில் எடுத்த முடிவுதான். இதனைப் பெற் றோரிடமோ மனைவியிடமோ கலந்து முடிவு செய்யவில்லை. இதனைப் பெற்றோரிடமும் மனைவியிடமும் கூற வெட்கப்பட்டிருப்பான் என்று சிலர் கூறலாம். கண்ணகியைப் பிரிந்து பல ஆண்டுக்காலம் பரத்தமை மேற்கொண்டு வாழ்ந்தவன் வேறெங்கும் போய்விடவில்லை. புகாரிலே தான் பரத்தமை வாழ்வை நடத்துகிறான். பெற்றோரும் மனைவியும்

அந்தப் புகாரிலேதான் வாழ்கின்றனர். இவன் பரத்தமை ஒழுக்கம் பற்றி அறிந்தும் இருக்கின்றனர். இதற்கெல்லாம் நாணாத கோவலன் திருந்தி வாழ, அதற்கு ஆவன செய்ய அவர்களைக் கலந்து பேச நாணினான் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதில்லை. அப்படியானால் மதுரை செல்ல அவன் அவசரப்பட்டு ஏன் முடிவு எடுக்க வேண்டும்?

விடுதல் அறியா விருப்பத்தையுடைய மாதவியைப் பிரிந்து ஒரு நாள் தாக்குப்பிடித்துவிட்டான். மாதவி அனுப்பிய கடிதத்தை வாங்கிப் பார்த்தால் எங்கே தன் மன வலிமை குறைந்து போய்விடுமோ என்று அஞ்சி அதனைக் கையில் வாங்காமலேயே மாதவியைப் பழித்துப் பேசி வயந்தமாலையை அனுப்பி விடுகின்றான். இந்நிலையில் மாதவி என்ன செய்வாள்? இனி மாதவி, தானே கோவலனை நேரிற் கண்டு தன்னை மன்னிக்குமாறு வேண்டலாம். அப்படி வேண்டினால் தன்னுடைய உறுதி தகர்ந்துபோய்விடும் என்பதை அவன் அறிவான். ஆகவே மாதவி தன்னைச் சந்திக்கு முன்பே புகாரை விட்டுப்போய்விட முடிவு செய்கின்றான். இதனால்தான் அன்று இரவே மதுரைக்குச் சென்றுவிட அவசரக் கோல முடிவை எடுக்கின்றான். தன் மன உறுதியின் மீது தனக்கே நம்பிக்கை இல்லை என்பதுதான் கோவலன் நிலை. நான் இதனை எடுத்துக் காட்டுவதன் நோக்கம் என்ன என்றால் பெண், கலவி போன்றவற்றில் மிகுந்த நெகிழ்ச்சி உடையவன் என்பதை எடுத்துக் காட்டத்தான்.

வயந்தமாலை கொண்டுவந்த மாதவியின் முடங்கலைக் கோவலன் தன் கையில் வாங்காது மறுத்துவிட்டான் என்று கூறுவது உரையாசிரியர்களின் கருத்துக்கு முரணானது என்றும், மாதவியின் முடங்கலை வாங்கிப் படித்துப்பார்த்த பின்னரே மறுத்தான் என்றும் சிலர் சொல்லக்கூடும். கோவலன் முடங்கலை வாங்கினான் என்பதற்கு மூலத்தில் எந்த ஆதாரமும் இல்லை. வேனிற்காதையின் 72,73 ஆவது அடியாக வரும்.

'மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்ப 8: 72,73

என்பதில் அளிப்ப என்னும் எச்சம், அதே காதையின் 112 ஆவது அடியாக வரும் 'மணித்தோட்டுத் திருமுகம் மறுத்ததற்கிரங்கி' என்பதில் உள்ள, மறுத்ததற் கிரங்கி என்பதனோடு சென்று இயைவதை எண்ணிப்பார்க்க வேண்டுகின்றேன். வயந்தமாலை அளிப்பக் கோவலன் மறுப்ப அதற்கு இரங்கி வாடிய உள்ளத்து வயந்தமாலை மாதவியிடம் சென்று உரைப்ப என இத்தொடர்கள் தம்முள் இயைந்து செல்கின்றன. ஆகவே கோவலன் வயந்தமாலை கையிலிருந்து முடங்கலை வாங்கிப் படித்தான் என்று கூறுவது ஆதாரமற்றது என அறிய வேண்டுகின்றேன்.

கோவலன் கவுந்தியடிகள் உடன் இருப்பதனால் கண்ணகியோடு கூடி மகிழ வாய்ப்பில்லை. இந்நிலையில் மதுரைப் புறஞ்சேரியை வந்தடைகின்றனர். கவுந்தியடிகளை வழியிற் சந்தித்தபோது கோவலன்



மதுரை செல்ல நேர்ந்ததற்கான காரணத்தைக் கூறவில்லை. 'உரையாட்டு இல்லை,உறுதவத்தீர்' என்று கூறிவிடுகின்றான். அதன் பின்னர் மதுரைப் புறஞ் சேரி வரும்வரையிலும் தன்னுடைய நெறி பிறழ்ந்த வாழ்க்கையைக் கவுந்தியடிகளிடம் கூறவில்லை. புறஞ்சேரியில் தான் முதன்முதலாக,

'நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத்தீர் யான்' 14: 17 - 20

என்று தன்னுள்ளத்தைத் திறந்து காட்டுகின்றான். யான் நெறி பிறழ்ந்ததனால் நறுமலர் மேனி (கண்ணகி) நடுங்கு துயர் எய்தினாள் என்கின்றான். உண்மையில் நடுங்கு துயர் உற்றவர் இருவர். கண்ணகி, மாதவி ஆகிய இருவரே அவர்கள். மாதவியைப் பற்றிய செய்தியை மறைத்து விடுகின்றான். கோசிகமாணியிடம் 'தன் தீது இலள் என் தீது' என்று கூறியவன் இங்கே மாதவியின் நடுங்குதுயரத்தையும் கூறியிருக்க வேண்டுமல்லவா? அடுத்ததாக வரும் அடைக்கலக் காதையுள் தான், தான் கண்ட கனவைக் கூறும்பொழுது மாதவி, மணிமேகலை பற்றிய செய்திகளைக் கூறுகின்றான்.

மாதவி மணிமேகலை பற்றிய கனவுச் செய்திகளைத் தன் மனத்தை வருத்தும் செய்தியாக அவன் கவுந்தியடிகளிடம் எடுத்துக்கூறுவதனால் அவர்களைப் பற்றிய எண்ணம் உயர்ந்ததாகவே இருந்தது என்பதும், அவர்கள் நலமுற்று வாழவேண்டும் என எண்ணும் விருப்பமும் தெரிகின்றது. இந்த விருப்பமும் நல்லெண்ணமும் இருந்தும்கூட மாதவியின் துயரத்தைக் கவுந்தியடிகளிடம் அவன் கூறாது விட்டுவிடுகின்றான். தன் தீது இலள்; என் தீது என்று முடிவிற்கு வந்த பிறகும் அவர்களைப் பற்றிய செய்தியைக் கோவலன் ஏன் நன்கு வெளிப்படுத்தாமல் இருட்டடிப்புச் செய்கின்றான்?

நீண்ட வழிநடைப் பயணத்தின்போது மாதவியோடும் மற்றவரோடும் வாழ்ந்த வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறினாலும் கூறி இருக்கலாம். அல்லது அவனோடு உரையாடிய காலத்தில் இந்த மறைகளை எல்லாம் கவுந்தியடிகள் உய்த்துணர்ந்தும் இருக்கலாம். எப்படியோ கோவலன் காமத்தால் கெட்டழிந்தவன் என்பதைக் கவுந்தியடிகள் நன்றாகவே உணர்ந்துள்ளார் என்று தெரிகின்றது.

புறஞ்சேரியில் 'நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி, நறுமலர் மேனி நடுங்கு துயர் எய்த' நடந்துவிட்டேன் என்று கோவலன் கூறியதும் கவுந்தியடிகள் ஒரு நீண்ட அறிவுரை கூறுகின்றார். அவ்வறிவுரையில் பல செய்திகள் கூறப்படுகின்றன. அவற்றுட் சில பகுதிகள் அவன் காமத்தாற் கெட்டழிந்ததை அவர் அறிந்துள்ளார் என்பதனைக் காட்டுகின்றன.

'பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்.
புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒரு தனி வாழ்க்கை உரவோர்க் கில்லை;
**பெண்டிரும் உண்டியும் இன்பமென் றுலகில்**
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்
கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த
**காமம் சார்பாக் காதலின் உழந்து**
ஏமம் சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால் இறந்தோர் பலரால்' 14: 35 - 44

மேலே காட்டிய பாடலில் தடித்த எழுத்தமைந்த பகுதிகளை மீண்டும் ஒருமுறை பாருங்கள். அது கோவலனின் அந்தரங்க வாழ்க்கையைக் கவுந்தியடிகள் அறிந்திருந்ததை உணர்த்தும்.

மதுரை நகருக்குச் சென்று வருகின்றேன் என்று கோவலன் கூறியதும் கவுந்தியடிகள் 35 அடிகளில் நீண்ட அறிவுரை கூறுகின்றார். அந்த அறிவுரையில் அறத்தின் தன்மையும், வினையின் வலிமையும், காமத்தின் இயல்பும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இம்மூன்றினுள்ளும் காமத்தின் குற்றமே மிகுதியாகவும் வலியுறுத்தியும் கூறப்படுகின்றது. 'காமம் சார்பாக் காதலின் உழந்து ஏமம் சாரா இடும்பை எய்தாதே' என்று எச்சரிக்கின்றார். 'பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று கருதாதே' என்றெல்லாம் எடுத்து மொழிகின்றார். இத்தனை அறிவுரைகளையும் காதாரக் கேட்டுக்கொண்ட கோவலன் மதுரை நகருட் சென்று மிகுதியாக எதனைக் காணுகின்றான்.

கடைகழி மகளிரின் காமக்களியாட்டங்களை - பதியிலாரின் இரு பெரும் வீதிகளைப் பார்த்துச் செல்லுகின்றான். அருங்கலச் செப்பின் வாய் திறந்ததுபோல அமைந்திருந்த அகமதிலுக்குள் நுழைந்ததுமே அவன் கண்ட முதற்காட்சி பொதுமகளிரின் புனலாட்டுக் காட்சிதான். பருவ காலங்களுக்கு ஏற்ற உடையணிந்து அப்பரத்தையர் ஆடும் ஆட்டம் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றது. பின்னர் வேனிற்காலக் கடைநாளில் அவர்களின் பொழுதுபோக்குக் காட்சிகள் தெளிவாக எடுத்து மொழியப்படுகின்றன. பின்னர்ப் பதியிலாரின் இருபெரு வீதிகளின் இயல்பும் எடுத்தோதப்படுகின்றது. அங்கேயிருந்த பரத்தையரின் இல்லத்துள் அவன் நுழைந்துவிடவில்லைதான். என்றாலும் அவற்றைக் கண்டு செல்வதிலே ஒரு விருப்பம் அவனுக்கு இருந்திருக்கும் போலும்.

| | |
|---|---|
| *ஊர்காண் காதையில் மொத்த அடிகள்* | *218* |
| *சூரியன் உதித்த காட்சி அடிகள்* | *6* |
| *காலை முரசத்தின் ஒலி* | *8* |
| *கோவலன் கவுந்தியிடம் கூறியன* | *10* |



| | |
|---|---|
| ***கவுந்தி கூறிய அறிவுரை*** | *37* |
| *சுருங்கை வழியாகச் செல்லல்* | *4* |
| *மதிலைக் கடந்து அகநகர்ச் சார்தல்* | *4* |
| ***கடைகழி மகளிரின் பொழுதுபோக்கும்*** | |
| ***பதியிலாரின் இருபெரு வீதியும்*** | *98* |
| *அங்காடி வீதி* | *12* |
| *இரத்தினக் கடைத் தெரு* | *21* |
| *பொற்கடைத் தெரு* | *4* |
| *அறுவை வீதி* | *3* |
| *கூல வீதி* | *4* |
| *இதர வீதிகள்* | *7* |
| *மொத்த அடிகள்* | ***218*** |

இக்காதையுள் மிகப்பெரிய பகுதியாக இருப்பது பரத்தையர் பற்றிய பகுதி. அடுத்த பெரிய பகுதி கவுந்தியடிகளின் அறிவுரை. கவுந்தியடிகளின் 37 அடி அறிவுரைகளைக் கேட்ட பிறகுதான் கோவலன் மதுரையுள் பொது மகளிர் பகுதியில் (98 அடிகளில்) சுற்றித் திரிகிறான் என்றால் கோவலனின் காம விருப்பம் எத்தகையது என்பதனை அறியலாம். வாழ்க்கையில் அடிபட்டு நொந்துபோய் வந்திருப்பதாக அவன் கூறியதெல்லாம் உண்மைதான். ஆனால் பரத்தையரைப் பார்க்க நேர்ந்ததும் அவன் சலனப்பட்டு விடுகின்றான். இந்தச்சலனத்தையும் தன் மனத்தின் பலவீனத்தையும் நன்கு அறிந்திருந்ததனால்தான் கோவலன் மாதவி நேரில் வந்து விடுமுன் இரவோடிரவாக மதுரைக்கு ஓடிவந்து விட்டான் என்பதை உணர்தல்வேண்டும். கவுந்தியடிகள் அறிவுரை கூறுதலில் வல்லவர்தான். ஆனால், கோவலன் 'நிணந் தீயில் இட்டன்ன நெஞ்சுடையவன்' ஆக அல்லவா இருக்கின்றான்.

புலவர் கு. திருமேனி அவர்கள் 'கோவலன்' என்ற நூலில் 'காமக்கிழத்தியர் வாழ்கின்ற வாழ்க்கையைக் காணுகின்றான். பின்னர் நாடகக் கணிகையர் இயல்பையும் வாழிடங்களையும் பார்க்கின்றான். இவற்றையெல்லாம் கண்டும் காணாதான் போன்று கலக்கமுறாது செல்கின்றான்' எனக் குறிப்பிடுகின்றார். அவன் கண்டும் காணாதவனாகச் சென்றிருந்தால் அதனை ஓர் அடியிலாவது இத்தெருக்களை விலகி நடந்தான் என்று அடிகள் கூறியிருப்பர். அவ்வாறு கூறாமையே அவன் கண்டு மகிழ்ந்து சென்றதைக் காட்டும்.

இதனைக் கண்டு மகிழும் உள்ளம் அவனுக்கிருந்திருந்தால் பரத்தையர் இல்லத்தினுள் அவன் நுழைந்திருப்பானே, அவ்வாறு நுழையாமையே அவன் திருந்திவிட்டான் என்பதை எடுத்துக்காட்டவில்லையா

என்று சிலர் கேட்கக் கூடும். அவ்வீடுகளில் நுழைவதற்கு முதல்தேவை யாக எது வேண்டுமோ அஃது அவனிடம் இல்லை. ஆம்; பொருள் அவனி டம் இல்லை. பொருளில்லா வறுமையாளனுக்குப் பொதுமகளிர் வீட்டுக் கதவுகள் திறப்பதில்லையே. அவனிடமிருந்தவை சிலம்புகள் மட்டுமே. அவையும் புறஞ்சேரியில் அல்லவா இருக்கின்றன. இந்நிலையில் அவன் எப்படி அவர்கள் வீட்டினுள் நுழைவான். 'கிழவிகள் எல்லாம் பதிவிரதை யரே' (விருத்தநாரி பதிவ்விரதா) என்றொரு பழமொழி வடமொழியில் உள்ளதாகக் கூறுவார்கள். அதுபோல இங்கே கோவலன் இயலாமையால் நுழையாது திரும்பியதனைத் திருந்தியமையால் தான் அவ்வாறு திரும் பினான் என்று கூறுவது பொருத்தமில்லை. உண்மையில் அவன் திருந்திய வனாக இருந்திருந்தால் இவற்றைக் காணாது வந்திருக்கவேண்டும். அல்லது இவற்றைக் கண்டு முகஞ்சுளித்தான், விலகி வேறுபகுதிக்குப் போனான் என்பதாகவாவது அடிகளால் கூறப்பட்டிருக்கவேண்டும். இரண்டுமற்ற நிலையில் அவன் திருந்தினான் என்பது அவ்வளவு பொருத்தமில்லை.

### ஊடலும் கோவலனும்

கோவலனுடைய பாலியல் வக்கிரம் பற்றிய இன்னொரு செய்தி இன்னும் வியப்பூட்டுவதாக உள்ளது. ஊடல்தான் இன்பத்தை மிகுவிப் பது; ஊடலற்ற துய்ப்பு உப்புச் சப்பற்றது என்பார் திருவள்ளுவர். ஆனால் கோவலனுகு ஊடலே பிடிக்காது. மகளிர் ஊடுவது அறவே அவனுக்குப் பிடிக்காது. அவன் வேண்டுமானால் ஊடுவான். அப்பொழுது அவள் அவன் ஊடலைத் தணித்துக் கூடவேண்டும். ஆனால் அவள் ஊடுவதற்கு அவன் அனுமதிப்பதே இல்லை என்று தெரிகின்றது. இதனைக் கண்ணகி மாதவி ஆகிய இருவரிடத்துமே அவன் கைக்கொண்டு ஒழுகினான் என்பது அறியக் கிடக்கின்றது.

கண்ணகி கோவலன் வாழ்க்கையில் ஊடல் நிகழ்ந்ததாக அடிகள் எங்குமே கூறவில்லை. ஆனால் மாதவியுடன் வாழ்ந்த வாழ்வில் ஊடல் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. கண்ணகியைத் திருமணம் செய்து கொண்ட அணிமைக் காலங்களில் அவன் இழுத்த இழுப்பிற்கு அவள் உடன்பட்டு நடந்திருக்கக்கூடும். ஆனால் நாளாக நாளாக,

> அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,
> துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்,
> விருந்தெதிர் கோடலும்' 14 : 71 - 73

ஆகிய இல்லறக் கடமைகளால் கோவலன் நினைத்தபோதெல்லாம் 'கூடிக் கலக்க' இயலாது போயிருக்கும். இன்பம் நுகரத் தடையிருக்கு மானால் வருத்தம் கொள்ளுதல் கோவலன் இயல்பு. இந்த வருத்தம் ஊடலாக உருவெடுத்திருக்கலாம். கண்ணகி அவன் ஊடலைப் போக்கும் முயற்சியில் ஈடுபடாது இல்லறக் கடமைகளில் ஈடுபட்டிருப்பாள்



போலும். கண்ணகிக்குக் கோவலனைப் பிரிந்த வருத்தத்தைவிட அவன் பிரிந்ததனால் இல்லறக் கடமைகளை ஆற்றமுடியாமையே அதிகம் வருத்துகின்றது. அதனால்தான் 'விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்று வருத்தத்தோடு குறிப்பிடுகின்றாள். கோவலனின் நுகர்வு வேட்கைக்கு இணையான நுகர்வு வேட்கை கண்ணகிக்கு இல்லாமையும், கண்ணகியின் கடமைப்பற்றும் கோவலனை மாதவி வீட்டிலே கொண்டுவந்து சேர்த்துவிட்டன.

மாதவிக்கு இல்லறக் கடமைகள் ஏதும் இல்லை. ஆகவே கோவலன் வேட்கைக்கு ஓரளவு ஈடுகொடுக்கின்றாள். அதுமட்டுமன்று. கோவலனை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டவளும் இவள்தான். ஊடினால் ஓடிவிடுவான் என்பதைப் பட்டுத் தெளிந்தவள் அவள். இவள் பட்டுத் தேறிய அந்த நிகழ்ச்சியைக் கோவலன் வாய்மொழியாலேயே அறிகின்றோம். மாதவியின் திருமுகத்தை எடுத்துவந்த வயந்தமாலை யிடம் அதனை மறுக்கும்பொழுது அவன் கூறும் காட்சிவரி முதல் எடுத்துக்கோள்வரி வரை உள்ள பகுதிகள் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

> திலகமும் அளகமும் சிறுகருஞ் சிலையும்
> குவளையும் குமிழும் கொவ்வையும் கொண்ட
> மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
> காதலின் தோன்றிய கண்கூடு வரி. 8: 74 - 77

இவ்வடிகள் முதன்முதலாகக் கோவலனை மாதவி சந்தித்த நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. கோவலனுக்கும் மாதவிக்கும் ஏற் பட்ட தொடர்பு களவியல் சார்ந்ததா? மாலையை வாங்கியதனால் ஏற் பட்ட பொருள்வழித் தொடர்பா? என்ற வினாவை எழுப்பினால் பொருள்வழித் தொடர்பு என்பதைவிடக் களவியல் சார்ந்தது என்பதற்கும் தகுந்த ஆதாரம் உள்ளது. அதனைப் பின்னர்க் காண்போம். இங்கே அவர்தம் உறவு களவு வழிப்பட்டதே என்பதனைக் குறிப்பால் நமக்குக் காட்டும் பகுதி இது என்பதை நினைவிற்கொண்டு பார்க்க வேண்டு கிறேன்.

> புயல்சுமந்து வருந்தி பொழிகதிர் மதியத்து
> கயல்உலாய்த் திரிதரும் காமர் செவ்வியின்
> பாகுபொதி பவளம் திறந்துநிலா உதவிய
> நாகிள முத்தின் நகைநலம் காட்டி
> வருகென வந்து போகெனப் போகிய
> கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும் 8: 78 - 83

இப்பகுதி கோவலனும் மாதவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்த செய்தியைக் குறிக்கின்றது. அவன் வருக என்றழைத்தபோது வந்தாளாம். போ எனச் சொன்னபோது போனாளாம். இப்படிக் கொஞ்ச காலம்

கழிந்திருக்கும் போலும். இனிமேல்தான் சிக்கல் தொடங்குகிறது.

அந்தி மாலை வந்ததற் கிரங்கி
சிந்தைநோய்கூரும் என் சிறுமைநோக்கிக்
கிளிபுரை கிளவியும் மடஅன நடையும்
களிமயிற் சாயலும் கரந்தன ளாகிச்
செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து
ஒருதனி வந்த உள்வரி யாடலும் 8: 84 - 89

மாதவி ஊடல் கொண்டதனை இப்பகுதி உணர்த்துகின்றது. மாலை வந்துவிட்டால் அவனுக்கு ஒருவித நோயும் வந்துவிடும் என்ப தனை முதலிரண்டு அடிகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அது மட்டுமன்று; அந்தி மாலை வந்ததும் சிந்தை நோய் மிகுவது சிறுமை என்பதை அவன் உணர்ந்தே இருக்கின்றான். உணர்ந்தும் அதனை ஒழிக்க முடியாதவனாக உள்ளான். இதுதான் கோவலனின் தனி இயல்புகளில் குறிப்பிடத்தக்கது. வருக என வந்து போ எனப் போகியவளாக அவள் நடவாமல் கிளிபோலும் இனிய மொழி பேசாமல், அன்ன நடை நட வாமல், மயில் போன்ற சாயலைக் காட்டாமல் அனைத்தையும் மறைத்துக்கொண்டு ஊடினாள் என்கின்றான். கிளிபோன்ற மொழி பேச வில்லை என்றால் எரிச்சலூட்டும் மொழி பேசினாள் என்பது பொருள். அன்னம்போல் நடக்கவில்லை என்றால் சினத்தைக் காட்டும் வகையில் கால்களை உதறிக்கொண்டு நடந்தாள் என்பது பொருள். மயில் போலும் சாயலை மறைத்தாள் என்றால் வெறுக்கத்தக்க தோற்றத்தைக் காட்டினாள் என்பது பொருள். 'செருவேல் நெடுங்கண் சிலதி' என்ற சொல்லால் மாதவி கண்களில் தோன்றிய வெறுப்பு நன்கு புலப்படுத்தப் படுகின்றது. ஆக, சிறு ஊடலின் தொடக்க நிலை என்று அறிகிறோம்.

'சிலம்புவாய் புலம்பவும் மேகலை ஆர்ப்பவும்
கலம்பெறா நுசுப்பினள் காதல் நோக்கமொடு
திறத்துவே றாயஎன் சிறுமை நோக்கியும்
புறத்து நின்றாடிய புன்புற வரியும் 8: 90 - 93

மாதவியைப் பிரிந்ததனால் (கூடாததனால்) தான் பெற்ற சிறு மையை (வருத்தத்தை) அறிந்தும் அவள் அறியாதாள் போல் நடந்து கொள்கிறாளே எனக் கோவலன் வருந்துகின்றான். சிலம்புகள் புலம்பின என்றால் கால்களை அவள் அதிர எடுத்து வைக்கின்றாள் என்று பொருள். மேகலை ஆர்த்தன என்றால் அவள் அங்கும் இங்கும் சினக்குறிப்போடு திரும்பித் திரும்பிச் செல்கின்றாள் என்று பொருள். காதல் நோக்கம் உடையவள் போலத் தோன்றுகின்றாளே தவிர ஊடல் தணியாதவளாக இருக்கின்றாள் என்பதைக் கோவலன் நன்கு எடுத்துக்காட்டுகின்றான். இஃது அவளுடைய ஊடலின் வளர்ச்சி நிலை. இனிமேல்தான் அவள் ஊடலின் உச்சநிலையைப் பார்க்கப் போகிறோம்.



கோதையும் குழலும் தாதுசேர் அளகமும்
ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும்
மின்னிடை வருத்த நன்னுதல் தோன்றி
'சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி உய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிள்வியின்
இருபுற மொழிப்பொருள் கேட்டனள் ஆகித்
தளர்ந்த சாயல் தகைமென் கூந்தல்
கிளர்ந்துவே றாகிய கிளர்வரிக் கோலமும்' 8: 94 - 101

நான் புணர்ச்சி விருப்பத்தால் சிறு குறுந்தொழிலியரை (ஏவற் பெண்டிரை) அழைத்து என் விழைவினைக் கூறிவிடுக்கவும் அவள் (மாதவி) இருபுற மொழிப்பொருளாகக்கொண்டு அதாவது நான் புணர்ச்சி விருப்பத்தாற் கூறிய சொற்களைப் புலந்து கூறிய சொற்களாகப் பொருள் கொண்டு புலவியால் வேறுபட்டுப் போனாள் என்கின்றான். 'புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியின் இருபுற மொழிப்பொருள்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் -

'யான் புணர்ச்சி நிமித்தமாகப் புலந்து தன் சிலதியர்க்குச் சொல்லி விட்ட மொழியைக் கேட்டு அப்படியன்றிப் புலந்து சொன்னேனாக நடித்துப்போன நடிப்பு' என எழுதுகின்றார். வேறாகிய என்பது கிளர்ந்து வேறாகிய என்பதனால் சினத்தோடு மாறுபட்ட முகக்குறிப்பினளாய் இருந்தாள் என்கின்றான் கோவலன். இது ஊடலின் உச்சக்கட்டம். இந் நிலையில் கோவலன் மிக்க வெறுப்போடு மாதவியைப் பிரிந்து சென்றி ருக்கின்றான்.

திருவள்ளுவர் 'ஊடியவரை உணராமை வாடிய வள்ளி முதலரிந் தற்று' என்பார். ஊடியவரின் ஊடலைத் தணிவித்துக் கூடாது செல்வது நீரின்றி வாடிக்கிடக்கும் வள்ளிக்கொடியை அடியோடு அறுப்பது போன்றதாகும். ஊடலின் உச்சநிலையில் இருந்த மாதவியின் ஊடலைத் தணிக்காது வள்ளிக்கொடியை முதலோடரிவது போல மாதவியின் அன்பாம் கொடியை அடியோடு அறுத்துச் செல்கின்றான். பின்னர்தான் மாதவிக்குப் புரிகின்றது. கோவலன் ஊடப்பொறாத உள்ளத்தன் என்பது.

'பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
என்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரம்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி அன்றியும்;
வண்டலர் கோதை மாலையுள் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்;
அடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்கம்
எடுத்தவர் தீர்த்த எடுத்துக் கோள் வரியும்' 8: 102 - 108

பிரிந்துசென்ற கோவலனின் கிளைகட்குத் (உறவாயினார்க்கு) தன்னுடைய துயரத்தை எல்லாம் எடுத்துக்கூறி அவனைத் தன்னில்லத்

திற்கு அழைத்து வருமாறு வேண்டினாள். பின்னர் அவன் வாராமை யாலே மாலைக் காலத்திலே கிளையாயினாரை எல்லாம் அழைத்துத் தன் துயரத்தை வெளிப்படுத்த அந்த அளவிலே அவள் மயக்கமுற்றாள். பின்னர் மயக்கந்தெளிந்து தன்னுழையழைத்து வருமாறு வேண்டினாள். இவ்வாறு பலமுறை வேண்டியதன் பயனாகக் கிளையாயினாரின் உதவி யோடு கோவலன் மாதவியின் இல்லத்தை வந்தடைந்தான். இதனையெல் லாம் மாதவி நாடகக்கணிகையாதலின் நன்றாக நடித்துள்ளாள் என்று கூறுகின்றான்.

வாழ்க்கையில் ஒரோவொருமுறை கொண்ட ஊடல் மாதவியின் வாழ்க்கையையே நாசமாக்கிவிடும்போல் ஆகிவிட்டது. ஆகவே அன்றே அவள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள். அது என்ன முடிவு? 'இனிமேல் இன்பத்தை மிகுவிக்கும் பொருட்டுக் கோவலனோடு ஊடுவதில்லை' என்பதுதான். இதனை எவ்வாறு அறிகிறோம்.

'கூடலும் ஊடலும் கோவலற் களித்து' 6 : 109

கலவியும் புலவியும் காதலற் களித்து' 4 : 32

என்ற தொடர்களால் அறிகிறோம். இத்தொடரில் ஒரு நுட்பம் உள்ளது. கோவலனுக்கு அளித்தாள். எவற்றை? கூடலையும் ஊடலையும். கூடலால் வரும் பயனையும், ஊடலால் வரும் பயனையும் கோவல னுக்கு அளித்தாள் என்று பொருள் கொள்ளக்கூடாது. அவ்வாறு கொண் டால் அது கோவலன் இயல்பறியாமற் கொண்ட பொருளாகும். வேறு என்ன பொருள்? கூடுகின்ற உரிமையையும் ஊடுகின்ற உரிமையையும் கோவலனுக்கே அளித்துவிட்டாள். தன் விருப்பத்திற்கு கூடுதற் குறிப்பையும் தன் விருப்பத்திற்கு ஊடுதற் குறிப்பையும் கொள்ளாது, அவ்விரண்டையும் அவனுக்கே உரிமையாக்கிவிட்டாள் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும். ஒருமுறை அறியாமையால் ஊடியதற்குரிய விலையை மாதவி அளவிற்கதிகமாகவே கொடுத்துவிட்டாள். புலவர் கு. திருமேனி அவர்கள் கோவலன் என்ற நூலில், கோவலன் குறிப்பறிந்து அவனது காமச் சிறுமை கண்டு, வேட்டொறும் வேட்டொறும் வேறு வேறாய இன்பமளித்தாளன்றித் தனக்கென ஓர் இன்பம் விழைந்தாளல் லள். கோவலனை ஊடவைப்பதையும் அவனை மீட்டும் கூட வைப்பதை யுந்தான் தனக்கு இன்பமாக்கிக் கொண்டாளன்றி அவனுக்கு இன்பப் பகுதியில்கூட ஒரு தொல்லை தந்தாளல்லள் என்று எழுதுவது இங்கு ஒப்பு நோக்கி அறியத்தக்கது. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்ன? உறவு, அன்பு என்பதெல்லாம் கோவலனுக்குப் பொருட்டன்று. தன் இச்சையை நிறைவு செய்விக்காத எந்த உறவையும், எந்த அன்பையும் அவன் அறுத்தெறியத் தயங்க மாட்டான் என்பதுதான்.

### அறிமுகத்தில் ஒரு செய்தி

குறையா உடற்பசி; இயல்பலா ஒழுக்கம் உள்ளவனே கோவலன்



என்பதனை அவனைத் தொடக்கத்தில் அறிமுகம் செய்யும்பொழுதே காட்டிக்காட்டி விடுகின்றார் இளங்கோவடிகள். காப்பிய முழுவதிலும் தோன்றும் அவன் செயற்பாடுகளை அச்சுட்டிக்காட்டுதலின் விரிவாகவே காண்கின்றோம்.

'மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்என் றிசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்மன்னோ'

1:36-39

கோவலனைச் சுற்றிலும் எப்பொழுதும் இளம்பெண்களின் கூட்டம் இருந்துகொண்டே இருக்கின்றது. அக்கூட்டம் சும்மா இருக்க வில்லை. அவனை எப்பொழுதும் பாராட்டிக்கொண்டே இருந்தது. என்ன சொல்லிப் பாராட்டினர்? செவ்வேள் (முருகன்) என்று பாராட்டினர். முரு கன் யார்? தேவயானை இருக்கின்ற பொழுதே வள்ளியை நாடிச் சென்ற வன். அத்தகையவனைக் காதலால் கொண்டேத்துகின்றனர். அவ்வாறு ஏந்திக் கூறுவதற்கு அவன் உரிமையுடையவனாக விளங்கினான். எப் பொழுதும் மகளிர் கூட்டத்தோடு சுற்றித்திரியும் இயல்புள்ளவன் கோவலன் என்பதைத் தெளிவாகவே எடுத்துக்கூறி அறிமுகம் செய்கின் றார் இளங்கோவடிகள். 'கிழமையான்' என்ற சொல்லாட்சியால் அப் பெண்களுக்கும் அவனுக்கும் இருந்த நெருக்கமும் இறுக்கமும் நன் றாகவே எடுத்துக் காட்டப்படுகின்றன.

திருமணத்துக்கு முன்பே கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்ந்திருக் கின்றான் என்பது தெரிகின்றது. இப்படிச் 'சுற்றித் திரிந்த சுதந்திரனை' இல்லறம் என்ற கண்ணகியின் கூட்டுக்குள்ளும் அடைக்கமுடியவில்லை. கலை வாழ்வு என்ற மாதவியின் கூட்டுக்குள்ளும் அடைக்க முடிய வில்லை. அந்த வேட்கைப் பறவை எப்பொழுதும் பறந்து திரியவே விரும்பியுள்ளது என்பதனைக் கோவலன் வாழ்க்கையின் எல்லாப் பகுதி களிலும் சந்திக்கின்றோம். ஆணுக்கு முதன்மையும் பெண்ணடிமைத் தனமும் மிகுந்த சமுதாயத்தில் கண்ணகிக்கு முதன்மை கொடுத்து முதலாவதாக அவளை அறிமுகப்படுத்துவதுகூடக் கோவலனுடைய குறைபாடு கருதித்தான் போலும். இக்குறைபாடு இருப்பதனால்தான் கோவலனை இரண்டாவதாக அறிமுகப்படுத்துகின்றார் இளங்கோவடிகள்.

### சலம்புணர் கொள்கைச் சலதி

கோவலன் இன்பியற் பகுதியில் எப்படி நடந்துகொண்டான் என்பதையும், ஊடலைக்கூடப் பொறுத்துக் கொள்ளாது ஓடிவிடும் மன இயல்பு வாய்ந்தவன் என்பதையும் முன்னர்க் கண்டோம். சினம் வந்துவிட்டால் எந்தப் பழியையும் யார்மீதும் சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ளும் இயல்பினனாகவும் அவன் இருக்கின்றான் என்பதையும்

இனிக் காணவேண்டும். 'வேண்டாத மருமகள் கால்பட்டாலும் குற்றம்; கைபட்டாலும் குற்றம்' என்று மாமியார் விளக்கப் பழமொழி ஒன்று உண்டே! இத்தகைய மாமியார் மனநிலை கோவலனிடம் நிரம்ப இருக்கின்றது.

கானல்வரிப் பாடலுக்குப்பின் மாதவியை விட்டு வெளியேறி வந்த போது இருந்த சிறுகோபம் நேரம் செல்லச் செல்ல அதிகமாகிக் கொண்டே போகின்றது. இந்நிலையில் மறுநாள் மாதவியின் முடங் கலை வயந்தமாலை கோவலனிடம் கொண்டுவருகின்றாள். அவனுள் புகைந்துகொண்டிருந்த கோபம் இப்பொழுது கொழுந்து விட்டெரியத் தொடங்குகின்றது. மாதவியை மனம் போனவாறு பழித்துப்பேசி மாதவி யின் முடங்கலை வாங்கிக்கொள்ளாமலேயே திருப்பி அனுப்பிவிடு கின்றான். கோவலனுக்குச் சினம் வந்தால் அது எப்படியிருக்கும் என்ப தற்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றை நினைவுகூர்ந்து கோவலன் கூறும் கண்கூடு வரிமுதலாக எடுத்துக்கோள் வரி ஈறாகச் சொல்லும் முதற்பூசல் நிகழ்ச்சி நல்ல எடுத்துக்காட்டு என்பதை நாம் மறத்தலாகாது. கோவலன் அடங்காக் காமத்தன் மட்டுமல்லன்; அடங்காச் சினத்தனும் ஆவான் என்பதை நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

வயந்தமாலையைத் திருப்பியனுப்பிய பிறகு அவனுடைய சினம் இன்னும் வளர்ந்திருக்கும் போலும். ஆகவே நேரே கண்ணகியை நாடி வருகின்றான். வந்தவன் கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வருத் தம் கொள்கின்றான். அந்த வருத்தம் அவனுடைய சினத்தை மேலும் வளர்த்திருக்கும்போலும். அந்தச் சினத்தின் எல்லையில் நின்று

'யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு. 9: 68 - 71

என்கின்றான். இயல்பாக ஆடுவதற்குச் சாம்பிராணி போட்டால் இன் னும் தலையை விரித்துப் போட்டுக்கொண்டு ஆடும் என்பார்களே அதைப்போல, இயல்பாகவே கோவலன் மிகுந்த சினத்தோடு வரு கிறான். அவன் நேரே கண்ணகியின் படுக்கையறைக்குள்ளே நுழைகின் றான். அங்கே அவள் வாடிய மேனியோடு வருந்திய நெஞ்சோடு இருப்ப தனைப் பார்க்கின்றான். படுக்கையறைக்குள்ளே நுழைந்தாலே அவன் உடலில் ஒரு வேதியல் மாற்றம் நிகழ்ந்துவிடுமே! அதிலும் இரவில் அல்லவா அவன் அங்கே நுழைந்திருக்கின்றான். அவ்வேதியல் மாற்றம் மாதவியின் மீது சொல்லம்புகளைப் பாய்ச்சுகின்றது. பொய்யையே மெய்யாகக் கொண்டொழுகும் அப்பொய்ம்மகளோடு (மாதவியோடு) ஆடியதனால் குலத்தினர் தொகுத்துத் தந்த பெரும் செல்வம் தொலைந்தது; இதனால் வந்த வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது' என்கின்றான்.



இதில் 'யாவும்' என்றொரு சொல் பெய்யப்பட்டிருப்பதனை நினைவிற்கொள்ள வேண்டும். 'யாவும்' என்ற சொல் எச்செய்தியோடு தழுவுகின்றது?'

வாடிய மேனியும் வருந்திய நெஞ்சமும் ஆகிய யாவும் சலம்புணர் கொள்கைச் சலதியோடாடியதனால் வந்தது என மேலே உள்ள தொட ரோடும் இயையும். அவ்வாறின்றி, 'குலம் தரு வான்பொருள் குன்றம் யாவும் சலம்புணர் கொள்கைச் சலதியோடாடித் தொலைந்தது' எனவும் இயையும்.

முதலாவதாகக் கூறியது பொருத்தமற்றது. இரண்டாவதாகக் கூறியதுதான் ஏற்றது. ஏனெனில் 'இலம்பாடு நாணுத்தரும் எனக்கு' எனக் கோவலன் முடிக்கின்றான். இலம்பாடு பற்றிய செய்தி வருவதனால் யாவும் என்பது வான் பொருட் குன்றத்தோடு இயைவதுதான் பொருத்தம். மேலும் 'யாவுந் தொலைந்தன' என்று கோவலன் கூறியிருந்தால்தான் கண் ணகி அதற்கு விடையாகச் 'சிலம்புள கொண்ம்' என்று கூறியிருக்க முடி யும். ஆக முன்னும்பின்னும் உள்ள தொடர்புகளைக் கொண்டு பார்க் கின்றபொழுது 'யாவும்' என்பது வான்பொருட் குன்றத்தோடு இயைவது தான் பொருத்தமாகும்.

இவ்வாறு பொருள் கொண்டால் எச்சமின்றி எல்லாப் பொருளும் தொலைந்ததற்குக் காரணம் சலம்புணர் கொள்கைச்சலதி (மாதவி)யோடு ஆடியதுதான் என்றாகிறது. கோவலன் உண்மையில் மாதவிக்காகவே எல்லாப் பொருளையும் செலவழித்தானா? கோவலனின் இக்கூற்று உண் மையா? இஃது உண்மையில்லை என்பது தான் விடை.

ஒருவன் வறுமையடைவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று பொருளீட்டாதிருப்பது; இன்னொன்று வருவாய்க்கு மேல் செலவு செய்துகொண்டே இருப்பது. செலவுக்குமேல் பொருளீட்டினால் அங்கே வறுமைக்கு இடமில்லை. கோவலன் பொருளீட்டினான் என்று இளங் கோவடிகள் எங்குமே கூறவில்லை. பொருளீட்டாதவன் வறியனாவது ஒன்றும் புதுமையில்லை. ஆக இவன் வறுமையிற் சரிபாதி பொருளீட் டாமையால் வந்தது என்பதே உண்மை. எஞ்சிய இன்னொரு பாதி வறுமை செலவழித்துக்கொண்டே இருந்ததனால் வந்தது. செலவழித்த தனால் வந்த வறுமை முழுவதுமாவது மாதவியால் நிகழ்ந்ததா? அதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

1. 'கண்டேத்தும் செவ்வேள்' என்று பாராட்டித் திரியும் ஒரு மகளிர் கூட்டம் அவனை எப்பொழுதும் (திருமணத்திற்கு முன்பு) சுற்றிவந்து கொண்டிருந்ததே, அக்கூட்டத்திற்கு இவன் செலவு செய்யாமல் இருந் திருப்பானா? ஒரு பயனும் இல்லாமல் இச்செல்வர் வீட்டுப்பிள்ளையை எந்தப் பைத்தியக்காரியும் சுற்றித் திரியமாட்டாள். இங்கே ஒரு பைத்தியக் காரியல்லள்; ஒரு கூட்டமே சுற்றித்திரிந்திருக்கின்றது. இதற்கு அவன் எவ்வளவு செலவு செய்திருப்பான்?

2. நகையாடு ஆயத்தார்கள், குரல்வாய்ப்பாணர், நகரப் பரத்தர் - இவரோடெல்லாம் நாள்தோறும் சுற்றித் திரிந்தவன் கோவலன். பரத்தரும், பாணரும், ஆயத்தாரும் பிறர் நலம் பேணும் தொண்டாகத் தொழிலாற்றியவர்கள் அல்லர். சுரக்கின்ற வரையிலும் கறக்கின்றவர்கள் என்பதுதான் வரலாறு. இவன் மட்டும் அவர்களுக்கெல்லாம் பொருள் வழங்காதிருப்பின் மறுநாளே இவன் தன்னந்தனியாக ஆகியிருப்பான். இவனோ புகாரில் வாழ்ந்த நாளெல்லாம் அவர்களோடு சுற்றித்திரிந்துள்ளான். அப்படி என்றால் அவர்களுக்காக அவன் எவ்வளவு பொருள் செலவு செய்திருப்பான்?

3. மாதவிக்கு மகள் பிறந்தபோது - ஆம் மணிமேகலை பிறந்த போது - அணிமேகலையார் ஆயிரம் கணிகையர் மணிமேகலை எனப் பெயரிட்டு வாழ்த்தியபோது.

'மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையின் பொழிந்தானே 15 : 40 - 41

இது என்ன சாதாரணப் பொருட்செலவா? மழைபோல் அல்லவா பொன்னைப் பொழிந்திருக்கின்றான். மழை இன்னாருக்கு என்று வரைந்து பொழிவதில்லை. அது போலவே கோவலனும் எல்லார்க்கும் வாரிவழங்கி அறத்தின் பயனைப் பெற்றுள்ளான். அன்று எவ்வளவு பொருள் செலவாயிற்றோ?

கீரியைக் கொன்ற பார்ப்பனியின் துயரத்தைத் தீர்ப்பதற்காகத் தானம் செய்துள்ளான்; காட்டுக்குச் சென்ற அவள் கணவனை அழைத்து வந்து தொலையாத பெரும்பொருளைக் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளான். இளங்கோவடிகள் இதனை 'ஒல்காச் செல்வத்து உறுபொருள்' என்று குறிப்பிடுவார். இதற்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? கோவலன் உற்ற வறுமையில் இதற்கும் பங்கு உண்டல்லவா?

பொய்க்கரி சொன்னான் ஒருவனைப் பூதம் அறைந்து கொல்ல அவனுடைய சுற்றத்தாரையும் அவர்களோடு தொடர்புடையவர்களையும் அழைத்து ஓராண்டு, ஈராண்டு அல்ல, பல ஆண்டுக்காலம் பாதுகாத்துள்ளான். சுற்றம், கிளை இரண்டையும் கூட்டினால் எத்தனை எண்ணிக்கையரோ? பல ஆண்டுக்காலம் புரக்க எவ்வளவு செலவாயிற்றோ? கோவலன் கொண்ட வறுமையில் இதற்கும் பங்கு உண்டு தானே?

4. கோவலனுடையை இல்லம் மிகப்பெரிய வளமனை, ஏராளமான ஏவலர்கள், பணிப்பெண்கள், காவலர்கள் என ஒரு பெரிய கூட்டமே அங்கே இருந்தது. இவை தவிரக் கோவலனின் நியாயமான வேறு பொருட் செலவுகள். இவையெல்லாம் செலவுதான். இவை செலவென்றால் வறுமை வந்ததற்கான காரணங்களில் இவையும் சேர்த்துக்கொள்ளப்



பட வேண்டியவைதானே!

5. மாதவியின் பொருட்டும் அவளுடைய விருப்பங்களை நிறைவேற்றவேண்டும் என்ற வேட்கையினாலும் பொருட்செலவு நிகழ்ந்தே இருக்கும். அந்தச் செலவு மாதவியால் உண்டாக்கப்பட்டதா? கோவலனே விரும்பிச் செய்ததா? என்றால் கோவலனே விரும்பிச் செய்ததாகத் தான் இருக்கமுடியும். கோவலனா? பொருளா? என்ற வினா எழுந்த போது கோவலனே என்று முடிவெடுத்துத் தன்னுடைய பெருஞ்செல்வத்தைப் போதியின் கீழ் மாதவர்முன் புண்ணியதானம் செய்தவள் மாதவி. ஆகவே அவள் செல்வத்தைப் பறிக்கும் எண்ணத்தோடு நடந்திருக்கமுடியாது. ஆகப் பத்து விழுக்காடுதான் மாதவிக்காகக் கோவலன் செலவு செய்திருக்கின்றான். தொண்ணூறு விழுக்காடு வேறுவகைகளில் செலவுசெய்துள்ளான் என்பது வெள்ளிடைமலை.

மற்றும் ஒரு செய்தி. மாதவி பொருள் வருவாய்க்காகக் கோவலனையே நம்பியிருக்கவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் நாள்தோறும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் வருவாயுடைய தலைக்கோல் அரிவை என்னும் தகுதியையும் பெற்றவள். அவளுக்கே பெரும் பொருட்செல்வம் இருக்கின்ற பொழுது கோவலனுடைய செல்வத்தைப் பறித்துக் கொள்ள வேண்டிய இன்றியமையாமையும் இல்லை.

மாதவிக்காகப் பத்து விழுக்காடு செலவு செய்துவிட்டு குலம்தரும் வான்பொருட் குன்றம் யாவும் சலம்புணர் கொள்கைச் சலதியோடாடித் தொலைந்தது என்கின்றானே இது சரியா? 'மாதவியைச் சலம்புணர் கொள்கைச் சலதி' என்று துணிந்ததனால் விளைந்த சினத்தினால்தான் வேறு வழிகளில் செலவு செய்து வறுமையுற்றதையெல்லாம் மாதவியின் தலையிலே சுமத்துகின்றான். ஆக, சினம் வந்தால் தன் பழியையும் பிறர் மீது சுமத்தத் தயங்காத மனம் உடையவன் கோவலன் என்பது போதரும்.

பண்டேய்த்த மொழியினார் ஆயத்தரோடும், வயந்தமாலை மற்றும் பரத்தையரோடும், குரல்வாய்ப் பாணரோடும் நகரப் பரத்தரோடும் ஆடி அதனால் பொருளை இழந்து வறுமையுற்றான் கோவலன் என்பதனைக் கண்டோம். இந்நிலையில் கோவலன் என்ன கூறியிருக்க வேண்டும், உண்மை கூறும் இயல்புடையவனாக இருந்தால்?

'சலம்புணர் கொள்கைச் சலதியரோ டாடி' என்றுதான் கூறியிருக்க வேண்டும். அவன் உண்மை உரைப்பவன்தான், சினமில்லாத போது. சினம் வந்துவிட்டால் கோவலனின் மனம் சினத்துக்காளானவர் மீது எள்ளளவு இரக்கமும் காட்டாது; எத்தகைய பழியையும் சுமத்தத் தயங்காது. அத்தகையதொரு 'இரும்புமனம்' கோவலனுக்கு.

இனிச் 'சலம்புணர் கொள்கைச் சலதியோடாடிக் குலம்தரு வான் பொருட் குன்றம் தொலைந்த இலம்பாடு நாணுத்தரும்' என்ற தொடருக்குத் திருவாளர் புலவர் கு. திருமேனியவர்கள் கோவலன் பொருள் ஈட்

டாது செலவழித்தவன் அல்லன் என்றும் பொருளீட்டியவனே என்றும், கப்பல் கவிழ்ந்ததால் வறுமையுற்றவனே என்றும் கூறி கீழ்க்கண்டவாறு பொருளுரைக்கின்றார்.

'நடுக்கம்மிக்க இயல்புடைய கடலிடத்து இயங்கித் தன் குலவழி வந்த பொருளை இழந்ததால் வந்த வறுமை நாணத்தைத் தருகின்றது.'

புலவர் திருமேனி அவர்களின் புத்துரை காணும் முயற்சி நன்றாக இருக்கின்றது. ஆனால் இஃது உண்மையிலிருந்து விலகி வெகுதூரத்தில் நிற்கின்றது. சலம், ஆடி என்ற சொற்களுக்குப் புதுப்பொருள் கண்டுவிட்டார். ஆனால் நாணுத்தரும் என்ற தொடருக்கும் மேலே உள்ள செய்திக்கும் தொடர்பில்லாமல் உள்ளதை அவர் காணத் தவறிவிட்டார்.

கடல் வாணிகத்தின்போது கலங் கவிழ்ந்ததாலோ வாணிகத்தில் ஏற்பட்ட நட்டத்தாலோ அவன் பொருளை இழந்திருந்தால் அதற்காக அவன் ஏன் நாணவேண்டும்? கலங் கவிழ்வதும், நட்டம் வருவதும் இயல்பு. இதற்காக நாணவேண்டும் என்று யாரும் சொன்னதுமில்லை; இதுவரை யாரும் நாணியதுமில்லை.

மனிதன் எப்பொழுது நாணுவான்? தவறிழைத்து - அத்தவற்றைத் தானுணர்ந்தபோது நாணுவான். அதுதான் இயல்பானது.

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னு முலகு 1015

என்பது குறள், ஆகப் பழி அல்லது தவறு செய்தவிடத்துத் தோன்றுவதே நாணம். கடல் செய்த தவற்றுக்கும், காலவயத்தால் ஏற்பட்ட நட்டத்திற்கும் கோவலன் ஏன் நாணவேண்டும்? இனி வறுமையை

**பெருமை தரும் வறுமை**

**சிறுமை தரும் வறுமை**

**பெருமையும் சிறுமையும் அற்ற வறுமை** - என மூன்று வகையாகப் பிரிவு செய்யலாம்.

பெருமைதரும் வறுமையாவது மற்றவர்களுக்காக உதவி செய்து உதவி செய்து அதனால் வறுமையைப் பரிசாகப் பெறுவது. இதனைத் திருவள்ளுவர்.

'ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து' 220

என்பார்.

இந்த வறுமை போற்றத்தக்க பெருமை தரும் வறுமை.

இனிச் சிறுமை தரும் வறுமையாவது நெறியல்லா நெறியில் பொருளைச் செலவழித்தலும் அதனால் வறுமையுறுதலுமாம். இதனைத் திருவள்ளுவர்.



'அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன்போல நோக்கப்படும்' 1047

என்பார்.

தாயே வெறுக்கும் சிறுமை தரும் வறுமை இதுவென்றால் பிறரால் எவ்வளவு சிறுமையாகக் கருதி வெறுக்கப்படும் என்பதை எண்ணி உணர்க.

இனி முன்னோரால் திரட்டி வைக்கப்பட்ட செல்வத்தை மேலும் வளர்க்கும் ஆற்றலில்லாதவனாகியும், அதே நேரத்தில் எத்தீய வழியிலும் செல்லாதவனாகியும் ஆடம்பரத்தை விலக்கியும் உண்ண உடுக்க மட்டுமே செலவழித்து அதனால் வறுமையுற்றால் அதனைப் பெருமையும் சிறுமையும் அற்ற வறுமை எனலாம்.

இங்கே எடுத்துக்காட்டப்பட்ட மூன்று வறுமைகளில் முதல் வறுமை புகழ்மிக்க வறுமை. மூன்றாவதாகக் காட்டப்பட்ட வறுமை கோவலனுக்குத் தொடர்பில்லாதது. அவன் பொருளை ஈட்டவில்லை என்றாலும் உண்ண உடுக்க மட்டுமே பொருளைப் பயன்படுத்தியவன் அல்லன்.

இரண்டாவதாகக் கூறப்பட்ட வறுமைதான் சிறுமை மிக்க வறுமை. நாணவேண்டிய வறுமை. கோவலன் இலம்பாடு நாணுத்தரும் என்று கூறுவதனால் அவன் தன் வறுமையை 'அறஞ்சாரா நல்குரவு' என்று கருதுகின்றான் என்பது போதரும். கலம் கவிழ்ந்து போக அதனால் வரும் வறுமையும் வாணிகத்தில் ஏற்பட்ட இழப்பினால் வரும் வறுமையும் அறஞ்சாரா நல்குரவு அன்று, 'இலம்பாடு நாணுத்தரும்' என்று கோவலன் கூறுவதனால் 'சலம்புணர் கொள்கைச் சலதியோடாடி' என்பதற்கு புலவர் கு. திருமேனி அவர்கள் கூறும் விளக்கம் அவ்வளவாகப் பொருத்தமில்லை என உணர வேண்டும். ஆக இதிலிருந்து சினமுறும்போது கோவலன் சினத்திற்காளானவர் மீது எப்பழியையும் சுமத்தத் தயங்கமாட்டான் என்பதைத் தெரியலாம்.

இனி அவனுடைய பழம் பிறப்புப் பற்றிய செய்தியொன்று சிலம்பிலே காணப்படுகின்றது. பழம் பிறப்புச் செய்தி இளங்கோவடிகளால் கற்பனையாகக் கூறப்படுவதுதான். காப்பியத்தில் சில முடிவுகளை நியாயப்படுத்த இந்தப் பழம் பிறப்புச் செய்தி கூறப்படுகின்றது. மற்றபடி பழம் பிறப்புச் செய்தியொன்றை இப்பிறப்பில் அறிந்து கொள்ளுதல் என்பது இயற்கையில்லை.

பழம் பிறப்பிலே கோவலன் செய்த தவற்றுக்காகத் தான் மீண்டும் ஒரு பிறவி எடுத்துத் தவற்றுக்குரிய தண்டனையை அனுபவிக்கின்றான் என்று கூறப்படுகின்றது. பழம் பிறப்புக் கோவலனுக்கும் (பரதனுக்கும்) இப்பிறப்புக் கோவலனுக்கும் ஒரு தொடர்பிருப்பதனைக் கூர்ந்து நோக்கினால் அறியலாம்.

## பழம் பிறப்புச் செய்தி

கலிங்க நாட்டில் சிங்கபுரம் கபிலபுரம் என இரண்டு நாடுகள். இரண்டு நாட்டையும் தாயவேந்தர் இருவர் ஆண்டு வந்தனர். சிங்க புரத்தை வசு என்பவனும் கபிலபுரத்தைக் குமரன் என்பவனும் ஆண்டுவந் தனர். இருவருக்கும் பகை மூளவே போர் நிகழ்ந்தமையால் இரண்டு நாட்டுக்கும் இடையில் உள்ள ஆறு காவதப் பரப்பிற்கு யாரும் செல்வ தில்லை.

கபிலபுரத்திலுள்ள சங்கமன் என்னும் வாணிகன் பொருளீட்டும் பொருட்டு அணிகலன்கள் பலவற்றைச் சுமந்து தன் மனைவி நீலியையும் உடனழைத்துக் கொண்டு சிங்கபுரத்திற்குச் சென்றான். ஆண்டுள்ள கடை வீதியிற் சென்று பொருளை விற்க முயன்றான். அப்பொழுது அரச கருமம் செய்பவனாகிய பரதன் என்பவன் விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆதலின் சங்கமனை அரசனிடம் அழைத்துச் சென்று கபிலபுரத்திலிருந்து வந்துள்ள ஒற்றன் என்று பொய் சொல்லுகின்றான். இதனால் சங்கம னுக்குக் கொலைத் தண்டம் விதிக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றான். அணிகலன்களை விற்கச் சென்ற சங்கமன் திரும்பாமையால் நீலி அழுது அரற்றித் திரிந்து பதினான்காம் நாள் எல்லையில் ஒரு மலைமீது ஏறி நின்று 'எனக்கு இத்துன்பத்தைச் செய்வித்தோர் இத்துன்பத்தை அடைவார்களாக' எனச் சாபமிட்டு மலைமீதிருந்து விழுந்து உயிர் துறந்தாள். பொய் சொல்லிச் சங்கமனைக் கொல்வித்த பரதனே இப்பிறப்பில் கோவலனா கப் பிறந்துள்ளான். நீலி இட்ட சாபத்தின்படியே கோவலன் பொற்கொல் லனால் கொல்விக்கப்பட்டான் எனப் பழைய சாப வரலாறு கூறுப்படு கின்றது.

இப்பகுதிகள் விளக்கமாக அமையவில்லை. பரதன் சங்கமனுக்குக் கொலைத்தண்டம் வாங்கிக் கொடுக்க என்ன காரணம் என்பது விளக்கப் படவில்லை. இரண்டாம் பிறப்பில் கோவலன் கொலைப்படுத்தப்பட்ட தற்கு ஒரு காரணம் கற்பிக்கப்பட்டுள்ளது. பொற்கொல்லன் அரசமா தேவியின் சிலம்பைத் திருடிவிட்டான் என்றும், அதை மறைக்கவே கோவலனைப் பொற்கொல்லன் பயன்படுத்திக் கொண்டான் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுபோல் பரதன் சங்கமன் தொடர்பில் ஒன்றும் வெளிப்படுத்தப்படவில்லை.

பரதன் என்று குறிப்பிடப்படுவதனால் அவன் அரச கருமம் செய்ப வனாகவும் வணிகனாகவும் இருந்திருப்பான் போலும். வணிகனாக இருந்த பரதனிடம் அணிகலன்களை விற்கச் சங்கமன் வந்திருக்கலாம். வந்த இடத்தில் இவன் பகை நாடாகிய கபிலபுரத்திலிருந்து வந்தவன் என்பதைப் பரதன் அறிந்து கொண்டிருக்கலாம். அறிந்துகொள்ளவே அணிகலன்களைக் குறைந்த விலைக்குக் கேட்டிருக்கலாம். சங்கமன் குறைந்த விலைக்குத் தர இசையாமையால் மன்னனிடம் சென்று இவன் ஒற்றன் எனக் கூறி அவனுக்குக் கொலைத்தண்டம் பெற்றுக் கொடுத்திருக்



கலாம். நாம் இதனை அனுமானித்துத்தான் அறிய வேண்டியுள்ளது.

தெருவில் போகின்ற ஒருவனை யாரும் ஒற்றன் என்று கூறியிருக்க முடியாது. பரதனுக்கும் சங்கமனுக்கும் ஏதோ ஒருவகையில் சிறிது தொடர்பிருந்திருக்க வேண்டும். ஒரு தொடர்பும் இல்லாமல் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குத் தீங்குச் செய்யவேண்டிய அவசியம் இல்லையே. ஆகவே பரதனின் விருப்பத்தைச் சங்கமன் ஏற்றுக்கொள்ளா மையால்தான் இதுபோல நடந்திருக்கவேண்டும். சிறுகுறிப்பு ஒன்றை இளங்கோவடிகள் தருகின்றார். அக்குறிப்பு என்ன என்பதனைக் காண் போம். பரதனைப் பற்றிக்கூறும்பொழுது இளங்கோவடிகள்,

'பரதன் என்னும் பெயரன் அக்கோவலன்
விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆதலின்
ஒற்றன் இவனெனப் பற்றினன் கொண்டு
வெற்றிவேல் மன்னற்குக் காட்டிக் கொல்வுழி' 23 : 154 - 157

என்று குறிப்பிடுகின்றார். இதில் 'விரதம் நீங்கிய வெறுப்பினன்' என்ற தொடர் உற்றுநோக்கற்குரியது. விரதம் என்றால் கொல்லாமையாகிய விரதம் என்கிறார் உரையாசிரியர்.

1. அவன் விரதத்திலிருந்து நீங்கியவன். அதாவது கொல்லாமையி லிருந்து நீங்கியவன். அப்படி என்றால் கொல்லுதலில் விருப்பம் உடைய வன்.

2. வெறுப்பினன் - மிகுந்த வெறுப்பினை உடையவன். வெறுப்பு எப்பொழுது ஏற்படும்? விருப்பம் புறக்கணிக்கப்படும்பொழுது. வெறுப்பு ஏற்பட்டுவிட்டால் அவன் கொல்லா விரதத்திலிருந்து விலகி விடுவான்.

சங்கமன் கொல்லப்பட்டதற்குக் கோவலனுடைய (பரதன்) வெறுப்பே காரணம் என்பது இளங்கோவடிகளால் கூறப்பட்டுள்ளது. 'விரதம் நீங்கிய வெறுப்பினன்' என்று சொல்லப்பட்டதனாலேயே பகை நாடாகிய கபிலபுரத்திலிருந்து வந்தவன் சங்கமன் என்பதை அறிந்த அளவில் இவன் ஒற்றனாக இருக்கக் கூடுமென்று கருதி மன்னற்குக் காட்டிக் கொலைத்தண்டம் பெற்றுத்தரவில்லை என்பது தெளிவாகி விடுகிறது. பரதனின் வெறுப்பும் அந்த வெறுப்பினால் விளைந்த செயலுமே சங்கமனைக் கொல்வித்தது என்பது தெளிவு.

பரதனின் குண இயல்பைத் தெற்றென விளக்கிக் காட்டும் தொடர் 'விரதம் நீங்கிய வெறுப்பினன்' என்பதுதான். விருப்பம் நிறைவேறாத பொழுது வெறுப்பும், வெறுப்பு மிகும்பொழுது கொல்வித்தலும் பரத னின் குண இயல்பு என அறிகிறோம். இப்பொழுது பரதன் கோவலனாகப் பிறவியெடுத்து விட்டான். புதுப்பிறவி எடுத்த கோவலனின் குண இயல்பு என்ன? தன்னுடைய இன்ப நுகர்ச்சிக்கு அதாவது தன்னுடைய விருப்பத்திற்குத் தடை ஏற்பட்ட பொழுது கண்ணகியைப் பிரிந்தான்;

மாதவி தன் விருப்பத்திற்கு மாறாக ஊடல்கொண்டபோது அவளையும் பிரிந்தான். விருப்பமும் அவ்விருப்பம் நிறைவேறாதபோது வெறுப்பும் கொண்ட நிலையில் கண்ணகி மாதவி ஆகியோரைப் பிரிந்தவன்தான் கோவலன்.

கோவலன் வெறுப்பினால் பிரிந்தவனேயல்லாமல் யாரையும் கொல்வித்தவன் அல்லனே என்று சிலர் வினவக்கூடும். பரதனுக்கு வெறுப்பு வந்த போது சங்கமனைக் கொல்வித்தான். கோவலனுக்கு வெறுப்பு வந்தபோது கண்ணகி மாதவி ஆகியோர் வாழ்வு கொல்லப் பட்டுவிட்டது. சங்கமன் பரதனால் பிணமாக்கப்பட்டான். கண்ணகியும் மாதவியும் நடைப்பிணமாக்கப் பட்டனர். இதுதான் வேறுபாடு.

'மாதவி பாடிய கானற் பாணி
கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது' 27 : 50, 51

என்றொரு தொடர் மாடலனால் கூறப்படும். புகார் நகரத்துக் கடற் கானலில் பாடப்பட்ட கானல்வரிப் பாட்டினால் விளைந்த விளைவு கனக விசயரின் தலையிலே போய் முடிந்தது என்பது இதன் கருத்து. மாதவி கானல்வரிப் பாடலைப் பாடாமலிருந்திருந்தால் கோவலன் மதுரைக்குப் போயிருக்கமாட்டான், கொலையுண்டிருக்கமாட்டான். கண்ணகி தெய்வத்தன்மை எய்தியிருக்க மாட்டாள். செங்குட்டுவன் பத்தினிக்குக் கல்லெடுக்க வடநாட்டிற்கு வந்திருக்க மாட்டான். கனகவிசயரின் முடித் தலை கல் சுமப்பதிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கும் என்பதனை எதிர் மறைக் கருத்தாக வெளிப்படுத்துகின்றார். கனகவிசயர் கல் சுமப்பதற்கு மாதவி பாடிய கானல் வரியே காரணமாயிற்று என்கிறார் இளங்கோவடிகள். இதுபோலவே அவர் இன்னொன்றையும் சொல்லியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அஃது என்ன?

பரதன் விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆக இருந்ததனால் கண்ணகியும் மாதவியும் இன்பத்தையும் வாழ்வையும் இழந்தனர். அடைக்கலங் கொடுத்த மாதரி நெருப்பிலே மடிந்தாள். உடன் துணை வந்த கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து மடிந்தார். கோவலன் தந்தையும் தாயும் துறவையும் இறப்பையும் எய்தினர். கண்ணகியின் பெற்றோரும் அவ்வாறே துறவும் இறப்பும் எய்தவும், மாதவியும் மணிமேகலையும் துறவு பூணவும், இவற்றை எல்லாம் சொல்லிய மாடலன் கங்கையாடவும் நேர்ந்தது. மதுரை மாநகரம் எரியுண்ணவும் நெடுஞ்செழியனும் பெருங் கோப்பெண்டும் உயிர்துறக்கவும் நேர்ந்தது என்று கூறியிருக்கவேண்டும். கோவலன் (பரதன்) 'விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆக இல்லாதிருந்தால் இவையனைத்தும் நடந்திருக்கமாட்டா. ஆகக் கடந்த பிறவியிலிருந்து தொடர்ந்து வந்த 'விருப்பும் அது ஈடேறாமையால் விளைந்த வெறுப்பும் ஆகிய இயல்புதான் கோவலனின் மாற்ற இயலாக் குணமாக அமைந் துள்ளது. இக்குணக்கேடுதான் வேறுபல நல்லியல்புகளையுடைய கோவலனை ஆட்டிப் படைக்கின்றது என்பதனை அறியவேண்டும்.



இப்பொழுது கோவலனின் இயல்புகளைத் தொகுத்துக் காண்போம்.

1. கோவலன் மிகுந்த புணர்ச்சி வேட்கையன்.
2. திருமணத்திற்கு முன்பே கெட்டொழிந்தவன்.
3. பரத்தையர் சேரியில் எப்பொழுதும் சுற்றித் திரிபவன்.
4. வயந்தமாலை போன்ற பணிப்பெண்ணிடத்தும் உறவுடையவன்.
5. காமத்தைத் தூண்டும் மாலை வந்துற்றால் மனம் மயங்கிச் சிறுமையுற்றுத் தளருபவன்.
6. கவுந்தியடிகள் போன்றோர் கூறும் அறிவுரையைப் புறக்கணிக்கும் அளவுக்குக் காமச் சிறுமையுடையவன்.
7. கூடுவதற்குத் தடையான ஊடலை வெறுப்பவன்.
8. ஊடலைத் தணிக்காது வெறுத்தொதுக்கும் இயல்பினன்.
9. வெறுப்பு வந்தால் எப்பழியையும் யார்மீதும் சுமத்தத் தயங்காதவன்.
10. பழம்பிறப்பும் இப்பிறப்பும் எடுத்துக்காட்டும் 'விருப்புக்கு தடை வந்தால் வெறுக்கும் இயல்புடைமை.'

ஆக இப்பத்துச் செய்திகளையும் மீண்டும் எண்ணிப் பாருங்கள். எல்லை மீறிய விருப்பம். அதற்குத் தடை வந்தபோது எல்லை மீறிய வெறுப்பு. இதுதான் கோவலனின் குணப்பிழிவு.

## கானல்வரிக்கு முந்தைய மனநிலை

இன்பமாக எண்ணிப் பாடிய கானல்வரிப் பாடல் துன்பமாக முடிந்தது ஏன்? அப்பாடலின் போக்கைத் திசை திருப்பியது ஏன் என்ப தனை நாம் கண்டறிய வேண்டுமானால் கானல்வரி தொடங்குமுன் கோவ லன் மனநிலை எவ்வாறிருந்தது எனக் காணல் வேண்டும். கோவலன் மனநிலையை மட்டும் கண்டால் போதுமா? மாதவி மனநிலையையும் காணவேண்டாவா என்ற கேள்வி எழக்கூடும். இதில் கோவலன் மன நிலையைத்தான் நாம் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவன்தான் முதலில் பாடத் தொடங்குகின்றவன். அவன்தான் பாடலின் போக்கைத் திசை திருப்பியவன். இந்திர விழா இருபத்தெட்டு நாள்கள் நடந்தேறும் வழக்கினை உடையது. இவ்விழாவில் மாதவி நாள்தோறும் நடனம் ஆடினாளா? ஒருமுறை மட்டுமே ஆடினாளா? என்று சொல்வ தற்கு எந்தக் குறிப்பும் இல்லை. விழா இருபத்தெட்டு நாள்கள் நடத்துள்ள மையால் நாள்தோறும் அவள் நடனம் நடந்துள்ளதாகக் கொள்வதில் தவறில்லை. இருபத்தெட்டு நாள் அவள் தொடர்ந்து ஆடவேண்டிய நிலை இருந்திருக்குமேயானால் அதற்கான ஒத்திகை போன்றவற்றில் அவள் நீண்ட நேரம் செலவிடவேண்டி நேர்ந்திருக்கும். இதனால்

கோவலனோடு சேர்ந்திருக்கும் வாய்ப்பு மாதவிக்கு குறைந்து போயிருக்கும். தனித்து விடப்பட்ட கோவலன் ஊர் சுற்றக் கிளம்பியிருப்பான் போலும். ஏனெனில் இந்திரவிழவூர் எடுத்த காதையில்தான்

'நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரோடு நகரப் பரத்தரோடு
திரிதரு மரபிற் கோவலன் 5: 199 - 201

என்று பேசப்படுகின்றது. இந்திரவிழவூர் எடுத்த காதைக்கு அடுத்த காதை கடலாடு காதைதான். அக்கடலாட்டின் போதுதான் கானல்வரிப் பாடல் பாடப்படுகின்றது.

இந்திர விழாவின் கடை_சி நாள் ஆட்டத்தை முடித்துக்கொண்டு அரங்கத்திலிருந்து இறங்கிவரும் மாதவி கோவலன் ஊடற்கோலமோடிருப்பதை அறிந்துகொள்கின்றாள். அவன் ஊடலை வளரவிடுவது தீது என்பதை அவள் நன்கறிந்தவள் ஆதலின், பத்துத் துவரினும் ஐந்து விரையினும் முப்பத்திருவகை ஓமாலிகையினும் ஊறிய நன்னீரிற் குளித்து அணிபல பூண்டு அவன் ஊடலைத் தணிவிக்கின்றாள்.

மாதவி ஒத்திகையிலும் பலர் பார்க்க ஆடும் ஆட்டத்திலும் மூழ்கியிருந்ததனால் கோவலன் எரிச்சலுற்றிருக்கக் கூடும். தனக்குரியவள் தனக்கே உரியவளாக இல்லாமல் விலகி இருக்க நேர்ந்துவிடுகின்றதே என்ற சினம் மனத்துட் கால் கொண்டிருத்தல் கூடும். அச்சினம் மாதவி கையிலிருந்து யாழை வாங்குகின்ற வரை இருந்திருத்தலும் கூடும்.

மற்றொன்று; மாதவி ஒத்திகையிலும் ஆட்டத்திலும் ஈடுபட்டிருந்த நேரத்தில் இவன் ஊர் சுற்றித்திரிந்த செய்தியைக் கேள்விப்பட்டு மாதவி அவனைக் கடிந்துகொண்டிருக்கலாம். அது அவன் நெஞ்சிலே கனன்றுகொண்டிருந்து யாழை வாங்கியதும் கானல்வரிப் பாடலாக வெளிப்போந்திருக்கலாம்.

அடுத்து வேறொன்று; வயந்தமாலைக்கும் கோவலனுக்கும் உறவு உண்டு என்பதை முன்னரே கண்டோம். இவர்கள் உறவு முதன்முதலாக அரும்பி வளர்ந்தது இவ்விந்திர விழாவில்தானோ என எண்ணுமாறும் உள்ளது. நடன நிகழ்ச்சியால் மாதவிக்கும் கோவலனுக்கும் ஏற்பட்ட இடைவெளி வயந்தமாலையால் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் கடலாடு காதையின் இறுதியில் கோவலனும் மாதவியும் தாழை வேலி சூழ்ந்த புதுமணற் பரப்பில் புன்னை மரத்தின் நிழலில், யானைத் தந்தத்தால் கால்கள் அமைக்கப்பட்ட கட்டிலின் மீது அமர்ந்திருந்தனர். அப்பொழுது,

'வருந்துபு நின்ற வயந்த மாலைகை
திருந்துகோல் நல்யாழ் செவ்வனம் வாங்கி' 6: 171, 172

எனக் கூறப்படுகின்றது. இந்த இடத்தில் வயந்தமாலை வருந்தி நின்றது ஏன்? அவளுக்கு வருத்தம் வந்த வரலாறு யாது? உரையாசிரியர் 'வழி



வந்ததனால்' வருந்தி நின்றாள் என்கிறார். வயந்தமாலையின் வருத்தத்திற்கு இது சரியான காரணம் இல்லை. வேறு என்ன காரணமாக இருக்க முடியும்?

இந்திரவிழாக் காலத்தில் கோவலனோடு கூடி மகிழ்ந்தவள் வயந்தமாலை. இப்பொழுது கட்டிலில் மாதவியும் கோவலனும் உட்கார்ந்திருக்கின்றனர். இது அவள் கண்களை உறுத்தியிருக்கும். இதனால் அவள் வருந்தி நின்றிருக்கலாம்.

வயந்தமாலை நீண்டகாலமாக மாதவி வீட்டிலே இருப்பவள். கோவலனும் மாதவியும் ஒருங்கு இருந்த நிகழ்ச்சிகள் பலவற்றை அவள் பார்த்திருக்கக்கூடும். அப்பொழுதெல்லாம் அவள் வருந்தி நிற்கவில்லையே என்று சிலர் வாதிடக்கூடும். அப்பொழுதெல்லாம் கோவலன் அவள் தலைவியின் நாயகன் என்று பார்த்தவள். ஆகவே அவளுக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் இப்பொழுது தனக்கும் நாயகனாக ஆகியுள்ளான். அக்கட்டிலின்மீது கோவலனுக்குப் பக்கத்தில் தானும் உட்கார முடியும், ஆனால் தற்பொழுது முடியவில்லையே! மாதவியல்லவா உட்கார்ந்திருக்கின்றாள் என்று வயந்தமாலை எண்ணியிருக்கலாம். இந்த எண்ணம் அவள் முகத்தில் வருத்தத்தை உண்டாக்கி இருக்கலாம். இவ்வருத்தத்தை உணர்ந்துகொண்ட கோவலன் யாழை வாங்கியதும் அவ்வுணர்ச்சியால் உந்தப்பட்டு ஆற்றுவரிப் பாடலைத் தொடங்கியிருக்கலாம்.

மண்ணை எடுத்துச் சோதித்துப் பார்த்து இந்நிலம் நல்ல வளமான நிலம் என்ற முடிவுக்கு வருதலும் உண்டு; அந்நிலத்திலே விளைந்திருக்கின்ற பயிரின் வளத்தைக் கொண்டு இந்நிலம் வளமான நிலம் என்ற முடிவுக்கு வருதலும் உண்டு. காரணத்தால் காரியத்தையும், காரியத்தால் காரணத்தையும் கண்டறிதல் ஆய்வு நெறிமுறையே என்பதனை அறிதல் வேண்டும்.

கோவலனின் 'ஊர்சுற்றி' வாழ்க்கையை மாதவி கடிந்து கொண்டதனால் அவ் 'ஊர்சுற்றி' வாழ்க்கையை நீ ஏன் கடிந்துகொள்கின்றாய் என்று கேட்பதற்காகவும், வயந்தமாலை என் விருப்பத்திற்குரியவள்; அவளோடாடி மகிழ நீயேன் தடை போடுகின்றாய் என்று கேட்பதற்காகவும் கானல்வரியுள் ஆற்றுவரிப் பாடலை அவன் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்று கூறலாம். இது காரணத்திலிருந்து காரியத்திற்கு போகும் நெறி.

இனிக் காரியத்திலிருந்து காரணத்தைக் கண்டறிவோம். கோவலன் தன்னுடைய ஆற்றுவரிப் பாடலில் சொல்வதன் திரண்டகருத்து என்ன?

'காவிரிக்கு உரிமையுடையவனாகிய சோழன் கங்கையைப் புணர்ந்தாலும் கன்னியைப் புணர்ந்தாலும் காவிரி சோழனைப் புலப்பதில்லை என்பதுதான். கோவலன் தன்னைச் சோழனாகவும் மாதவியைக்

காவிரியாகவும் எண்ணிப் பேசுகின்றான். அப்படியென்றால் கங்கையும், கன்னியும் யாராக இருக்க முடியும்? பிற பரத்தையரும் வயந்தமாலையும் ஆகத்தான் இருக்கமுடியும். ஆகக் காரியத்திலிருந்து காரணத்திற்கு வந்தாலும் அதுவும் கோவலனின் பரத்தையர் தொடர்பும், வயந்தமாலை தொடர்புமாகத்தான் முடிகின்றது. எனவே 'வருந்துபு நின்ற வயந்த மாலை'யின் முகத்தைப் பார்த்தவுடன்தான் யாழைத்தானே வாங்கிக் கொண்டு மாதவியின் மீது தாக்குதல் தொடுக்கின்றான். 'இதனை நீ கண்டு கொள்ளாதே. இதுதான் மங்கை மாதர் பெரும் கற்பு' என்று உபதேசம் செய்யத் தொடங்குகின்றான். இந்த மனநிலையை நாம் புரிந்துகொண் டால் கோவலன் பாடும் கானல்வரிப் பாடலுக்கும், மாதவி பாடும் கானல்வரிப் பாடலுக்கும் உரிய பொருளைக் கண்டு தெளியமுடியும்.

கோவலன் 'உண்மை உருவத்தை, இதுவரை எடுத்துக் காட்டி னேன். இந்த உண்மை உருவத்தை நாம் மறந்து விட்டாலோ மறைத்துவிட் டாலோ கானல்வரியின் உண்மையான மறைபொருளை நாம் கண்டறிய முடியாது. கானல்வரிச் சுரங்கத்தின் திறவுகோல் கோவலனின் உண்மை உருவந்தான் என்பதை அவன் பாடும் ஒவ்வொரு பாடலோடும் பொருத் திப் பார்க்க வேண்டும். அப்பொழுது கானல்வரிச் சுரங்கத்தின் கதவுகள் மெல்ல மெல்லத் திறந்துகொள்ளும். திறந்த பிறகு அங்கே தசை வேட்கை யின் ஆட்டத்தையும், உண்மை அலறித் துடித்து ஒய்வதையும் கண்டு கொள்வீர்கள்.

## கோவலன் பாடிய கானற்பாணி

**அ**ளவு கடந்த இன்பவேட்கை; மாதர் பலரோடு கூடி வாழ்ந்த நெறி யற்ற வாழ்க்கை; தன் விருப்பத்திற்குக் குறுக்கே யார் நின்றாலும் அது ஊட லாயினும் சரி அவரை வெறுத்தொதுக்கும் சிறுமை; அவர்மீது எப்பழியை யும் சுமத்தத் தயங்காமை. இவை கோவலனின் இயல்பு என்று கண் டோம்.

இருபத்தெட்டு நாள்கள் இந்திரவிழா ஆரவாரம் - அந்நாளில் ஓய் வின்றிச் சுற்றியலைந்தமை - விழாக்காலங்களில் மாதவியை நெருங்கி முன்போலக் கலந்து மகிழ முடியாமை - இன்ன காரணங்களால் மனத் தில் தளர்வும் வெறுப்பும் மிக்கு நின்ற நேரத்தில் வெண்கால் அமளி மிசைக் கோவலனும் மாதவியும் வீற்றிருக்கின்றனர். பக்கத்திலே வயந்த மாலை நின்றுகொண்டிருக்கின்றாள். அவள் முகத்திலே 'வருத்தம்' தெரி கிறது. இச்சூழலில் வெளியே நிகழ்ந்த ஆரவாரம் எத்தகையது என்பதை அடிகள் இவ்வாறு கூறுகின்றார்.

'வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
கடற்கரை மெலிவிக்கும் காவிரிப் பேர்யாற்று
இடம்கெட ஈண்டிய நால்வகை வருணத்து
அடங்காக் கம்பலை உடங்கியைந் தொலிப்ப' 6 : 161 - 165

கோவலனைச் சுற்றிலும் காது செவிடுபடும்படியான ஆரவாரம். பொதுவாக இந்த ஆரவாரச் சூழலில் இருந்தாலே மனிதனுக்கு எரிச்சல் தோன்றுவது இயற்கை. இவனோ இருபத்தெட்டு நாள் விழா நிகழ்ச்சி களால் வேறு எரிச்சலடைந்துள்ளான். இந்நிலையில் இத்தகைய ஆர வாரம் அவன் உள்ளத்தில் எத்தகைய எரிச்சலைத் தோற்றுவித்திருக்கும்? எரிச்சலின் உச்சத்திற்கே சென்றிருந்திருப்பான். இந்நிலையில் வயந்த மாலையின் வருத்தம் வேறு. குழப்பமும் எரிச்சலும் நிரம்பிய நிலையில் அவன் மாதவியிடமிருந்து யாழை வாங்குகின்றான்.

குழப்பமும் எரிச்சலும் நிரம்பிய மனத்தில் தெளிவும் அமைதியும் எப்படி இருக்க முடியும்? குழப்பமும் எரிச்சலும் உள்ள மனிதனிடம் யாராவது பேச்சுக் கொடுத்தால் சீறிவிழுவதும் சினந்துபேசுவதும் மனித இயல்பு என்பதனை அறிவோம். இதனைத்தான் நாம் கோவலனிடம்

பொய்தல் அழித்துப் போனார் அவர்நம்
மையல் மனம்விட் டகல்வார் அல்லர். 7 : 43

*(தாழைகளையே வேலியாகக் கொண்ட கடற்கழியில் வந்து நம் விளையாட்டியல்பை அழித்துப் போனார் ஒருவர். அவ்வாறு நம் விளையாட்டியல்பை அழித்துப் போன அவர் மயக்கங் கொண்ட நம்முடைய மனத்தை விட்டு நீங்கமாட்டார்)*

இதற்கு முந்திய பாடல்களில் (இதற்கு முந்திய துறையில்) 'தணந்தார்' என்றும், 'போனார்' என்றும், 'துறந்தார்' என்றும் கூறியவள் நம் மையல்மனம் விட்டு அகல மாட்டார் என்று கூறுவது நம்பிக்கை தானே.

பருவம் எய்தியும் சிறுமியர் போல மயக்கமின்றிக் கழியிடத்து விளையாடித் திரிந்த நம்மியல்பை அழித்து, மயக்கந்தரும் காதல் நோயைக் கொடுத்துவிட்டார். பொய்தலை (விளையாட்டை) அழித்த அவர் மெய்யை அழியார். ஆகவே நம் மனம்விட்டு அகலார் என்று நம்பிக்கையோடு பேசுகின்றாள் தலைவி. தலைவன் நம் விளையாட்டியல்பை மட்டும் அழிக்கவில்லை; நம்முடைய மகிழ்ச்சி, இன்பம் ஆகிய எல்லாவற்றையுமே அழித்துவிட்டான். வாய்மொழி காவா அவன் ஒரு பொய்யன் என்று தோழி பழித்திருக்க வேண்டும். இந்தப் பழிப்புக்குத் தான் தலைவி மேற்கண்டவாறு பதிலளித்து 'மனம்விட்டு அகல்வார் அல்லர்' என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றாள்.

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்றார் ஒருவர்
நீநல் கென்றே நின்றார் அவர்நம்
மானேர் நோக்கம் மறப்பார் அல்லர் 7 : 44

*(கானற் சோலைகளை வேலியாகக் கொண்ட கழியிடத்து வந்து 'நீ நல்கு' என்று நம்பின் நின்றார் ஒருவர். அவ்வாறு நின்ற அவர் நாம் மான் போல மருண்டு பார்த்த பார்வையை மறக்க மாட்டார்)*

இப்பாடலிலும் இதற்கு முந்தைய பாடலிலும் மாதவி கோவலனுக்கும் தனக்கும் களவு நெறி உண்டு என்பதைக் காட்டுவது போல உள்ளது. அவன் மாலையை வாங்கி மணவாளன் ஆகுமுன்பே இவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருப்பார்கள் போலும். இதனை வயந்த மாலையிடம் முடங்கலை மறுத்துப் பேசும் இடத்தில் கூறும் காண்வரிக் கோலம், கண்கூடுவரி ஆகியவற்றில் வெளிப்படும் செய்திகளால் உய்த்துணர முடிகிறது. மேலும் கோவலன் மாலையை வாங்கிய நிகழ்ச்சியே ஒரு சடங்கு போல நிகழ்கின்றதேயன்றி உண்மையில் நடந்த நிகழ்ச்சியாக இல்லை. கூனி மாலையைக் கையிலே எடுத்துக்கொண்டு நகர நம்பியர் திரிதரு மறுகில், பகர்வனர் போல்வதோர் பான்மையின் நின்றாள் என்று கூறுவதனால் உண்மையில் விலை கூறி அவள் நிற்கவில்லை என்பது



தெளிவாகிறது. கோவலன் அந்த இடத்திற்கு வரும்வரை கூனி நின்று கொண்டிருந்து, அவன் வந்ததும் மாலையை நீட்ட அவன் வாங்கிக் கொண்டு கூனியொடு மாதவி மனைக்கு வந்தான் என்று கூறப்படுவதனால், மாலை விற்ற நிகழ்ச்சியே ஒரு போலி நாடகம் என்பது புலப்படும். மாதவியை முன்னரே கண்டு காதலித்த அவன் அவளையடைய கணிகையர்குல மரபுப்படி மாலையை வாங்கிக்கொண்டு அவளை உரிமையாக்கி உள்ளான் என்று கொள்வது பொருத்தமாக இருக்கும். ஒரு கணிகையைத் தனக்குரியவளாக ஆக்கிக்கொள்வதற்கு அக்கால நடைமுறை அதுவாக இருக்கலாம். ஆகவே மாலையை வாங்கி அவளைத் தனக்கு உரியவளாகி ஆக்கிக்கொண்டான் போலும்.

கோவலன் மாலையை வாங்குமுன் மாதவியைக் கானலில் கண்ட நிகழ்ச்சியை இப்பாடலில் கூறுகின்றாள் என்று கொள்வது முறைதான். அவ்வாறு அவன் அவளைக் கண்டபோது 'நீ நல்கு' என நின்றிருக்கக் கூடும். அப்பொழுது அவள் கொண்ட மருண்ட நோக்கைப் பின்னர் அவளிடம் கூறியிருத்தலும் கூடும். அதனை இப்பொழுது நினைவூட்டும் பொருட்டு 'மானேர் நோக்கம் மறப்பார் அல்லர்' என்று அவள் கூறியிருக்கலாம்.

யான் இப்பொழுது கோவலன் பாடிய பாடல்களால் மருண்டு போயுள்ளேன். இம்மருட்சியை அவர் களையாது இவ்விடத்தை விட்டு அகலார் என்று கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒப்பிட்டு நம்பிக்கை கொள்கிறாள் மாதவி.

அன்னம் துணையோ டாடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர்நம்
பொன்னேர் கணங்கின் போவார் அல்லர். 7 : 45

*(நேற்று அன்னம் தன் துணையோடு ஆடுவதனைக் கண்டு அதனையும் நோக்கி என்னையும் காமக்குறிப்போடு நோக்கியவாறு ஒருவர் நின்றார். நேற்று அவ்வாறு நின்ற அவர் பொன்னையொத்த நம் சுணங்கை விட்டுப் பிரிந்து போகமாட்டார்.)*

ஒரு பழைய நிகழ்ச்சியை உட்கொண்டு மாதவி பாடுகின்றாள் என்பதனை முன்னரே பார்த்தோம். இப்பாடலிலும் நென்னல் என்பது நேற்று எனக் குறிக்காமல் கடந்த காலத்தில் என்பதைக் குறித்து நின்றது.

'பொன்னேர் சுணங்கிற் போவார் அல்லர்' என்பதனை 'பொன் போலும் சுணங்கைப் போல நம்மைவிட்டுப் போகார்' என்பது உரையாசிரியர்கள் கண்ட உரை. 'சுணங்கின்' என்பதில் உள்ள ஐந்தாம் வேற்றுமை யுருபை ஒப்புப் பொருளாக உரைத்தனர். நான் அதனை ஐந்தாம் வேற்றுமை நீங்கல் பொருள் உணர்த்துவதாகக் கொண்டுள்ளேன். இவ்வாறு கொண்டால் அவர் நம் சுணங்கை விட்டுப் பிரிய மாட்டார்

என்று பொருள்படும். சுணங்கை விட்டுப் பிரியவில்லை என்றால் பசலை தோன்றாது. மேலும் சுணங்கும் அதன் அழகும் அவர்க்கு நிரம்பவும் பிடித்த ஒன்று. பொழுது கண்டு ஆற்றாது கூறிய மாதவி பாடிய பாடலில் 'களைவரும் புலம்பு' தன்னைப் பற்றிக் கொண்டதாகக் கூறுகின்றாள். இப் பாடலில் அதற்கு மாறாகச் 'சுணங்கினின்றும் போக மாட்டார் என்ப தனால் தனிமைத்துயர் அகலும் என்று பேசுகின்றாள். இப்பேச்சைப் பார்த் தால் பொழுது கண்டு ஆற்றாது பாடியபோது இருந்த அவநம்பிக்கை இப்பொழுது நம்பிக்கையாக மாறியிருப்பதனை அறியலாம்.

அடுத்து வருகின்ற துறை இந்த நம்பிக்கை நிலைபெறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இயற்பட மொழிந்த மாதவி இப் பாடலின் முடிவில் கோவலன் முகத்தில் ஏதாவது மாற்றம் தெரிகின்றதா என்று பார்த்திருப்பாள் போலும். அங்கு எந்த மாற்றமும் தோன்ற வில்லை. ஆகவே இடைக்காலத்தில் அவள் கொண்ட நம்பிக்கை அவ நம்பிக்கையாக மாறத் தொடங்குகின்றது. அடுத்து வரும் துறை என்ன? காமமிக்க கழிபடர் கிளவி.

காமமிக்க கழிபடர் கிளவி என்பது எல்லை கடந்த காமத்தால் விளையும் அளவிறந்த துயரை வெளிப்படுத்தும் சொல் என்பதாகும். ஆம். முன்பிருந்த நம்பிக்கை அளவிறந்த துயராக மாறிவிட்டது.

அடையல் குருகே அடையலெம் கானல்
அடையல் குருகே அடையலெம் கானல்
உடைதிரை நீர்ச் சேர்ப்பற் குறுநோய் உரையாய்
அடையல் குருகே அடையலெம் கானல். 7 : 46

(குருகே வாராதே. எம் கானலிடத்தே வாராதே. குருகே வாராதே எம் கானலிடத்தே வாராதே. அலை உடைந்து நீர்த்திவலைகளாகச் சிதறும் சேர்ப்பனுக்கு என்னை வருத்தும் இந்நோயை எடுத்துக் கூறாத குருகே வாராதே. எம் கானலிடத்தே வாராதே.)

'அடையல்' என்ற சொல் ஆறு இடங்களிலும் 'கானல்' என்ற சொல் மூன்றிடங்களிலும் பயின்று வருவதனைக் கூர்ந்து நோக்குங்கள். உறுநோய் உரையாத குருகல்லவா? ஆகவே இவ்வாறு கூறுகின்றாள். அது மட்டுமா? தனக்கும் கோவலனுக்கும் உள்ள உறவை நன்கறிந்த குருகே உண்மையை உணர்த்திக் கோவலனை மனம் மாறச் செய்யவில்லை என்ற எரிச்சல் 'அடையல் குருகே அடையல் எம் கானல்' என்ற சொற்களில் பளிச் சிடுகின்றது.

இவளுற்ற துயரைக் குருகு மட்டும்தான் அறியுமா? கூட இருக்கும் வயந்தமாலையும் அறிவாளே. அதனால்தான் குருகுக்கு உணர்த்துவது போல வயந்தமாலைக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கின்றாள் மாதவி. சேர்ப்பனுக்கு யானுற்ற நோயை நீ எடுத்துக் கூறி எம்பாற் சேர்க்கவில்லை யேல் எம்பால் வாராதே. எம்மில்லத்திற்கு வாராதே என்கின்றாள். கானல்



என்பது இல்லத்தையும் உணர்த்துவதாகக் கொள்க. இந்த எச்சரிக்கையின் விளைவைத்தான் நாம் இறுதியிலே பார்க்கின்றோம். வயந்தமாலை மாதவி வீட்டிலிருந்து விரட்டப்பட்டதனை வயந்தமாலை வடிவிலிருக் கும் வனசாரிணி 'துணியுற்றென்னையும் துறந்தனள், என்பதிலிருந்து அறிந்து கொள்கிறோம். குருகு என வரும் இடங்களில் எல்லாம் வயந்த மாலை என்று போட்டுக் கொள்ளுங்கள். புதையல் வெளிவரும்.

'உடைதிரை நீர்ச்சேர்ப்பன்' என்பதில் ஒருமுனைப்பட்டு வந்த அலை உடைந்து சிதறுவதனை மாதவி ஏன் எடுத்துக் காட்டுகின்றாள்? ஒருமனப்பட்டு வாழ்ந்த கோவலன் இன்று மனஞ் சிதறியுள்ளான்; அம்மனச் சிதறலை வயந்தமாலையே! நீ தடுத்து மீண்டும் ஒரு மனப் படுத்துக என்று வேண்டிக்கொள்ளும் பொருட்டுத்தான்; கோவலன் ஒரு மனப்பட்டு வாழ உதவவில்லையேல் 'அடையல் எம் கானல்' (எம் இல்லம்) என்று அச்சுறுத்தவும்தான்.

'குருகை' முன்னிறுத்திப் பாடிய பாடலும் கோவலன் மனத்தில் மாற்றத்தை விளைக்கவில்லை போலும். இதனைக் கண்டுகொண்ட மாதவி மேலும் தளர்கின்றாள். குருகின் வாயிலாக நெஞ்சத்தைத் திறந்து காட்டிய பின்னரும் கோவலன் மனம் மாறாமை அவளை வருத்து கின்றது. நம்பிக்கை முற்றும் அழிந்துவிட்டதாக அவ்வள் எண்ணுகிறாள். அந்த எண்ணம் தோன்றியதும் அவள் என்ன செய்தாள்? மாதவிக்கும் கோவலனுக்கும் இடையிலே இளங்கோவடிகள் தோன்றிக் 'கட்டுரை' என்ற பெயரில் ஒரு விளக்கத்தைக் கொடுக்கின்றார். அவர் தரும் விளக்கம் யாது?

ஆங்கனம் பாடிய ஆயிழை பின்னரும்
காந்தள் மெல்விரல் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப் பாலைஇசையெழீ இப்
பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள் 7 : 47

(கோவலன் பாடினாற் போலவே பாடிய மாதவி தன்னுடைய காந்தள் போலும் மெல்லிய விரலாற் கைக்கிளை குரலாகிய இன்னிசை யையுடைய செவ்வழிப்பாலை என்னும் இசையை முறையாகப் பாடிப் பின்னர் வேறொரு பண்ணைப் பாடினாள்.)

இதுவரை பாடிவந்த பண்ணை மாற்றிச் செவ்வழிப் பாலையை யாழில் இசை எழுப்பி அதன் பின்னர்த் தான் பாடவிருக்கும் வேறொரு பாடலின் பொருளுக்கு ஏற்ப வேறொரு பண்ணுக்கு மாறினாள் என்கிறார் இளங்கோவடிகள். அவள் எந்தப் பண்ணுக்கு மாறினாள்? இரங்கல் உணர்ச்சிக்கு ஏற்றதாக உள்ள விளரிப்பாலைக்கு மாறினாள். வேறு பண்ணிலிருந்து செவ்வழிப் பாலைக்கு வந்து, அதன் பின்னர் விளரிப் பாலையைப் பாடினாள் என்று கொள்க.

இனிப் பாட இருக்கின்ற துறை தலைவி மாலைப்பொழுது கண்டு

கூறுதல் என்பதாகும். இரங்கி நிற்கும் மாதவி இரங்கலுக்குரிய மாலைப் பொழுதில் இரங்கலுக்குரியார் பாடும் விளரிப்பாலையை இசைக்கின்றாள். இரங்கலும் அதனால் தோன்றும் அவலமும் அவள் பாடும் பாடலின் ஒவ்வொரு அசையிலும், ஏன் ஒவ்வொரு எழுத்திலும் பொங்கிப் பரந்து வருவதனைப் பார்க்கின்றோம்.

> நுளையர் விளரி நொடிதரும் தீம்பாலை
> இளிகிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை
> இளிகிளையில் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்
> கொளைவல்லாய் என்னாவி கொள்வாழி மாலை 7 : 48

(நெய்தல் நிலமக்கள் பாடும் விளரிப்பாலையினை நான் பாடும் பொழுது மாலைப் பொழுதே என்னை மயங்கச் செய்து இனி என்னும் நரம்புக்குப் பகை நரம்பான கைக்கிளை என்னும் நரம்பில் விரல்படுமாறு செய்து இன்னா இசை எழுமாறு செய்துவிட்டாய். இவ்வாறு என் உயிரினும் மேலான இசையில் இன்னா இசை தோன்றுமாறு செய்தது நீதான் என்றால் நீ என் உயிரைப் பறித்துக் கொள்ள வல்லாய்! மாலைப்பொழுதே வாழி! என்னாவியைப் பறித்துக் கொள்)

இப்பாடலில் மாதவி கொண்ட துயரம் அவளுடைய சுயநினைவையே அழிக்கும் அளவுக்குச் சென்றுள்ளதைப் பார்க்கின்றோம். தட்டச்சு செய்பவர்கள் எந்த எழுத்து எங்கே இருக்கின்றதென்று ஒவ்வொரு முறையும் பார்த்துப் பார்த்துத் தட்டுவதில்லை. அதுபோலவேதான் இசைவாணர்களும் எந்த நரம்பு எந்த இடத்தில் இருக்கின்றது என்று பார்த்துப் பார்த்து மீட்டுவதில்லை. நீண்டகாலப் பயிற்சியின் காரணமாக விரல்கள் தாமாகவே அந்த இடத்தைச் சென்றடைந்துவிடும். கண்ணைக் கட்டிக்கொண்டுகூட அவர்களால் பிழையின்றித் தட்டச்சு செய்ய முடியும்; பிழையின்றி இசை எழுப்ப முடியும். இது பழக்கத்தினால் வரும் ஒன்று.

மாதவிக்கு ஏற்பட்டுள்ள மனக்குழப்பம் நீண்ட காலப்பயிற்சினால் வந்த பழக்கத்தையே மாற்றி விடுகின்றது. இசைவாணரின் கை விரல்கள் இயல்பாகவே பகை நரம்பைத் தீண்டாதவாறு பயிற்சி பெற்றவை. சுரம் பாடுகின்றவர்கள் தவறியும் அப்பண்ணுக்குப் பகையாகும் சுரத்தைப் பாடுவதில்லை. ஏன்? இவையெல்லாம் பயிற்சியின் விளைவு. மிகச்சிறந்த பயிற்சியுடைய மாதவியே அபசுரம் படுமாறு பகை நரம்பிலே விரல் வைத்தாள் என்றால் அவளுக்கிருந்த மனக்குழப்பம் எத்தகையது என்பதனை நாம் அறியலாம். இத்தகைய மனக்குழப்பத்தைத் தந்தது யார்? கோவலன். ஆனால் கோவலனை நேரிடையாகக் குற்றஞ் சாட்டாது மாலை தந்த மயக்கந்தான் இசையில் குற்றம் இழைத்துவிட்டது என்று கூறுகின்றாள்.

மாதவிக்கு இங்கே இரண்டு தோல்விகள். ஒன்று; கோவலனுடைய அன்பைப் பெறுவதில் தோல்வி. இரண்டு; பல ஆண்டுகளாகக்



குற்றமில்லாது பயின்ற இசையில் ஏற்பட்ட தோல்வி. இவ்விரண்டு தோல்விகளும் அவள் கண் முன் பேருருக் கொண்டு எழுவதனைக் காண்கின்றாள். இதனால் இருப்பதைவிட இறப்பது மேல் என எண்ணுகிறாள். இந்த வெறுப்பின் விளைவுதான் ‘உயிரைக் கொள்ளுதலில் வல்ல மாலையே! என் ஆவியைக் கொள்’ என்று வெளிப்படுகின்றது.

> பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளின் நீழல்
> இருந்தேங்கி வாழ்வார் உயிர்ப்புறத்தாய் மாலை
> உயிர்ப்புறத்தாய் நீயாகில் உள்ளாற்றா வேந்தன்
> எயிற்புறத்து வேந்தனோ டென்னாதி மாலை. 7 : 49

(பிரிந்து செல்லும் காலத்தில் காதலர் அன்போடு கூறிய அருள் கனிந்த உறுதிமொழிகளாம் சோலை நிழலில் தங்கிப் பிரிவினால் ஏற்பட்ட வெப்பத்தை மாற்றி, என்று வருவார் என்ற ஏக்கத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கும் என் உயிரின் புறத்தே ஏ! மாலைக்காலமே நீ முற்றுகை இட்டுள்ளாய். என் உயிரின் புறத்தே முற்றுகையிட்டுள்ளது நீதான் என்றால் - உள்ளிருக்கும் வலிமையற்ற வேந்தனாகிய என் மதிற்புறத்தே முற்றுகையிட்டிருக்கும் வேந்தனோடு (கோவலனோடு) மாலையே நீ என்ன உறவுடையை?)

பிரிவு வெப்பத்தைத் தணித்துக்கொள்ளக் காதலரின் பேரருள் நீழல் துணை செய்யும்; ஆனால் எனக்கோ நீழல் நெருப்பாக மாறிவிட்டது. அது மட்டுமா? என்னுடைய மனக்கோட்டையை உடைத்தெறிய அக்காதலன் பகைகொண்டு முற்றுகையிட்டுள்ளான். நான் அந்நெருப்பிலிருந்தும், முற்றுகையிலிருந்தும் மீள முடியாது தவிக்கின்றேன். இந்நிலையில் மாலைப் பொழுதே நீ என்னுயிரை முற்றுகை இடுகின்றாயே. இது நியாயமா? ஒரு பேதைப் பெண்ணை அழிப்பதற்கு உயிரின் புறத்தே ஒருவரும், கோட்டைமதிலின் புறத்தே ஒருவரும் முற்றுகையிட வேண்டுமா? மாலையே! எயிற்புறத்து வேந்தனுக்கும் (கோவலனுக்கும்) உனக்கும் மிகுந்த உறவு உண்டு போலும். அதனால் அவனுக்குத் துணையாக என் உயிரின்புறத்தே நீ முற்றுகை இட்டுள்ளாய் என்று அவள் கேட்கும் பொழுது கலங்காத நெஞ்சும் இருக்க முடியாது; கண்ணீர் வடிக்காத கண்களும் இருக்க முடியாது.

ஒருபக்கம் மாலைப் பொழுது; மறுபக்கம் சினம்கொண்ட கோவலன். இரண்டு பக்கத்திலிருந்தும் தாக்குதல் முற்றுகை. இருபுறத்தும் பெருங்களிறு பற்றியிழுத்த தேய் புரிப் பழங்கயிறுபோல அல்லவா என்னிலையாகிவிட்டது. கயிறு அறுதல் ஒருதலை; என் உயிர் இறுதலும் ஒருதலை என்கின்றாள் மாதவி.

ஆற்றமாட்டாத வேந்தன்மேல் (மாதவி மேல்) இரண்டு பேர் முற்றுகையா என்று அவள் வினவும்போது இதயம் அழுவது மட்டுமன்று; ஓர் எள்ளலும் உடன்பிறக்கின்றது. பதைப்புமட்டு மன்று; பரிவும்

பிறக்கின்றது. கோவலனின் பிடிவாதமும் மாலைதரும் துயரும் உருவாக்கிய ஒரு துன்பக்கடலாக இப்பாடல் விளங்குகின்றது.

பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை
மாலை நீயாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை! 7 : 50

(துன்பந்தரும் நோய் எல்லையின்றி வளரவும், பகற்பொழுதைச் செய்த ஞாயிறு போய் மறையவும், இவ்வையகமே அச்சத்தாற் கண்ணை மூடிக்கொள்ளவும் மருள்மாலையே நீ வந்தாய். உலகமே அஞ்சிக் கண்புதைக்கவரும் மாலை நீ என்றால், துன்பந்தரும் நோயை மிகுவிப்பவரே என்னை மணந்தவர் என்றால் ஏ! மாலைப் பொழுதே இவ்வுலகமே வறுமையுற்று விட்டது.)

பகல் செய்வான் மறைவதனால் இருள் பரவுகின்றது. இருள் செறியச்செறியப் பொருள்கள் கண்ணுக்குப் புலப்படாமல் இருளிற் புதையுண்டு போய் விடுகின்றன. இதனை வையகம் கண் புதைத்துக் கொண்டதாகக் கூறும் அழகும் அதிற் பொதிந்துள்ள உணர்ச்சியும் எண்ணி எண்ணி மகிழத்தக்கன.

மருள்மாலையில் யான்மட்டும் அஞ்சினேன் அல்லேன். வையகமே அஞ்சிக் கண்புதைத்துக் கொள்கின்றது. அதனால்தான் இந்த உலகமே (காதல்) வறுமையுற்று விட்டது என்கிறாள் மாதவி. மாலையின் இயல்பும் இவ்வாறிருந்து, மணந்தாரின் இயல்பும் அதுவாக இருந்தால் இந்த உலகம் எப்படி உய்யும்? உய்ய மாட்டாது என்கிறாள்.

தான் துன்புற்றால் உலகமே துன்புறுவதாகவும், தான் மகிழ்ந்தால் உலகமே மகிழ்வதாகவும், தான் உண்டு பசி நீங்கினால் உலகின் பசியே நீங்கிவிட்டது போலவும், தான் பசித்தால் உலகமே பசித்துன்பத்தால் வருந்துவதாகவும் எண்ணிக்கொள்வது மனித இயற்கை. இவ்வியற்கையின்படியே மாதவி தானுற்ற காதல் வறுமையை உலகமும் எய்திய தாகக் கூறினாள்.

ஏழைமைப்பட்டார் இரந்து பின்னிற்றல் உலகியற்கை. இங்கே மாதவி கோவலன் தனக்குக் கொடுத்துள்ள அன்பு வறுமையைத் தாங்காதவளாகி கோவல! யானுற்ற 'காதல் வறுமையைக் களைவாயாக' என்று வேண்டுவது இப்பாடலின் அவாய் நிலைக்கருத்தாகும். வறுமைக்கு மேலும் ஒரு வறுமையை - அதாவது இரண்டடுக்கு வறுமையை ஏற்றும் மாலையே நின்செயல் தக்கதன்று என்பதன் வாயிலாக மாலை தந்த துயரமே பெரிதாகும் இந்நிலையில், நின் அன்பு வறுமை தரும் துயரம் மேலும் ஒரு சுமையாக மாறுமேயானால் யான் உயிர்வாழ்தல் யாங்ஙனம்? என்பது அவாய் நிலையாகப் பெறும் கருத்தாகும்.

முன்னர்க் கடலோதமும் குருகும் வயந்தமாலைக்குக் குறியீடாக்



கப்பட்டது போல இப்பாடலில் வரும் 'மாலை'யும் வயந்த மாலைக்குக் குறியீடாக்கப்பட்டுள்ளதனை உற்று நோக்கி அறியலாம். மேலோட்டமாகப் பார்த்தால் மாலை தந்த துயரம் தெரிகின்றது. ஆழ்ந்து நோக்கினால் வயந்தமாலை தந்த துயரம் தெரிகின்றது.

இப்பாடல் பாடப்பட்ட காலம் இளவேனிற்காலத்து மாலை நேரம் என்பதை யாரும் அறிவர். ஏனெனில் இந்திரவிழா இளவேனிற் காலத்தில்தான் நிகழ்வது. வயந்தமாலை (வசந்தமாலை) என்ற சொல்லுக்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று; நறிய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை என்பது. இரண்டு; வசந்த காலத்து (இளவேனிற்காலத்து) மாலைப் பொழுது என்பது. வசந்த காலத்து மாலைக் காலம் தந்த துயரைப் பாடுவதுபோல வசந்த மாலை தந்த துயரத்தை - இருபொருள் படும்படியாக மாதவி பாடுகின்றாள் என்பதனை இனிக் காண்போம்.

'இளிகிளையில் கொள்ள இறுத்தாய் மன்' என்கின்றாள் மாதவி. இறுத்தது (தங்கியது) எது? மாலை. எவ்வாறு வந்து தங்கியது? இளிகிளை (கைக்கிளை)யில் பொருந்துமாறு தங்கியது. இதனால் இசையில் குற்றம் வந்தது என்கிறாள். இளி நரம்புக்குப் பகை நரம்பு கைக்கிளை. ஆனால் இங்கே நடந்தது என்ன? இளி பகையோடு தொடர்பு கொள்கிறது.

இளி நரம்பைத் தொட்ட விரல் கைக்கிளை நரம்பைத் தொட்டது. அதனால் இசை கெட்டது. இளியும் கைக்கிளையும் தொட்டுக் கொள்ளக் கூடாதவை. பகையென்று விலகிச்செல்ல வேண்டியவை. ஆமாம், வயந்த மாலையும் கோவலனும் தொட்டுக்கொள்ளக் கூடாதவர்கள். பகை நரம்புகளைப் போன்று விலகி இருக்க வேண்டியவர்கள். மாலையே (வசந்த மாலையே) தொட்டுக்கொள்வது முறையா? என்று கேட்கின்றாள் மாதவி.

'உயிர்ப்புறத்தாய் நீயாகில் உள்ளாற்றா வேந்தன் எயிற்புறத்து வேந்தனோ டென்னாதி மாலை' என வரும் இரண்டாம் பாடலின் அடிகள் இங்குக் கூறப்படும் மாலை வயந்தமாலையே என்பதனை இன்னும் தெளிவாகக் காட்டுகின்றன. உள்ளாற்றா வேந்தன் மாதவி. எயிற்புறத்து வேந்தன் கோவலன். உயிர்ப்புறத்தே முற்றியுள்ளது மாலை. மாலையே எயிற்புறத்து வேந்தனுக்கும் (கோவலனுக்கும்) உனக்கும் என்ன தொடர்பு? வயந்தமாலையே உனக்கும் கோவலனுக்கும் என்ன உறவு? என்று மாதவி கேட்பது புரிகிறதா?

உள்ளாற்றாது தவிப்பவனும் வேந்தன்; எயிற்புறத்தில் முற்றியிருப்பவனும் வேந்தன் என்று கூறப்படுகின்றது. ஆனால் உயிர்ப்புறத்தே (உயிரைச் சூழ்ந்து) வந்து நிற்கும் மாலையை வேந்தன் என்று கூறவில்லை. உள்ளாற்றா வேந்தனும் (மாதவியும்) எயிற்புறத்து வேந்தனும் (கோவலனும்) ஒத்த தகுதியுடையவர்களாகக் கூறப்படுகின்றனர்.

ஆனால் மாலையோ அவ்வாறு கூறப்படவில்லை. எயிற்புறத்து வேந்தனுக்குத் துணையாக வரும் கூலிப்படைத் தலைவனை வேந்தன் என்று சொல்ல முடியுமா? ஊதியம் பெற்று வாழும் வயந்தமாலையை மாதவியால் வேந்தன் என்று கூறமுடியவில்லை. உண்மையில் மாதவி மாலைக் காலத்தைப் பற்றி - மாலைக் காலம் கொடுக்குந் துயரைப் பற்றித்தான் பாடினாள் என்றால் மாலையையும் அவள் வேந்தனாகவே உருவகப் படுத்தி இருப்பாள். ஆனால் அவள் வயந்தமாலையை அல்லவா பாடுகின்றாள். தன்னிடம் ஊதியம் பெறும் வயந்தமாலையை எவ்வாறு வேந்தனாக உருவகப்படுத்த மனம் வரும்? மாலையை அவ்வாறு வேந்தனாக உருவகப்படுத்தாமையே மாதவி வயந்தமாலையைத்தான் குறித்துப் பாடுகின்றாள் என்பதைத் தெளிவாக்கி விடுகின்றது.

மாலை நீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந்தது

என வரும் மூன்றாம் பாடலின் அடிகள் இக்கருத்தை இன்னும் நன்கு துலக்குகின்றன. மாலை என்ற சொல்லுக்கு மயக்கம் என்றும் பொருள் உண்டு. நீ மயக்குதலில் வல்லை. மணந்தவரோ மயங்குதலில் எளியர். இவ்வாறாயின் ஞாலம் நல்கூர்தல் ஒருதலை என்கிறாள் மாதவி. மாலை நீ என்றால் - மணந்தார் அவர் என்றால் என்னும்போதே மாலையின் வன்மையும் மணந்தாரின் மென்மையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டு விடுகின்றன.

மாதவி பாடும் கானல்வரிப் பாடல்களில் மூன்று துறைகள் தாம் முன்னிறுத்திப் பாடியனவாகவும் முன்னிலை வாய்பாட்டிலும் அமைந்துள்ளன. பொழுது கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தல் என்னும் துறையும், இயற்படமொழிதல் என்னும் துறையும்கூட முன்னிலை வாய்பாட்டில் அமைந்தனவே. எனினும் அவை ஒன்றை அல்லது ஒருவரை முன்னிறுத்திப் பாடியன அல்ல. முன்னிறுத்திப் பாடியன காமமிக்க கழிபடர் கிளவியும், தலைவி மாலைப் பொழுது கண்டு கூறுதலும் ஆகிய மூன்றும்தாம் முன்னிறுத்திப் பாடியனவாகவும், முன்னிலை வாய்பாட்டில் அமைந்தனவாகவும் உள்ளன. முதல் துறையில் கடலோதம் முன்னிறுத்திப் பாடப்பட்டு வயந்தமாலையைக் குறிக்கின்றது. இரண்டாவதில் குருகு முன்னிறுத்திப் பாடப்பட்டு வயந்தமாலையைக் குறிக்கின்றது. மூன்றாவதில் மாலை முன்னிறுத்திப் பாடப்பட்டு வயந்தமாலையைக் குறிக்கின்றது. ஆகக் கடலோதம், குருகு, மாலை ஆகியன முன்னிறுத்திப் பாடப்படுவதனாலும் அப்பாடலுள் பொதிந்துள்ள செய்திகளாலும் இம்மூன்றும் வயந்தமாலையை உணர்த்தும் குறியீடுகளாகவே கூறப்படுகின்றன என்பது தெளிவுறுகின்றது.

மாதவி தன்வயமிழந்தும் தாங்கொணாத் துயரொடும் பாடிய மாலைப் பொழுது கண்டிரங்குதல் என்னும் துறைப்பாடலைக் கேட்ட



பிறகும் கோவலன்பால் எந்த மாற்றமும் ஏற்படவில்லைபோலும். தன்னுடைய நம்பிக்கைகள் எல்லாம் அழிந்து சிதறிய நிலையின் உச்சத்திலே மாதவி நின்றுகொண்டிருக்கின்றாள். துயரக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் தன்னைக் காப்பாற்றத் துரும்பனைய அன்பையேனும் வெளிப்படுத்த மாட்டானா? என்று அவன் முகத்தையே முற்று கையிட்டிருந்த அவளுடைய கண்களில் ஒளி குன்றியதேயன்றி உருப்படியான பலன் ஒன்றும் கிட்டவில்லை. சிறிய மூரல், ஒரு கருத்திணக்கக் குறிப்பு - எதனையும் கோவலன் வெளிப்படுத்தவில்லை. எல்லாம் முடிந்துவிட்டது. இனிமுடிவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையில் திடீரென்று ஒரு மின்னல் கீற்று அவள் மனத்தில் தோன்றுகின்றது.

ஆற்றுவரிக்குப் பின்னர்க் கோவலன் பாடிய முதல் பாடல் நினைவிலே வந்து மோதுகின்றது. 'கரியமலர் நெடுங்கண் காரிகை முன் கடல் தெய்வம் காட்டிக் காட்டி அரியசூள் பொய்த்தார் அறனிலர்' என்ற பாடல் அடிகள் மீண்டும் மீண்டும் ஒலிக்கின்றன. இப்பாடல் வரி அவளுக்கு வேறொரு நினைவையும் தோற்றுவிக்கின்றது. தானும் அவனும் புகார்க் கடற்கரையில் சந்தித்துக்கொண்டபோது இப்படித்தானே அவன் சூளுரைத்தான். கடல் தெய்வத்தை காட்டிக் காட்டியல்லவா உறுதிமொழி கூறினான். இன்றோ அவ்வுறுதிமொழிகள் அறுதிமொழிகள் ஆகிவிட்டனவே. சூளுரை பொய்த்ததனால் கடல் தெய்வம் அவனுக்குக் கடுந் தண்டம் வழங்குமோ? ஐயோ அத்தண்டத்தை அவன் எவ்வாறு தாங்குவான்?

அல்லலைக் கொடுத்தவன் அவதியுறட்டும் என்று எண்ணும் கீழ்மை இயல்பு மாதவியிடம் இல்லை. அவள் உள்ளம் பேருள்ளம், அப் பேருள்ளம் 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்' என்று கூறும் வானளாவிய உயர்ச்சியை உடையது. இந்த உள்ளத்தில் பழிவாங்கும் எண்ணம் எவ்வாறு வரும்? தன் வாழ்வு பாழானாலும் சரி, அவன் பாழ்பட்டுப் போகக்கூடாது என்ற முடிவுக்கு வருகிறாள். அவன் தனக்குக் காதலன் மட்டுமல்லன்; தன் மகளுக்குத் தந்தையும் அல்லவா? ஆகவே மாழ்கி நின்ற தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு சமநிலைக்கு வந்துவிடுகின்றாள். இப்பொழுது அவள் மனத்தில் வருத்தமுமில்லை; பகையுமில்லை; அந்தச் சமநிலை உள்ளம் 'வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறுதல்' என்னும் துறையமைந்த பாடலைப் பாடுகின்றது. இதுதான் முடிவுப் பாடல் என்பது மட்டுமில்லை; அவள் ஒரு முடிவுக்கு வந்து பாடிய பாடலும்கூட என்பதை இப்பாடலில் நீங்கள் காணலாம்.

தீத்துழைஇ வந்தவிச் செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத் துயரெஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வநின் மலரடி வணங்குதும். 7 : 51

(தீயைத் துழாவிக்கொண்டு வந்த துன்பம் தரும் இம்மாலைப் பொழுதில் பூக்கள் கமழும் கானலில் நாம் ஆராயாது ஏற்றுக்கொண்ட, நன்மை தரும் சொற்களால் அமைந்த, என் தலைவன் (கோவலன்) கூறிய பொய்ச் சூளுரையைப் பொறுத்துக்கொள்க என்று கரியகடல் தெய்வமே நின் மலரடிகளை வணங்குகின்றோம்.)

தலைமகன் சிறைப்புறமாக நிற்கின்றானாம், துறையமைப்பின் படி. மாதவியின் அகத்தே இருந்த கோவலன் புறமாகி நிற்கின்றான். இரு வருக்கும் இடையே நின்று பிரிப்பதெது? சிறை. (வேலி) ஆம்! வேலிக்கு அப்பாலே நிற்கிறான் கோவலன். அந்த வேலி யாராக இருக்க முடியும். வயந்தமாலை என்ற வேலிதான். தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே சிறை (வேலி) குறுக்கிட்டுத் தடுத்து நின்றாற்போல, மாதவிக்கும் கோவலனுக்கும் இடையே வயந்தமாலை தடுத்து நிற்கின்றாள். அதனால் தான் அவன் புறத்தானாகி விட்டான் என்பதை இத்துறையைத் தேர்ந் தெடுத்துப் பாடுவதிலும் மாதவி வெளிப்படுத்தி விடுகின்றாள். அவன் புறமாகிப் போனாலும் தான் புறமாகிப் போகவில்லை என்பதை இப் பாடலில் தெளிவாக எடுத்துக் கூறுகின்றாள்.

என் தலைவர் கூறிய பொய்ச் சூளைப் பொறுத்துக் கொள்க என்று கூறியதும் அச்சொற்கள் கோவலனின் முகத்தில் அறைந்தாற் போன்றிருந் திருக்கவேண்டும். தன்னலத்தைப் பெரிதென்று கருதாமல் கோவலன் நலத்தையே பெரிது என்று கருதி மாதவி கருங்கடல் தெய்வத்திடம் வேண்டுவது அவன் மனத்தை நெகிழச் செய்திருக்க வேண்டும். என் றாலும் தன் கருத்திற்கு எதிர்க்கருத்தை எடுத்துக் மொழிகின்றாளே என்ற எரிச்சல் அவனைவிட்டு அகலவில்லை. யாராயினும் சரி; தன்னொடு உடன்பட்டுவருவதைத்தான் விரும்புவான் கோவலன். இதனைத்தான் கோவலன் வாய்பாடு என்ற பெயரால் முன்னரே குறிப்பிட்டேன். விருப்பு; தடைவந்தால் வெறுப்பு. இதுதான் கோவலன் வாய்பாடு.

## கானல் வரியின் புறவாயிலில்...

**மா**தவியின் நெஞ்சுருக்கும் பாடல்கள் கோவலனைப் பெரிதும் தளரச் செய்துவிட்டன. என்றாலும் தன் விருப்பத்திற்கு எதிர்ப்பு என்பதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மறுப்பை மட்டுமே மாதவி வெளிப்படுத்தியிருந்தால் எப்பொழுதோ அவன் அந்த இடத்தை விட்டுப் போயிருப்பான். கல்லும் கரைய அவள் பாடிய காதற்பாடல் கள்தாம் ஓடும் கால்களைச் சிறிதே தளைத்துள்ளன.

இங்கே மாதவி யாரோ ஒருவனை மனத்தில் எண்ணிப் பாடியதாகக் கோவலன் கருதினான் என்று பலரும் பேசியும் எழுதியும் வருகின்றனர். இஃது உண்மையன்று. கோவலன் மாதவியை வெறுத்துப் பேசுவது உண்மைதான். பொய்த்தி; உண்மை பேசாதவள் என்றெல்லாம் ஏசுவதும் உண்மைதான். ஆனால் அவன் மாதவியைக் கற்பிலி என்று பேசிய தில்லை.

'கானல்வரி யான் பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்' என்றுதான் பேசுகின்றானே தவிர அவள் ஒருவன் மேல் மனம் வைத்துப் பாடினாள் என்று கூற வில்லை. ஒன்றின்மேல் மனம் வைப்பதற்கும் ஒருவன் மேல் மனம் வைப்பதற்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். கோவலன் பழிசொல்ல அஞ்சாதவன்தான். ஆனாலும் 'தான் ஒருவன்மேல் மனம் வைத்துப் பாடினாள்' என்று சொல்ல அவ னுக்கே துணிவில்லை என்றால் மாதவியின் கற்பு மேம்பாடு எத்தகையது என்பதை அறியலாம். அதனோடு அவள் வேறு ஒருவன் மேல் மனம் வைத்துப் பாடவில்லை என்பதையும் அறியலாம்.

'கானல் வரி யான் பாட' என்று கோவலன், தான் பாடியது கானல் வரித்துறைப் பாடல்களேயன்றி வேறொன்றும் இல்லை என்று பேசுகின் றான். இது உண்மையா? உறுதியாக இது உண்மையில்லை. இவன் மனத் தில் கள்ளம் குடிகொண்டிருந்தது என்பதை ஆற்றுவரிப் பாடலே தெளி வாக எடுத்துக் காட்டுகின்றது. பின்னர் அவன் பாடிய எல்லாப் பாடல் களிலும் உள்ளுறை பொருளாக அவன் கள்ளம் வெளிப்படவே செய்தது. என்றாலும் கோவலன் கூறுகின்றான் 'கானல் வரி யான் பாட' என்று.

ஒரு பொய்யன்தான் மற்றொருவனைப் பொய்யன் என்று வாய்

கூசாமற் கூறுவான். ஒரு பரத்தைதான் குலமகளை அஞ்சாமல் பரத்தை என்று கூறுவாள். குலமகள், ஒருத்தியைப் பரத்தை என்றோ நடுநிலையாளன் மற்றவனைப் பார்த்துப் பொய்யன் என்றோ ஆத்திரப்பட்டுக் கூறிவிடமாட்டார்கள். 'கானல்வரி யான் பாட' என்று சொன்னதே முதற் பொய்; மாதவியாற்றான் எல்லாப் பொருள்களையும் இழந்தேன் என்று கண்ணகியிடம் கூறுவது பொய் மேல் எழுப்பப்பட்ட மற்றொரு பொய் என்பதனை முன்னரே கண்டோம்.

இனித்தானொன்றின் மேல் மனம் வைத்துப் பாடினாள் என்கிறானே கோவலன் அந்த ஒன்று எது? ஒன்று என்பது அஃறிணை. அது ஒருவன் என உயர்திணையைக் குறிக்க முடியாது. அஃறிணையாகத்தான் இருக்க வேண்டும். அந்த ஒன்று கோவலன் வெளிப்படுத்திய வயந்தமாலைமேற் கொண்ட ஆசைக்கு அவள் மறுப்புரைத்ததுதான். நான் ஒன்றின்மேல் மனம் வைத்துப் பாடாதபொழுது, இவள் ஏன் தான் ஒன்றின் மேல் மனம் வைத்துப் பாடவேண்டும்? இல்லாத ஒன்றை இவள் இட்டுக்கட்டிப் பாடியதனால் இவள் மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாளே என்கிறான் கோவலன். குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாமே. அது போலக் கோவலன் மற்றொருத்தியை விரும்பும் குறிப்பைக் கானல்வரிப் பாடலில் வெளிப்படுத்திவிட்டு அதற்கு அவள் விடையிறுத்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் மாதவியைப் பொய்யள் என்கிறான். ஆக 'விருப்பு; அதற்குத் தடை வந்தால் வெறுப்பு' என்ற கோவலன் வாய்பாட்டைத்தான் இங்கே பார்க்கிறோம்.

தான் ஒன்றைப் பாட அதனை அவள் வேறொன்றாகக் கருதிப் பாட அதனால் சினங்கொண்ட கோவலன் அதற்காக மாதவியைப் பிரிந்து செல்லவேண்டும் என்று எண்ணவில்லை. இந்த நிலையிலும் அவனிடம் இருந்த சினம் அளவான சினமேயன்றி அளவிறந்த சினம் அன்று. தன்னுடைய உள்ளக்குறிப்பை மறுத்துப் பேசியதனால் கோவலன் மாதவி மீது சினம் கொண்டது உண்மைதான். ஆனால் அவள் பாடிய மாலைக்காலப் பாடல்களைக் கேட்டபின் அவனுடைய சினம் ஓரளவு குறைந்துபோய் விட்டது. தன்னுடைய காதற் குறிப்பைக் கண்டு ஊடிப்பாடியவள் இப்பொழுது உருகிப்பாடுகின்றாளே இது உண்மைதானா? என்று கண்டறிய ஒரு சோதனையை மேற்கொள்கின்றான் கோவலன். அது என்ன சோதனை?

### கோவலன் வைத்த சோதனை

ஊடலை வெளிப்படுத்தினால் கோவலனுக்குப் பிடிக்காது என்பதை முன்பே கண்டோம். ஊடல் என்பது தன்னைக் குற்றம் சுமத்துவது. அவ்வாறு பிறர் குற்றம் சுமத்துவதைக் கோவலனின் தன்முனைப்பு விரும்புவதில்லை. ஊடலுக்கு எதிரி கோவலன் என்பது தெளிவு. இவள் ஊடல் கொண்டிருக்கின்றாளா? இல்லையா என்பதைத் தெரிந்து



கொள்ளக் கோவலன் மேற்கொள்ளும் விரகு இதுதான்.

வெண்கால் அமளிமிசை அமைதியாக அமர்ந்திருந்த கோவலன் திடீரென்று எழுந்து 'பொழுது ஈங்குக் கழிந்தது; ஆகலின் எழுதும்' என்று கூறுகின்றான். 'காலம் கடந்துவிட்டது; ஆகவே இல்லம் ஏகுவோம் வா' என்று கோவலன் அழைத்ததை மாதவி உடனே பற்றிக்கொண்டு எழுந்து செல்லவில்லை. அவள் எழுந்து சென்றிருந்தால் சிலப்பதிகாரக் கதை கானல்வரியோடு முடிந்து போயிருக்கும். கதை இங்கு முடியக்கூடாதே என்பதற்காக மாதவியை உடனெழுந்து செல்லவிடாமல் இளங்கோவடிகள் தடுத்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். உண்மையில் யாழிசைமேல் வைத்து ஊழ்வினை உருத்துவரவில்லை. **அவள் உடன் எழாமைதான் கோவலன் பிரிந்து செல்லக் காரணமாக அமைந்துள்ளது.**

மாதவியின் பாடலால் கோவலன் கொண்ட சினம் தணியவே இல்லை என்றும், அதனால்தான் கோவலன் மாதவியைப் பிரிந்தான் என்றும் சிலர் சொல்லக்கூடும். அஃது உண்மையன்று. அவன் சினம் தணியாது இருந்தது உண்மையென்றால், அவன் ஒன்றும் சொல்லாமலோ, நான் போகிறேன் என்றோ சொல்லிப் போயிருப்பான். 'யாம் எழுதும்' என்று தன்மைப்பன்மை வாய்பாட்டாற் கூறியிருக்கமாட்டான். 'யான் எழுகின்றேன்' என்று சொல்லாததிலிருந்தே மாதவியையும் உடனழைத்துச் செல்ல ஆயத்தமாகவே இருந்திருக்கின்றான் என்பது தெளிவு. **அவள் உடன் எழாமையே அவனுக்குப் பெருஞ்சினத்தை உண்டாக்குகின்றது.**

பெருஞ்சினத்தனாக இருக்கின்ற வேளையில் கோவலன் யார் மீதும் எப்பழியையும் அஞ்சாமற் சுமத்துவான் என்பதை முன்னரே கண்டோம். இந்தப் பெருஞ்சினத்தால்தான் மாதவியைத் துறந்து செல்கின்றான். மாதவியின் முடங்கலை மறுத்து மனம்போன படியெல்லாம் பேசுகின்றான். கண்ணகியிடத்திலும் மாதவியைக் கண்டவாறு பேசுவது மட்டுமல்லாமல் அவள் ஒருத்தியே தன்னுடைய பெருஞ்செல்வப் பேரழிவிற்குக் காரணம் என்று நாக்கூசாது வசை பாடுகின்றான். மாதவி தன்னுடன் எழுந்துவர வேண்டும் என்பது கோவலன் விருப்பம். அவ் விருப்பம் மாதவியால் மறுக்கப்படுகின்றது. 'விருப்பு; அதற்குத் தடை வந்தால் வெறுப்பு' என்பது கோவலன் வாய்பாடு அல்லவா? இறுதியில் அவனுடைய வாய்பாடே வெற்றி பெறுகின்றது. அந்த வாய்பாட்டின் முன்னர் அன்பு, இன்பம், மனைவி, மகள் என்பன எல்லாம் எதிர் நிற்க முடியாமல் தோற்கின்றன. கோவலனது பழம்பிறப்பு நிகழ்ச்சியிலிருந்து கானல்வரி வரை உள்ள நிகழ்ச்சியில் 'விருப்பு; அதற்குத் தடை வந்தால் வெறுப்பு' என்பது பெறும் இடம் குறிப்பிடத்தக்கது. அவன் வாழ்க்கையின் போக்கையே மல்லல் பேரியாற்றுப் புணைபோல அடித்துச் செலுத்தியது இவ்வாய்பாடுதான் என்பதை எண்ணினால் குணத்தின் வழிதான் மனிதன் செல்கிறான் என்பது எவ்வளவு பெரிய உண்மை என்பது போதரும்.

'மடல்அவிழ் கானல் கடல்விளை யாட்டினுள்
கோவலன் ஊடக் கூடாது ஏகிய
மாமலர் நெடுங்கண் மாதவி' 8; 14- 16

இப்பாடலில் கோவலன் ஊடியதாகவும் வழக்கமாக ஊடல் நீக்கிக் கூடும் இயல்புள்ள மாதவி கூடாது சென்றதாகவும் கூறப்படுகின்றது. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்ன? மாதவி உடன் எழாமை - அதனால் கோவலன் ஊடல் - மாதவி ஊடல் நீக்கிக் கூடாமை - இவையே பிரிவிற்குக் காரணம் என்பது தானே?

மாடல மறையான் செங்குட்டுவனிடம்

'கானலந் தண்துறைக் கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோடு
ஊடற் காலத்து ஊழ்வினை உருத்துஎழக்
கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்கு' 27: 56-61

இப்பாடலில் வரி நவில் பாணியோடு ஊடற் காலத்து ஊழ்வினை உருத்து எழுந்ததாகக் கூறப்படுகின்றது. ஓடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருவது. பாணியோடு வந்தது எது? ஊடல். ஆக ஊடல் அடிப்படையாகவே ஊழ்வினை எழுந்தது என்கிறார். பாணியால் ஊடல் எழுந்ததாகக் கூறவில்லை.

'பாணியால்' என்று மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு கூறப்படவில்லை. அவ்வாறு கூறியிருந்தாலாவது பாணியே ஊடலுக்குக் காரணம் என்று கூறலாம். பாணியால் ஊடலும், ஊடலால் பிரிவும் நேர்ந்தது என்று கூறமுடியும். ஓடு உருபு வருவதனாலேயே பாணி தனியாகவும் ஊடல் தனியாகவும் எழுந்ததாகவே கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் பிரிவுக்குக் கானற்பாணி காரணம் இல்லை என்பது தெளிவாகும்.

யாழிசைமேல் வைத்து ஊழ்வினை உருத்தது என்பது மெய்யா? உடன் எழாமையால் எழுந்த ஊடலை இடமாகக் கொண்டு ஊழ்வினை உருத்தது என்பது மெய்யா? ஊடல்தான் ஊழ்வினை கால் கொண்ட இடம் என்பது நிகழ்ச்சிகளால் மெய்ப்பிக்கப்படுகின்றது. இது மெய்யென்றால் யாழிசைமேல் வைத்து ஊழ்வினை உருத்தது என்று அடிகள் கூறுவது ஏன்?

மாதவிமேல் எழுந்த ஊடலால் கோவலன் மாதவியைப் பிரிந்தான் என்றால் ஒரு பெண்ணின் ஊடலைத் தணித்து அவளைக்கூட வேண்டும் என்ற அன்புணர்ச்சி சிறிதுமில்லாதவன் என்ற குற்றத்திற்கு ஆளாக நேரும். கோவலன் மேல் எழுந்த ஊடலால்தான் அவனுடன் எழாது மாதவி கோவலனைப் பிரிந்தாள் என்றால் ஊடும் உரிமையைக் கோவலனுக்கே விட்டுக் கொடுத்துவிட்ட மாதவி - அவனோடு ஊடுவதில்லை என்பதில் உறுதியாக இருந்த மாதவி இன்று ஊடியது ஏன்? இந்த அறிவுக் குறைபாடு அவளுக்கு வரலாமா? என்ற கேள்வியும், உணர்ச்சி வயப்



பட்டு அறிவை இழப்பவள் என்ற பழியும் அவளுக்கு வரும். கோவலன் இறப்பும், மாதவி துறவும் நமக்கு மிகுந்த வருத்தத்தைத் தர வேண்டுமானால் அவர்கள் இக்குறைகள் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். குற்றம் புரிந்தவர் துன்புறும் பொழுது நமக்குப் பரிவு ஏற்படுவதில்லை. குற்றம் செய்யாதவர் துன்புறும்போது தான் பரிவு ஏற்படும். இதனால் தான் கோவலன் மாதவி குறைபாட்டை மறைத்து ஊடலால் பிரிந்ததை ஊழ்வினையாற் பிரிந்ததாகக் காட்டித் தலைமக்கள் சுமக்க வேண்டிய பழியை ஊழ்வினை சுமக்குமாறு செய்கின்றார் இளங்கோவடிகள். இளங்கோவடிகள் கையாளும் மிகச் சிறந்த உத்திகளில் இதுவும் ஒன்று.

'பொழுதீங்குக் கழிந்தது ஆகலின் எழுதும்' என்று கோவலன் கூறியது தன் ஏவலாளரை நோக்கித் தானேயன்றி மாதவியை நோக்கியன்று; மேலும் அவன் 'ஏவலாளர் சூழ்தர' எழுந்து செல்லுதலின் இக்கூற்று ஏவலாளரை நோக்கியதே; மாதவியை நோக்கியதன்று எனச் சிலர் கூறலாம். இஃது உண்மையன்று.

'பொழுதீங்குக் கழிந்தது ஆகலின் எழுதும் என்று உடன் எழாது ஏவலாளர் உடன் சூழ்தரக் கோவலன் தான் போனபின்னர்' என வரும் பகுதியில் 'உடன் எழாது' என்பது மாதவி உடன் எழாமையைத்தான் குறித்து நிற்கின்றது. ஆகவே 'எழுதும்' என்று அவன் கூறியது மாதவியை நோக்கியே என்பதும், உடன் மாதவி எழுகின்றாளா என்று பார்த்துப்பின் எழாமையாற் கோபங்கொண்டு தன் ஏவலாளர் உடன்வர எழுந்து சென்றான் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகின்றது. விளங்கவே மாதவியை அவன் பிரிந்து செல்லப் பெருங்காரணமாக அமைந்தது மாதவி உடன் எழாமையால் வந்த சினமே என்பது தெளிவாகும். மாதவியின் ஊடல் கொண்ட மனத்தை மாற்றிக்கூட வேண்டும் என்ற விருப்பமில்லாது ஊடலையே வெறுக்கும் உள்ளத்தினனாய்க் கோவலன் பிரிந்தான் என்பதே சரியான முடிவாக இருக்கமுடியும். மாதவி பாடிய கானல்வரிப் பாடலால் அவன் அவளைப் பிரிந்தான் என்பது பொருத்தமற்றது என்பதை முன்பே கண்டோம்.

மாதவி உடன் எழாமையே கோவலன் பிரிவிற்குக் காரணம் என்பதை எடுத்துக்காட்டும் மற்றெரு ஆதாரத்தையும் பார்ப்போம். மாதவி உடன் எழாமை அவன் நெஞ்சத்தில் ஒரு நீங்காத வடுவாகவே இருக்கின்றது. 'தன்தீது இலள் என்தீது' என்று கோசிகமாணியிடம் கூறிய பிறகும் கூட அந்த வடு மறையவில்லை என்பதை ஒரு செய்தி நமக்கு எடுத்துரைக்கின்றது.

மதுரையில் மாதரியின் வீட்டில் தங்கியிருந்தபோது கோவலன் கண்ணகியை நோக்கிக் கழிந்ததற்கு இரங்கிச் சில கூறுகின்றான். அப்பொழுது கண்ணகியின் ஒரு செயலை வியக்கின்றான் கோவலன். அச்செயல் எது?

'எழுகென எழுந்தாய் என் செய்தனை' 16 : 70

என்று வியக்கின்றான். இவனுக்கு வியப்பு ஏன் வந்தது? 'எழுக' எனச் சொன்னபோது மாதவி எழவில்லை. ஆனால் கண்ணகியோ 'ஏடலர் கோதாய் எழுக' என்றவுடன் எழுந்து வந்துவிட்டாள். மாதவியை வீட்டுக் குத் தான் அழைத்தான்; கண்ணகியை வேற்று நாட்டுக்கு அழைத்தான்; மாதவி மறுத்ததைக் கண்ணகி உடனே உடன்பட்டெழுந்தது அவன் உள்ளத்தில் நெகிழ்ச்சியை மட்டும் உண்டாக்கவில்லை. மாதவி உடன் எழாத நிகழ்ச்சி கோவலன் மனத்தில் வடுவாகவும் பதியுமாறு செய் துள்ளது.

உண்மையிற் புலந்து உடன் எழாது மறுக்க வேண்டியவள் கண் ணகி. அவள் உடனே எழுந்து வந்துவிட்டாள். என்றுமே புலவாத - புலப் பதற்குரிமையில்லாத மாதவி புலந்து உடன் எழாமற் போய்விட்டாள். இந்த உடன் எழாத நிகழ்ச்சியின் உறுத்தல் மனத்துள் மறையாமல் இருந்த தனால்தான் 'எழுகென எழுந்தாய் என் செய்தனை' என்று பாராட்டு கின்றான். இதிலிருந்தும் நாம் அறிந்துகொள்வது என்ன? கோவலனின் பிரிவிற்கு மாதவி உடன் எழாமையே காரணம் என்பதைத்தான்.

### மாதவி வயந்தமாலையை அனுப்பியது ஏன்

இனி, வயந்தமாலையைக் கோவலன் விரும்பியதனை மாதவி வெறுத்தாள் என்றால் கோவலனை அழைத்து வர மாதவி வயந்த மாலையையே அனுப்புவாளா என்றொரு வினா எழுப்பப்படலாம்.

கோவலன் எத்தகைய சினம் உடையவன் என்பதை மாதவி நன்றாக அறிவாள். முன்பொரு முறை அவளை விட்டு அவன் பிரிந்து சென்ற போது அவனை மீண்டும் தன்னில்லத்திற்குக் கொண்டுவர என்ன பாடு பட்டிருக்கின்றாள் என்பதும் அவளுக்குத் தெரியும். அன்று நிகழ்ந்த பிரிவு இயல்பாக நிகழும் ஊடலால் நிகழ்ந்தது. இன்று நிகழ்ந்த பிரிவோ ஒருத் தியை (வயந்தமாலையை) அவன் விரும்பியதனால் எழுந்த ஊடலால் தோன்றிய பிரிவு. முன்னைய பிரிவைவிட இன்றைய பிரிவுக்கான காரணம் கோவலனைச் சினத்தின் உச்சிக்கே கொண்டு செல்லும் இயல்பினது. இந் நிலையில் இரவு வருவான் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை. மறு நாளும் (மாலைவரை) அவன் வரவில்லை. புணர்ச்சியில் மிகுந்த நாட்ட முள்ள கோவலன் இரண்டு நாள்கள் வாராமையே அவன் சினத்தின் எல்லையையும், மனத்தின் உறுதியையும், தெளிவாகக் காட்டிவிட்டன. இந்நிலையில் அவனை யாரால் அழைத்து வரமுடியும்? அவனால் விரும்பப்பட்ட வயந்தமாலையால்தான் அழைத்துவரமுடியும் என்று எண்ணுகிறாள் மாதவி.

தனக்கு அவன் காதலனாக இல்லாவிட்டாலும் மணிமேகலைக்குத் தந்தையாக இருந்தால் போதும் என்று எண்ணினாளோ என்னவோ? இப் பொழுது அவனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டால்



காலப்போக்கில் மாறுதல் நிகழலாம். அந்தக்காலம் வரும்வரைதான் காத்து இருக்கலாம் என்று எண்ணி இருத்தலும்கூடும். அவற்றைப் பின்னர் பார்த்துக் கொள்வோம்; இன்று செய்ய வேண்டியது கோவலனை அழைத்து வருவதுதான். அதனை வயந்தமாலைதான் செய்ய முடியும் என்று கருதுகின்றாள். ஆகவே வயந்தமாலையிடம் முடங்கல் கொடுத்து அனுப்புகின்றாள். தன் வாழ்க்கை பறிபோகக் காரணம் வயந்தமாலையே என்றாலும் அது முற்றும் பறிபோகாமல் இருக்க வயந்தமாலை தான் தேவைப்படுகின்றாள். ஆகவே அவளிடம் முடங்கல் கொடுத்து அனுப் பியது முரண்பட்ட செயலன்று; யானையால் யானை யாத்த செயல் போன்றதாகும்.

### வயந்தமாலை இரண்டகம் செய்தவளே!

கோவலன் பிரிந்து சென்றபிறகு வயந்தமாலை மாதவியுடன்தான் வந்துள்ளாள். ஆனாலும் வீட்டிற்கு வந்த பிறகு மாதவி வயந்தமாலை உறவு அவ்வளவு நன்றாக இல்லை என்பதை ஊகித்தறிய முடிகின்றது. கோவலன் பிரிவினால் வாடிய மாதவிக்கு ஆறுதல்கூறி வயந்த மாலை ஒரு சொல்கூடக் கூறவில்லை. மதுரகீதம்பாடி அவள் மயங்கிய போது கூட வயந்தமாலை அவள் அருகிலே இல்லை.

'மதுர கீதம் பாடினள் மயங்கி' 8 : 24

'புறத்தொரு பாணியில் பூங்கொடி மயங்கி' 8 : 44

என இரண்டிடங்களில் பிரிவுத் துயர் பொறாது பாடி மயங்கிய நிகழ்ச்சி கூறப்படுகின்றது. இவ்விடங்களில் எல்லாம் வயந்த மாலையைக் காணோம். ஏன்? தன் தலைவியின் துயரம் கண்டு ஆற்றுவது அவள் கடமையல்லவா? இந்தக் கடமையை அவள் செய்யாது புறத்தே போகக் காரணம் என்ன? இல்லம் திரும்பிய பின் மாதவிக்கும் வயந்தமாலைக்கும் ஏதேனும் கருத்து மோதல் நிகழ்ந்ததா? நிகழ்ந்திருக்கலாம் என்றுதான் தோன்றுகின்றது.

தாழைமடலில் பித்திகைக் கொழுமுகையைச் செம்பஞ்சுக் குழம் பிலே தோய்த்துமடல் எழுதுகின்றாள் மாதவி கோவலனுக்கு. அப்பொழு தும் வயந்தமாலை அங்கே இல்லை. பிறகு மாதவி

'வயந்த மாலை வருகெனக் கூஉய்' 8 : 69

ஆள் விட்டுக் கூப்பிட்டு முடங்கலைக் கொடுத்துனுப்புகின்றாள். இங்கேயெல்லாம் வயந்தமாலை தலைமறைவாகி மாதவியின் கண் படாது மறைந்திருந்த காரணம் என்ன? இதுவும் ஏதோ ஒன்று நடந்திருப்பதனை மறைவாகச் சுட்டிக்காட்டவே செய்கின்றது.

முடங்கலை எடுத்துச் சென்ற வயந்தமாலை கோவலனிடம் கொடுக்கிறாள். அவன் ஒரு வசைபுராணம் பாடி முடிக்கின்றான். இங்கே வயந்தமாலை வாய் திறக்கவே இல்லை. அவன் அம்முடங்கலை மறுத்து

விடுகின்றான். அப்பொழுது வயந்தமாலையின் நிலையை இளங்கோ வடிகள்.

'வாடிய உள்ளத்து வயந்த மாலை' 8 : 113

என்று குறிப்பிடுகின்றார். அவள் வாட்டம் எதனால் விளைந்தது? மூன்று காரணங்களால் வாட்டம் தோன்றியிருக்கலாம்.

1. மாதவியின் விருப்பத்தை நிறைவேற்றக் கோவலனை அழைத்து வர முடியவில்லையே என்பது.

2. மாதவிக்குத் தவறிழைத்துவிட்டோமே என்பது.

3. தனக்கும் பயனின்றி மாதவிக்கும் பயனின்றிக் கோவலன் போய் விட்டானே என்பது.

முதற்காரணத்தால் அவள் முகத்தில் வாட்டம் வந்திருக்குமே யானால் கோவலனை அமைதிப்படுத்தி அழைத்துவர அவள் ஏதாவது செய்திருக்கவேண்டும். அவள் அப்படியொன்றும் செய்யவில்லை என்பது காப்பியத்திலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. இழவுச் செய்தியா யினும் சரி; திருமணச் செய்தியாயினும் சரி; எந்த விதமான உணர்ச்சியும் இன்றிக் கடிதத்தைக் கொடுத்துச் செல்லும் ஓர் அஞ்சற்காரரைப்போல வயந்தமாலை செயல்படுகிறாள். இப்படிச் செயல்பட்டால் நல்ல தோழி யாகவோ - நல்ல பணிப்பெண்ணாகவோ அவள் இருக்க முடியுமா? முடங்கல் கொண்டுசென்றதைத் தவிர அவள் ஏதும் வாய்திறந்து பரிந்து பேசாமையால் அவள் உள்ளத்திலும் வெறுப்போ சினமோ இருந்துள் ளது என்பதை ஊகித்தறியலாம். ஆகவே மாதவி விருப்பத்தை நிறை வேற்றக் கோவலனை அழைத்துவர முடியவில்லை என்ற காரணத்தி னால் வயந்தமாலை வாடிய உள்ளத்தோடிருந்தாள் என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இனி இரண்டாவது காரணமாகிய மாதவிக்குத் தவறிழைத்துவிட்டோமே என்று வாடிய உள்ளத்தோடு அவள் இருந் திருக்கலாம் என்றும் சொல்லமுடியவில்லை. அப்படியொரு வருத்தம் அவளுக்கு இருந்திருக்குமானால் கோவலன் முடங்கல் மறுத்த செய் தியைக் கூறும் பொழுது அதனை வெளிப்படுத்தியிருக்கலாம். அப்படி யொன்றும் அவள் வெளிப்படுத்தவில்லை.

'மாலை வாரார் ஆயினும் மாணிழை
காலை காண்குவம்' 8 : 115, 116

என்ற ஆறுதல் வார்த்தைகளை வயந்தமாலை கூறியிருந்தாலாவது இக் காரணத்தை உடன்படலாம். ஆனால் இவ்வாறுதல் மொழிகளை மாதவி தான் வயந்தமாலையிடம் கூறுகின்றாள். 'வயந்தமாலை என்னைப் போலவே நீயும் பிரிவுத் துயரத்தால் வாடியிருக்கின்றாய். மாலை வர வில்லை என்றாலும் நாளைக் காலை அவரைக் காண்போம் என்ற நம்பிக்கையோடிரு' என்று மாதவிதான் அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். மாதவி தன் உரிமையை வயந்தமாலையிடம் விட்டுக்கொடுத்துவிட்டாள்



என்பதற்கு இத்தொடர் ஒரு நல்ல சாட்சியாகத் திகழ்கின்றது. ஆகவே வயந்தமாலை மாதவிக்குத் தவறிழைத்து விட்டதற்கு வருந்தினாள் என்பதும் பொருத்தமற்றதாக உள்ளது.

இனி மூன்றாவது காரணாக வருவது,

'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்
கெனக்கு மாகாது என்னைக்கு முதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் என் மாமைக் கவினே'

என்ற குறுந்தொகைத் தலைவியைப்போலக் கோவலன் தனக்கும் பயன் படாமல் மாதவிக்கும் பயன்படாமற் போனது மட்டுமல்லாமல் மாத விக்கு இரண்டகம் நினைத்தேன் என்ற பழியையும் அல்லவா வாங்கித் தந்துவிட்டது என்ற எண்ணந்தான் அவளை வாட்டியிருக்க வேண்டும். இதுவரையிலும் இழப்பு மாதவிக்கு மட்டுமே என்றிருந்த நிலைமாறி அவ்விழப்பு தனக்கும் வந்துவிடுமோ என்ற ஐயம் வயந்தமாலையைப் பற்றிக் கொண்டுவிட்டது. இவ்வையம் உண்மையானதாக மாறிவிட் டால்...? இந்த வினா அவள் உள்ளத்தை வருத்துவது இயல்புதானே! இதனைத்தான் இளங்கோவடிகள் 'வாடிய உள்ளத்து வயந்தமாலை' என் கின்றார். வயந்தமாலையின் வாடிய உள்ளத்தைக் கண்ட மாதவி, மணிமேகலைக்குத் தந்தை என்று கோவலன் இருந்தால் போதும் என்ற தன் முடிவுக்கு ஏற்ப வயந்தமாலை மாட்டுப் பேரிரக்கம் கொண்டு 'மாலை வரவில்லை என்றாலும் காலைகாண்போம், நம்பிக்கை இழ வாதே' என்று ஆறுதல் கூறுகின்றாள்.

கடற்கரையிலிருந்து பிரிந்து வந்த பின்னர் மாதவிக்கும் வயந்த மாலைக்கும் ஏதேனும் கருத்துமோதல் நிகழ்ந்திருக்கலாம் என்று கண் டோம். அதுபோலவே முடங்கலைத் திருப்பிக் கொணர்ந்த பிறகும் மாத விக்கும் வயந்தமாலைக்கும் ஏதேனும் மோதல் நடைபெற்றும் இருக்க லாம். இதனை வயந்தமாலை வடிவில் வந்த வனசாரிணியின் கூற்றி லிருந்து அறியமுடிகின்றது.

வயந்த மாலை - கோவலன் உறவை மாதவி ஒப்புக்கொண்ட பின் னரும் கோவலன் மாதவி வீட்டிற்கு வாராமை ஓர் ஐயத்தைத் தோற்றுவித் திருக்கக்கூடும். வயந்தமாலை மாதவியின் முடங்கலைக் கோவலனிடம் கொண்டுசென்றபோது அவர்களுக்குள் என்ன உரையாடல் நடந்தது என்பது மாதவிக்குத் தெரியாது. தனக்குத் துணையாகப் பேசினாளா? பகையாகப் பேசினாளா என்பதையெல்லாம் அறியமாட்டாள். மாதவி யின் ஒரே நம்பிக்கை வயந்தமாலை சென்று அழைத்தால் கோவலன் வந்துவிடுவான் என்பது. ஆனால் வயந்த மாலையோ வெறுங்கையோடு வருகின்றாள். கோவலன் முடங்கலை மறுத்த செய்தியைக் கூறுகின்றாள்.

வயந்தமாலை கோவலனைக் கண்டு பேசித் 'தனிக்குடித்தனம்' நடத்த வழி செய்துவிட்டாள் போலும். அதனால்தான் வயந்தமாலைபால் விருப்ப மிருந்தும் கோவலன் வரவில்லை என்று மாதவி எண்ணியும் இருக்க லாம். இந்த எண்ணம் வயந்தமாலை மீது வெறுப்பாக மாறியும் இருக் கலாம். ஆனாலும் அப்பொழுது இவற்றையெல்லாம் வெளிப்படுத்த வில்லை அவள். இந்த அனுமானத்திற்கெல்லாம் இசைவானதாகவே வனசாரிணியின் கூற்று அமைந்துள்ளது.

'வாச மாலையின் எழுதிய மாற்றம்
தீதிலேன் பிழைமொழி செப்பினை யாதலின்
கோவலன் செய்தான் கொடுமைஎன் றென்முன்
மாதவி மயங்கி வான்துயர் உற்று
மேலோர் ஆயினும் நூலோர் ஆயினும்
பால்வகை தெரிந்த பகுதியோர் ஆயினும்
பிணிஎனக் கொண்டு பிறக்கிட் டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம் என
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத் துதிர்த்து வெண்ணிலாத் திகழும்
தண்முத் தொருகாழ்த் தன்கையாற் பரிந்து
துனியுற் றென்னையும் துறந்தனள்' 11 : 176 - 187

வயந்தமாலை வந்து கூறிய செய்தியை மாதவி நம்பவில்லை என்று தெரிகின்றது. 'தீதிலேன்: பிழைமொழி செப்பினாய்' என்பதிலி ருந்தே வயந்தமாலை தொடர்ந்து தனக்கு இரண்டகம் செய்கின்றாள் என எண்ணிக்கொண்டிருக்கின்றாள் என்பதும் தெரிகின்றது. இங்கு வன சாரிணி கூறும் செய்திகள் அனைத்தும் முடங்கலை மறுத்த கோவலனிட மிருந்து மீண்டு வந்தவுடன் வயந்தமாலையிடம் மாதவி கூறியவை அல்ல. பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத்தான் வனசாரிணி கூறுகின்றாள். இதனை நாம் தெளிவுக்காக இவ்வாறு நிரல்படுத்திக் கொள்ளலாம்.

1. வயந்தமாலை கோவலன் முடங்கல் மறுத்த செய்தியை மாதவி யிடம் கூறுகின்றாள்.

2. அதனைக் கேட்ட மாதவி 'மாலை வாரார் ஆயினும் காலை காண் போம்' என்கின்றாள்.

3. அதன் பின்னர் இரண்டொரு நாளில் கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரை சென்ற செய்தி வெளிப்படுகின்றது.

4. இதன் பின்னரே வயந்தமாலை கோவலனிடம் தன் முடங்கலைக் கொண்டுசென்றபோது பிழை மொழி செப்பியுள்ளாள் என்ற ஐயப் பாட்டை வெளிப்படுத்தி வயந்தமாலையிடம் வினவுகின்றாள்.

5. இதன் விளைவு வயந்தமாலை மீதும் கணிகை வாழ்வின் மீதும் வெறுப்பாக வெளிப்படுகின்றது.



6. இறுதியாக வயந்தமாலையைத் துனியுற்றுத் துறக்கின்றாள்.

யான் தீது இலேன்: நீதான் திரித்துப் பேசிக் கோவலன் மனத்தைக் கெடுத்துவிட்டாய் என்று வயந்தமாலையிடம் கூறியதோடு அமைந்து விடவில்லை மாதவி. கோவலன் செய்த கொடுமைக்கெல்லாம் நீயே காரணம் என்று வயந்தமாலை மீது குற்றமும் சுமத்துகிறாள். கணிகையர் வாழ்க்கை கடைப்பட்ட வாழ்க்கையே என்று கூறிக் கண்ணீர் சொரிந்து அணிந்திருந்த முத்துமாலையை அறுத்து வீசி வயந்தமாலை மீது சினங் கொண்டு வெளியேற்றி விட்டாள். 'துனியுற்றுத் துறந்தாள்' என்பதி லிருந்தே வயந்தமாலை மாதவிக்கு இரண்டகம் எண்ணியவளே என்பதனைத் தெளிவாக அறியலாம்.

## சில தடைகளும் விடைகளும்

கானல்வரியில் கோவலனால் சுட்டிக்காட்டப்பெறுபவள் வயந்த மாலையே என்றால் மாதவியைப் பிரிந்து பின்னர்க் கோவலன் வயந்த மாலையுடன் வாழாது கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை சென்றது ஏன்? இவ்வாறு சென்றதிலிருந்தே கோவலனுக்கு வயந்தமாலை பால் மயக்கம் இல்லை என்பது தெளிவாகிறது அல்லவா? என்று சிலர் கேட்கக்கூடும்.

வயந்தமாலையொடு மாதவி வீட்டில் வாழ்வது என்பது வேறு; தனியே வாழ்வது என்பது வேறு. வயந்தமாலையொடு 'தனிக் குடித்தனம்' நடத்த வேண்டும் என்றால் அதற்குப் பொருள் தேவை. அந்தப் பொருள் கோவலனிடம் இல்லை. மாதவியை நீங்கி கண்ணகி வீடு வந்தபின் அவன் வாழ்க்கை கண்ணகியின் காற்சிலம்பைத்தான் நம்பி இருக்கின்றது என்றால் 'தனிக்குடித்தனம்' நடத்த அவன் பொருளுக்கு எங்கே போவான்? இதிலிருந்து மற்றொரு உண்மையையும் நாம் தெரிந்து கொள் கின்றோம். அதாவது கோவலன் மாதவியோடு வாழ்ந்த இறுதிக் காலத் தில் மாதவியின் பொருள் வளத்திலேதான் வாழ்ந்திருக்கின்றான் என்பது தான் அது. இந்நிலையில் 'வயந்த மாலையை நான் தனியே அழைத்துச் சென்று வாழ்வு நடத்துகிறேன், நீ பொருளுதவி செய்' என்று கோவலன் மாதவியைக் கேட்க முடியுமா? மாதவி தன் விருப்பத்திற்கு உடன்பாடு தெரிவித்துவிட்டால் தான் விரும்பிய வயந்தமாலையும் கிடைத்து விடுகின்றாள்; தான் கையிலிருந்து பொருளைச் செலவு செய்யவேண்டிய இன்றியமையாமையும் இல்லை. இதனால்தான் தன்னுடைய 'ஆசையை நிறைவேற்றி வை' என்று மாதவியிடம் கானல் வரிப் பாடல்களில் வற்புறுத்திக் கொண்டேயிருக்கின்றான்; வற்புறுத்தலும், மதுரைக்கு ஓடியதும் உணர்த்துவது என்ன? பொருளிலா வறுமையாளனுக்கு இன்ப உணர்ச்சி இப்படித்தான் அமையும் என்பதைத் தானே? ஆகப் பொருள் இல்லாமையால்தான் வயந்தமாலையோடு வாழ்வு நடத்தாமற் போகின்றானேயன்றி ஆசையில்லாமல் இல்லை என்பது தெளிவாகிறது.

இளங்கோவடிகள் வயந்தமாலை பாத்திரத்தைப் பெரும்பாலும் வெளிப்படையான நிகழ்ச்சிகளால் வரையறுக்காமல் மறைவான நிகழ்ச்சிகளாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டுவதன் வாயிலாகவுமே படைத்துக் காட்டுகின்றார். அவள் நேரிடையாகப் பேசுவது காப்பியத்தில் இல்லை. பிறரால் பேசப்படுவது மிகுதி. இந் நிலையிலும் கதையமைப்பில் வயந்தமாலைக்கு ஒரு தனியிடம் தரு கின்றார் இளங்கோவடிகள். அது காப்பிய வளர்ச்சிக்குத் தேவையில் லாதது என்றாலும்கூட அதனைத் தருகின்றார். வாய்திறந்து பேசாத ஒருத் திக்குக் காப்பியத்தில் இவ்வளவு இடம் தருவது ஏன்?

கோவலனை மயக்கவந்த வனசாரிணி வெளிப்படுத்துவன எல்லாம் வயந்தமாலை பற்றிய செய்திகளே என்பதை அறிவோம். சிலப் பதிகாரக் கதைக்கு வனசாரிணியின் வரவு இன்றியமையாததா? என்றொரு வினாவை எழுப்பனால் என்ன விடை கிடைக்கும்? இல்லை என்ற விடை தான் கிடைக்கும். வனசாரிணி கதையுள் கொண்டு வரப்படுவதனால் தலைமைப்பாத்திரமாகிய கோவலன் மீது குற்றம் சாட்ட வாய்ப்பு ஏற்படுகின்றதேயன்றி அவன் பெருமையை விளக்குவதாக அமைய வில்லை. வனசாரிணி வரவு கதை வளர்ச்சிக்கும் தேவையில்லை. கோவலனின் பெருமைக்கும் துணை செய்யாது என்றறிந்த பின்னும் இளங்கோவடிகள் வனசாரிணி மூலமாக வயந்த மாலையைக் கொண்டு வருவதற்கு ஏதேனும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஏதோ ஒரு கருத்தை இளங்கோவடிகள் இதன் வாயிலாக வெளிப்படுத்த எண்ணு கின்றார். அந்த ஒன்று கோவலனுக்கும் வயந்த மாலைக்கும் தொடர் பிருந்தது என்பதுதானே! இந்தத் தொடர்பும்கூட இங்குச் சுட்டிக்காட்டப் பட்ட வேண்டிய இன்றியமையாமை உடையதன்று. அவன் எத் தனையோ பேரோடு தொடர்புடையவன். வயந்தமாலையொடும் தொடர்புடையவன் என்பதை வெளிப்படுத்துவதனால் என்ன பயன் விளையப்போகிறது? ஒன்றுமில்லை. ஆகவே இவற்றை எல்லாம் மீறிய வேறு ஒரு காரணத்திற்குத்தான் வனசாரிணி வயந்தமாலை உருவத்தில் கொண்டு வரப்படுகின்றாள். அந்த வேறு ஒரு காரணம் எது? கானல்வரிக் குள்ளே அவள் கரந்து நின்று விளையாடுகின்றாள் என்பதுதான் அது. கானல் வரிக்குள்ளே அவள் கரந்து நிற்கிறாள் என்பதைக் காட்டத்தான் வனசாரிணி தன் உருவம் கரந்து வயந்தமாலை வடிவில் வருவதாக இளங் கோவடிகள் காட்டுகின்றார் போலும். அது மட்டுமன்று; வயந்தமாலை பற்றிய பெரும்பாலான செய்திகள் வெளிப்டையாகக் கூறப்படாமல் கரந்த நிலையிலேயே கூறப்படுகின்றன என்பதனையும் எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன்.

இன்னும் சிலர் பெண் பற்றிய சலனம் கோவலன் மனத்தில் இருந்து அகன்றுவிட்டது என்பதைக் காட்டவே வனசாரிணி கொண்டு வரப்படு கின்றாள் என்று கூறக்கூடும். இதுவும் ஒருவலுவான வாதம் அன்று;



கோவலனுக்குப் பெண்பித்து அகன்றுவிட்டது என்பதைக் காட்டுவது தான் வனசாரிணி வருகையின் நோக்கம் என்றால் அவள் ஓர் அழகிய பெண் வடிவம் எடுத்து வந்திருந்தாலே போதும். அவள் வயந்த மாலை வடிவிலே ஏன் வரவேண்டும்? 'நயந்த காதலின் நல்குவான்' என்ற நம்பிக் கையை ஏன் வெளிப்படுத்த வேண்டும்? இதுமட்டுமன்று. கோவலன் பிரி விற்குப் பிறகு நிகழ்ந்த முத்துமாலையை அறுத்தல், வயந்தமாலையைச் சினந்து வெளியேற்றல் போன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் ஏன் இங்குக் கூற வேண்டும்? இவையெல்லாம் கதையின் வளர்ச்சிக்கு மிகவும் வேண்டிய வையா?

கோவலனின் கானல்வரிப்பாடலில் ஒரு பெண் சுட்டிக்காட்டப் படுகின்றாள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவள் கண்ணகியும் இல்லை; மாதவியும் இல்லை. இவ்விருவரும் இல்லையென்றால் அவள் யார்? யாரோ ஒருத்தி என்பதைவிட இளங்கோவடிகள் இலைமறை காயாகவும் இனங்காட்டியும் வெளிப்படுத்துகின்ற வயந்த மாலைதான் கோவலனின் கானல் வரிப்பாட்டுள் மறைந்திருப்பவள் என்று கூறுவதில் தவறும் இல்லை. நமக்கு ஐயத்தைத் தோற்றுவிக்கின்ற காரணங்களை வரிசைப்படுத்திக் காண்போம்.

1. 'வருந்துபு நின்ற வயந்தமாலை' என்ற தொடர்

2. கதை வளர்ச்சிக்குத் தேவையற்ற வனசாரிணியை வயந்தமாலை வடிவிற் கொண்டுவருதல்.

3. 'நயந்த காதலின் நல்குவன்' என்று வனசாரிணி எண்ணுதல்

4. 'தீதிலேன் பிழைமொழி செப்பினாய்' என்று மாதவி வயந்த மாலையைக் கடிந்து கொள்ளுதல்

5. முத்து மாலையை அறுத்தெறிந்து மாதவி வெறுப்புக் காட்டுதல்

6. சினமுற்ற மாதவி வயந்தமாலையை வீட்டை விட்டுத் துரத்துதல்

7. மாதவி முடங்கல் கொண்டுசென்ற வயந்தமாலை வாய்திறந்து பேசாமை.

8. மதுரகீதம் பாடி மாதவி மயங்கிய காலத்தில் எல்லாம் வயந்த மாலை தலைமறைவாக இருத்தல்.

9. வயந்தமாலை வடிவிலிருக்கும் வனசாரிணி விருப்பத்தை மறுக் காமல் பாய்கலைப்பாவை மந்திரத்தைக் கோவலன் பயன்படுத்துதல்.

10. மாதவி பாடிய கானல்வரிப் பாட்டில் 'உள்ளாரோடு உள்ளாய்' தீர்ந்தாய் போல் தீர்ந்திலையால்' என்பதும் கடலோதம் ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுதலும், குருகு, மாலைக்காலம் ஆகியன குறியீடாகப் பயன்படுத்தப் படுதலும்.

இப்பத்துக் காரணங்களும் நமக்கு உணர்த்துவது என்ன? கோவ லன் மாதவி பிரிவிற்கு வயந்தமாலை காரணம் என்பது மட்டுமின்றி;

இப்பிரிவிற்குக் களமாக அமைந்த கானல் வரிப் பாடலுக்குள் மறைந்து நிற்பவளும் அவளே என்பதைத்தானே!

மாதவி வயந்தமாலையைக் கடிந்துகொள்வதும், துனியுற்றுத் துறப்பதும், பிழைமொழி செப்பினாய் என்று குற்றம் சாட்டுவதும் ஆகிய நிகழ்ச்சிகளே கோவலன் பிரிந்து சென்றதற்கு வயந்தமாலைதான் காரணம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவது மட்டுமின்றி மாதவி அத் தெளிவையே கொண்டுள்ளாள் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இத் தெளிவுதான் கானல்வரிக்குள் மறைந்து நின்று கோவலன் மாதவி வாழ்க்கையில் விரிசலை ஏற்படுத்தியவள் வயந்த மாலையே என்பதையும் தெளிவாக்குகிறது.

ஆகக் கானல்வரியின் போக்கு தொடக்கத்திலிருந்தே முரண்பட்டும் மோதியும் செல்வதற்கு வயந்தமாலையே காரணமாக அமைந்துவிட்டாள் என்பது சிலருக்கு வியப்பாகவும் மலைப்பாகவும் இருந்தாலும் அதுதான் உண்மை. கோவலனின் பலவீனமும் வயந்தமாலையின் உடன்பாடும் கானல்வரிப் பாடலில் வேண்டாத விளைவுகளைத் தோற்றுவித்துவிட்டன. அது மட்டும் அன்று; கானல் வரியைக் கண்ணீர் வரியாகவும் அவைதாம் மாற்றின. சிலப்பதிகாரத்தையே கண்ணீர்க் காவியமாக மாற்றியவையும் அவைதாம். யாழிசைமேல் வைத்து ஊழ்வினை உருத்து வந்தது என்பது உலகின் கண்களுக்கு; உற்றுநோக்குவார் கண்களுக்கு யாழிசை யன்று காரணம், மாதவி உடன் எழாமையே என்பது.

கோவலன் பலவீனம் அவனை வயந்தமாலையின் விருப்பத்திலே தள்ளியது. வயந்தமாலை பாற் சென்ற விருப்பத்திற்கு மாதவி தடை எழுப்பினாள். தடை வந்தால் தாங்கொணா வெறுப்புக் கொள்ளும் கோவலனின் குண இயல்பு மாதவியையும் கோவலனையும் பிரித்தது. இதுதான் உண்மை. கானல்வரிப் பாடல் பிரிக்கவில்லை. கானல் வரிப்பாடல் பிரிவுக்கு ஒரு துணைக்காரணமேயன்றி முதற்காரணம் அன்று. முதற் காரணம் 'விருப்பு; தடை வந்தால் வெறுப்பு' என்ற கோவலனின் குண வாய்பாடுதான்.

கானல்வரிப் பாடல் ஒரு சுரங்கம்; அதுவும் இருள்படிந்த சுரங்கம். அச்சுரங்கத்தினுள் என்ன இருக்கின்றது என்பது இன்றுவரை வெளிப்படுத்தப் படாமலேதான் இருந்தது. அவ்விருள் படிந்த சுரங்கத்தின் வாயிலைக் கோவலனின் ஆற்றுவரிப் பாடல் காட்டிய மின்னொளியாற் கண்டு கொண்டோம். வயந்த மாலையின் இயல்பற்ற தன்மை மீண்டும் ஒரு மின் வெட்டாகிச் சுரங்கத்தினுள்ளே அழைத்துச் சென்றது வயந்தமாலையின் வடிவத்திலே வந்த வனசாரிணிதான்; தீப்பந்தத்தைக் கொணர்ந்து கொடுத்து அச்சுரங்க முழுமையும் சுற்றி வர மட்டுமன்று; அச்சுரங்கத்தின் மூலை முடுக்குகளிற்கூட என்ன இருக்கின்றது என்பதைக் கண்டறிய ஒளி வெள்ளம் பாய்ச்சியவள். அச்சுரங்கத்தின் இருளில் முகத்தைத் துணியால் மறைத்துக்கொண்டு நிற்பது யார்? நம் கைகள் முகத்திரையை விலக்கு



கின்றன. மற்றொரு கை தீப்பந்தத்தை முகத்திற்கு நேரே பிடிக்கின்றது. ஆ! இவளா? வயந்த மாலையா? என்று உணர்ச்சியும் வினாவும் ஒருருக் கொண்டு நம் வாயிலிருந்து வெளிப்படுகின்றன.

நான் கண்ட காட்சியை நீங்களும் கண்டால் இன்னும் என்னை விடக் கூர்ந்து நோக்கினால் - உரசி உரசிப் பார்த்து, அலசி அலசித் தேர்ந்து தெளிந்தால் உங்கள் வாயும் ஆ! இவளா? வயந்த மாலையா? என்று கூவுதல் உறுதி.

உரையாசிரியர்களும், சிலம்பு பற்றிப் பேசுகின்றவர்களும், எழுதுகின்றவர்களும் ஒரு 'கருத்துருவை' நம் உள்ளத்திலே ஏற்றி வைத்திருக்கின்றார்கள். அந்த உருவை அழித்துவிடப் பலருக்கு மனம் வருவதில்லை. பழைய இருளிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்குச் சுரங்கத்தினுள் இருப்பது புலப்பட மாட்டாது. பழைய 'கருத்துரு'வைச் சற்றே விலக்கி வைத்துவிட்டுப் புதிய ஒளியைத் தேடுங்கள். புதிய நோக்கில் - உளவியல் நோக்கில் அணுகுங்கள். அதன் முடிவில் ஆ! இவளா? வயந்த மாலையா? என்று நீங்களும் வியந்து மொழிவது என் காதுகளுக்குக்கூடக் கேட்கும்.